இலவசம்*
3 Butter Scotch
இந்த இதழுடன்.

KALKI
9.5.2004
ரூ.6.00

கல்கி




தொண்டர்களுக்கு ‘டானிக்!’

இணைப்பு:

அக்குபங்சர் அ முதல்... மினி கல்கி





PARLE
சுனில் ஆகட்டும் இல்ல சன்னி
அனைவருக்கும் பணத்திற்கான
மதிப்பை தந்திடும், பார்லே-ஜீ
உலகின் மிக அதிகமாக விற்பனையாகும் பிஸ்கட்.
Parle-G
Visit: www.parleproducts.com

சமீபத்தில் காலமான
எழுத்தாளர்கள்
கந்தர்வன்
தி.சா.ராஜு.
ருக்மிணி பார்த்தசாரதி.
ஆகியோரது
சிறுகதைகள்
இந்த இதழில்
அஞ்சலியாக
இடம் பெற்றுள்ளன.



கல்கி
9.5.2004



• பாலகங்கா

பாலகங்கா மீது

"வைகோவுக்கு ஒரு நியாயம்... பாலகங்காவுக்கு வேறு!"

மத்திய சென்னை அதிமுக வேட்பாளர் பாலகங்கா, மற்றும் ஆளும் கட்சிக்காரர்கள் மேல் போடப்பட்ட இரண்டு கிரிமினல் வழக்குகளை அரசு வாபஸ் வாங்கியுள்ளது. பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததற்காகப் போடப்பட்டவை இவை. "நீதித் துறையின் மீது மேலாதிக்கம் செய்ய தமிழக அரசு விரும்புகிறது என்பதையே அரசின் இந்தச் செயல் சொல்லுகிறது" என்கிறார் உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஏ.பி. சூர்யபிரகாசம்.

"நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இரு வழக்குகளையும் தமிழக அரசு வாபஸ் பெற்றது என்பது, அப்பட்டமான அதிகார துஷ்பிரயோகம்; நீதி பரிபாலனத்தின் மேல் செலுத்தும் எதேச்சதிகாரம். அரசு ஆணை வெளியிட்டு 'வாபஸ் பெறுகிறோம்' என்று அறிவிப்பதால் மட்டுமே, ஓர் அரசு வழக்கறிஞர், நீதிமன்றத்தில் வாபஸ் மனு போட வேண்டிய அவசியமில்லை. அரசு வழக்கறிஞர், வழக்கின் சாதக, பாதகங்களை ஆராய்ந்து, சுயேச்சையாக சிந்தித்து இது போன்ற வழக்குகளைத் தொடர்ந்து, நடத்தி, சட்டத்தின் ஆட்சியை நிரூபிக்க வேண்டும்.

"அரசு வழக்கறிஞர் என்பவர் அரசின் கைத்தடி அல்ல என்பதை, 1980ம் ஆண்டு ராஜேந்திர குமார் ஜெயின் வழக்கில் சொல்லியிருக்கிறது உச்ச நீதிமன்றம்.

"அரசு வழக்கறிஞர் வாபஸ் மனு போடுகிறார் என்பதாலேயே, நீதிபதி அவரது வேண்டுகோளை ஏற்று உத்தரவு போட வேண்டுமென்பது கட்டாயமில்லை. வழக்கின் தன்மையை நீதிபதி தராசுத் தட்டில் மதிப்பிட்டு, 'அரசு வழக்கறிஞர் அரசின் கைதுகுழலாக செயல்படுகிறார்' என்று கருதுவாரேயானால், வழக்குகளை முழுமையாக நடத்துங்கள் என்று கூற அவருக்கு உரிமையுண்டு. அவசரமாகவும் அரைவேக்காட்டுத்தனமாகவும் தமிழக அரசு செயல்பட்டிருக்கிறது. கடந்த நான்கு வருடங்களாக இந்த வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அவ்வப்போது தேதி குறிப்பிட்டு தள்ளி வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களில் ஒருவரான பாலகங்கா, மத்திய சென்னை வேட்பாளராக அறிவிக்கப்படுகிறார். இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால், அவரது வேட்பு மனு ஏற்கப்படுவதில் எந்தச் சிக்கலும் கிடையாது என்பதுதான் சட்ட நிலைப்பாடு. அப்படியிருந்தும் அவசர, அவசரமாக வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை தேதிக்கு முன்பாகவே நீதிமன்றத்தில் வாபஸ் மனு தாக்கல் செய்திருக்கிறார் அரசு வழக்கறிஞர். இது நடைமுறைக்கு மாறானது.

"இதேபோன்ற ஒரு வழக்கில், 1986ம் ஆண்டு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பகவதி தலைமையில், ஐந்து நீதிபதிகள் அளித்த ஒரு தீர்ப்பைப் பற்றி குறிப்பிட வேண்டும். பீகாரில் ஜனதாதள தலைமையில் இருந்த கர்ப்பூரி தாக்கூர் அரசு, காங்கிரஸ் முதல்வராக இருந்த ஜெகந்நாத் மிஸ்ரா மீது ஊழல் வழக்கு ஒன்றைப் போட்டது. அதன் பின்னர் ஜெகந்நாத் மிஸ்ரா தேர்தலில் வென்று ஆட்


சிக்கு வந்தார். வந்தவுடன் ஓர் ஆணை போட்டு, நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த ஊழல் வழக்கை வாபஸ் பெற்றார். இப்படி வாபஸ் பெறப்பட்டதை எதிர்த்து, ஷியோ நந்தன் பாஸ்வான் என்பவர் உச்சநீதிமன்றத்துக்குச் சென்றார். அந்த வழக்கில் அரசு வழக்கறிஞரின் செயல்பாட்டைக் கடுமையாகக் கண்டித்தார்கள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள். 'அரசின் கட்டளைக்கு அரசாங்க வழக்கறிஞர் அடி பணிய வேண்டிய கட்டாயமில்லை' என்று தெளிவாகச் சொன்னது உச்சநீதிமன்றம். ஆனால் இங்கே விவகாரம் என்னவென்றால், கட்சி அனுதாபியே அரசு வழக்கறிஞராக நியமிக்கப்படுகிறார். எனவே

ச்சாதாயம் ஏன்?

அவர் சுயேச்சையாகச் சிந்திப்பது என்பதற்கு முகாந்திரமே இல்லை. அரசு வழக்கறிஞர் என்பவர் சுதந்திரமாகச் செயல்பட்டு, வழக்குகளை விரைவாகவும், திறம்படவும் நடத்தி, குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வாங்கித் தர வேண்டும். இந்த வகையில் தமிழக நீதிமன்றங்களில் பல அப்பழுக்கற்ற அரசு வழக்கறிஞர்கள் பணியாற்றியுள்ளனர்.

இதுபோல வழக்கை ஓர் அரசு வாபஸ் பெறும் போது, பொதுமக்களில் யார் வேண்டுமானாலும், அதை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்யலாம், என்று நீதிபதி பகவதி சொல்லியிருக்கிறார். அந்த வகையில் திமுக பொருளாளர் ஆற்காடு வீராசாமி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். வைகோ மீதான பொடா வழக்கை வாபஸ் பெறும்படி சகாரியா கமிட்டி உத்தரவிட்டபோது, அதைச் செயல்படுத்த அரசு மறுத்தது. அவ்வாறு செய்வது 'நீதி பரிபாலனத்தில் தலையிடுவதாகிவிடும்' என்று அரசு உயர்நீதி மன்றத்தில் மனு செய்தது. ஆனால் பாலகங்கா பேரிலான வழக்கை மட்டும் எவ்வித விளக்கமுமின்றி அதே அரசு வாபஸ் வாங்கி விட்டது! வைகோவுக்கு ஒரு நியாயம்; பாலகங்காவுக்கு வேறு!"

• ஏ.பி. சூர்யபிரகாசம்.



சந்திப்பு: ப்ரியன்

படம்: ராஜன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : செ. ஏக்நாத் ராஜ், அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited.
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



* நரேந்திர பாபு * சீனிவாசன் * பாலசுப்ரமணியன்

த்ரீ இன் ஒன்!

பாலசுப்ரமணியன், நரேந்திர பாபு, சீனிவாசன் ஆகிய மூன்று ஓவியர்களும் இணைந்து, வின்யாசா ஆர்ட் காலரியில் சமீபத்தில் ஓவியக் கண்காட்சி நடத்தினார்கள். இந்த த்ரீ இன் ஒன் கண்காட்சியில் பேசிய காவல்துறை ஐ.ஜி. ராஜா, ''அந்தக் காலத்தில் வேந்தர்கள், புலவர்களையும், கலைஞர்களையும் தங்களது சபைகளுக்கு வரவழைத்து கௌரவிப்பார்கள். இன்று காலம் மாறிவிட்டது. கலைஞர்கள், (துணை) வேந்தரை வரவழைத்து கௌரவித்திருக்கிறார்கள்'' என்றதும், வாழ்த்த வந்திருந்த அண்ணா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பாலகுருசாமி உட்பட, அனைவருமே ரசித்தார்கள்!

- கௌதம்



உங்கள் வீடும் வாழ்வும்
சிறக்க, மகிழ...
விரைவில் வருகிறது

ஒரு **கல்கி** வெளியீடு...!



• இயக்குனர் ராமநாராயணனுடன் யு.எம். கண்ணன்

முதல் முயற்சி!

இதுவரை கண்டுகொள்ளாமல் விடப்பட்ட திரைப்படக் கல்லூரி மாணவர்களின் சிறந்த குறும்படங்களுக்கு, இப்போது வாழ்வளித்திருக்கிறது பொதிகை சேனல்!

மொத்தம் நாற்பது குறும்படங்கள். அரை மணி நேரப் படங்கள்தாம் என்றாலும் அர்த்தமுள்ள படங்கள்!

''இன்று சினிமாக்களும், சினிமா தொடர்பான நிகழ்ச்சிகளையும் தான் மக்கள் விரும்பிப் பார்க்கிறார்கள். எனவே, சினிமாவாகவும் இருக்க வேண்டும், அதே நேரம் மக்களின் ரசனையை மேம்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்ததன் விளைவுதான், 'முதல் முயற்சி' எனும் இந்த நிகழ்ச்சி'' என்கிறார், இந்த நிகழ்ச்சியைத் தயாரிக்கும் பொறுப்பேற்றிருக்கும் யு.எம். கண்ணன்.


சனிக்கிழமைகளில் பிற்பகல் மூன்று மணி முதல் மூன்றரைவரை ஒளிபரப்பாகிற இந்த நிகழ்ச்சி, மறுநாள் ஞாயிறு பகல் பன்னிரண்டு மணிக்கு செய்திகள் முடிந்ததும், மறு ஒளிபரப்பு ஆகும்.

''திரைப்படக் கல்லூரி, திறமை மிகுந்த இளைஞர்களின் பட்டறை. அவர்களின் கிரியேட்டிவிடியில் உருவாகிற படங்கள் திரைப்பட விழாக்களில் விருதுகள் பெற்றிருக்கின்றன. ஆனால், அற்புதமான அந்தக் குறும் படங்களில் பெரும்பாலானவை, மக்களைச் சென்றடைவதில்லை. அவர்களை ஊக்குவிக்கும் விதமாக இந்த நிகழ்ச்சி அமையும். அதே சமயம், மக்களின் சினிமா ரசனையையும் வளர்க்கும் நிகழ்ச்சி இது!''


'முதல் முயற்சி' நிகழ்ச்சியில், ஒரு குறும்படத்தைத் திரையிடுவதற்குமுன், இயக்குனரையும் மற்ற தொழில் நுட்பக் கலைஞர்களையும் அறிமுகப்படுத்தி வைப்பார்கள். படம் திரையிடப்பட்ட பின், முன்னணி திரைப்பட இயக்குனர்கள், அந்தப் படம் குறித்து விமர்சனம் செய்வார்கள். இதற்கென்று உருவாக்கப்பட்டுள்ள குழுவில் பாலுமகேந்திரா, வஸந்த், மனோபாலா, ராமநாராயணன் போன்றவர்களுடன், சீனியர் டைரக்டரான சிங்கீதம் சீனிவாசராவும் இடம் பெற்றிருக்கிறார்.

''புதிதாக சென்னை தூர்தர்ஷன் நிலைய இயக்குனராகப் பொறுப் பேற்றிருக்கும் அசோக் ஜெய்கானி, மற்றும் திரைப்படக் கல்லூரி முதல்வர் லோகநாதன், ஆகியோரின் ஒத்துழைப்பும், ஊக்கமும் இதற்கு முக்கியமானது'' என்கிறார் யு.எம். கண்ணன்.

• பாலுமகேந்திரா



• வஸந்த்



- மௌலி

ஸ்ரீ ஜயேந்திரர் வழங்கும்

ராமாயணம்



காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

ராமாயணம் படிப்பதால் என்ன பலன்?

ராமன் என்று சொன்னாலே ஆனந்தமானவன்; மற்றவருக்கு ஆனந்தத்தைத் தருபவன் என்று அர்த்தம். 'ராம' என்கிற இரண்டெழுத்து மந்திரத்தைச் சொன்னாலே விஷ்ணு சகஸ்ரநாமம் முழுவதையும் சொன்ன பலனைத் தரும் என்று சாட்சாத் பரமேஸ்வரன் பார்வதிக்கு உபதேசம் பண்ணினதாகச் சொல்லியிருக்கிறது. அப்படி 'ராம' நாமாவுக்கே அத்தனை மகிமை என்றால்— ராமபிரானுடைய முழு வரலாறையும் சொல்கிற 'ராமாயண'த்தை பாராயணம் செய்வதின் பலனைச் சொல்லி முடியாது. அப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்தது **ராமாயணம்**.

சின்னக் குழந்தைகள், நடுத்தர வயதுக்காரர்கள், வயசானவர்கள் என்று எந்த வித்தியாசமும் இல்லாமல் எல்லோருக்கும் பயன்தரக் கூடியது ராமாயணம்.

ராமாயணம் என்பது ஒரு பெரிய சமுத்திரம் மாதிரி. அதில் மூழ்க மூழ்க புதுசு புதுசாகப் பல விஷயங்கள் தெரியவரும்.

இத்தனை உயர்வான ராமாயணத்தை உங்களுக்காக கொடுத்திருக்கிறேன். ராமாயணத்தை உங்கள் குழந்தைகளையும் படிக்கச் சொல்வது அவர்களுக்கு பண்பாடு, ஒழுக்கம், பக்தி இவை யாவும் ஏற்பட்டு நல்ல பலன்களையும் தரும். அதனால் எல்லோரும் ராமாயணத்தைப் படித்து ராமச்சந்திரனுடைய அருளுக்குப் பாத்திரமாக வேண்டும். எல்லோரும் ஆனந்தமடைய வேண்டும் என்பதுதான் ராமாயணத்தைக் கொடுத்ததன் நோக்கம்.

இந்த ராமாயணத்தைப் படிப்பவர்களுக்கு பொன்னும் பொருளும் கிடைக்கும். புகழ் உண்டாகும். நீண்ட ஆயுளும் வெற்றியும் கிட்டும்.

நாராயண... நாராயண... நாராயண..

வானதியின் சிறந்த பதிப்பு. வண்ணச் சித்திரங்களும் மற்றும் ஏராளமான உட்சித்திரங்களும் நூலை அலங்கரிக்கின்றன.

332 பக்கங்கள் | விலை ரூ. 100/– | வி.பி.பி. தபால் செலவு தனி.

வானதி பதிப்பகம்

23, தீனதயாளு தெரு, தியாகராய நகர்,

சென்னை–17. ✆ 24342810 / 23410769

‘‘எங்கப்பா, போன வாரம் ஆளையே காணோம்?’’ என்றார் கலைஞர்.

“வெகேஷன் ஸார்... ஐயாயிரம் அடி உயரத்துல... ஜிலுஜிலுன்னு..”

“உன்பாடு தேவலாம்பா; என்னைப் பாரு. இந்த வயசுல.. வேகற வெயில்ல தேர்தல் பிரசாரம்னு அலைஞ்சுகிட்டு... நாய்படாத பாடு..”

“நாயா? உங்களைக் குள்ள நரின்னுல்ல அம்மா வர்ணிச்சிருக்காங்க..”

“இருந்துட்டுப் போறேன், அந்தம்மா சிங்கமாகவே இருக்கட்டும். நிறைய கதை சொல்றாங்களாமே? சிங்கம் கிணற்றுக் குள்ள விழுந்த கதை தெரியுமா? கேளு... வேடன் வலையில மாட்டிக்கிட்ட கதை.”

“எல்லாக் கதையும் பத்தாம் தேதி யோட முடிஞ்சு போய், பதிமூன்றாம் தேதி, ‘இதனால் அறியப்படுவது யாதெனில்’..”

“அறம் வெல்லும். அதுதாம்பா எல்லாக் கதைகளும் கூறும் ஒரே அடிப் படை நீதி’’ என்று கூறி, பிரசார வேனில் ஏறினார் கலைஞர்.

★ ★ ★

வண்டலூரா, போயஸ் தோட்டமா என்று புரியாத அளவுக்கு, கெதீட்ரல் சாலையிலேயே சிம்ம கர்ஜனை கேட்டது! இலேசாக நடுங்கிய படியே வீட்டை நெருங் கினால், அம்மையார் வழக்கறிஞர்களை வறுத் தெடுத்துக் கொண்டிருந் தார். “என்னய்யா வாதாடினீங்க? சரி யான சட்டப் பாயிண்ட் கிடைக் கலையா? அபரிமித சொத்து வழக்கை, கர்நாடகாவுக்கு மாற்றியே தீரணும்னு சொல்றீங்களே..”

“நாங்க இல்லீங்க... சுப்ரீம் கோர்ட்ல ஜட்ஜுங்க எடுத்த முடிவு அது..”

“சுப்ரீம் கோர்ட்டா.... நான் கேட்டு இல்லைன்னு சொல்ற ஒரு கோர்ட் கூட இருக்கா...? அதென்ன கோர்ட்டு... டென்னிஸ் கோர்ட்டு..”

‘‘இப்படியெல்லாம் பேசாதீங்க; கோர்ட்டு அவமதிப்பு ஆயிடும், அதுவும் சுப்ரீம் கோர்ட்டு...”

‘உங்ககிட்டத்தானேய்யா பேசறேன்; பப்ளிக்காவா பேசறேன்...? இப்ப என்ன பண்ணப் போறீங்க..”

‘‘கர்நாடகாவுல போயி வாய்தா வாங்கறோம், மேடம்..”

“அதையாவது ஒழுங்கா செய்யுங்க. அடுத்த தேர்தல் முடிகிற வரை இழுத் தடிக்கணும். புரிஞ்சுதா!’’ கடைசி சொல் கர்ஜனையாக ஒலிக்க, கேட்டுக்கு வெளியே வந்து விழுந்தார் ஒருவர். இன் னொருவர் பின்னாலேயே ஓடி வந்தார்.

“அம்மாவுக்கு மூடு அவுட்! ஓடு! ஓடு! நீ வேற மாட்டிக்கிட்டு முழிக்காதே’’ என்றார் என்னைப் பார்த்து.

ஃபிளைட் பிடித்து கொழும்புக்கு வந்து இறங்கினேன்.

★ ★ ★

செய்திகள் திரிப்பது செம்பியன்



முத்தையா முரளிதரன் அப்போதுதான் ஜிம்பாப் வேயிலிருந்து திரும்பி வந்திருந்தார். அவர் பந்து வீசும்போது காணப்படும் அனல் பறக்கும் கோப முழி, இப்போது இல்லை. ஐஸ் பார்வை; நைஸ் புன்னகை! “என்னென் னவோ டெஸ்ட் பண்ணிப் பார்த்தும்கூட, கடைசியில் என் பந்து வீச்சுக்குத் தடை விதிக்க முடியலை, பார்த்தியா!” என்றார்.

‘‘உங்களை நீங்களே திருத்திக் கொண்ட பிறகும், ஆக்‌ஷன்ல இன்னும் கொஞ்சம் பிரச்னை இருக்குன்னுதானே முடிவு செய்தாங்க...? ‘பெனிஃபிட் ஆஃப் டவுட்’ கொடுத்து தொடர்ந்து ஆட அனுமதிச்சிருக்காங்க..”

“அது எப்படியோ; பந்து வீசத்தான் போறேன். விக்கெட் எடுக்கத்தான்

போறேன்!"

"அப்பப்ப திருத்தப்படாத பழைய ஸ்டைலுக்குப் போய் பந்து வீசுவீங்க..."


"பழக்க தோஷத்துல என்னையறியாமல் சில சமயம் அப்படி நேரலாம்... அதுக்கு என்ன செய்ய...?"

"நான் சின்னப் பிள்ளையா இருந்து கிரிக்கெட் ஆடும்போது, இதுக்கு ஒரு பேர் உண்டுங்க..."

"என அது?"

"அழுகுணி ஆட்டம்!"

முத்தையாவின் முழிப்பில் ஆத்திர வெறி ஏற, "என்ன சொன்னே..." என்று



கையை உயர்த்தினார்.

ஒரு ஸ்பின் அடித்து அவரிடமிருந்து தப்பி, ஃபிளைட் பிடித்து நேரே புதுதில்லி.

* * *

பிரசாரத்துக்கு இடையில் சற்று ஓய்வெடுக்க வந்த இடத்திலும் இருப்புக் கொள்ளாமல், வாஜ்பாயி கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாகத் தள்ளாடியபடியே நடந்து கொண்டிருந்தார். "Exit என்ற வார்த்தையையே அகராதியிலிருந்து நீக்கணும்; சினிமா தியேட்டர்களில் கூட Exit என்ற சிவப்பு நிற அறிவிப்பு விளக்கு எரியவே கூடாது" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

"வாக்குச் சாவடியை விட்டு வெளியேறும் வாக்காளர்கள் கொடுத்த தீர்ப்பு..."

"என்னய்யா தீர்ப்பு... அபிப்பிராய வாக்கெடுப்புன்னு ஆயிரம் பேர் வோட்டுப் போட்ட இடத்தில், ஒருத்தரைப் பேட்டி காணறாங்க... இதுல உண்மை எப்படி வெளிப்படும்?"

"உண்மை இல்லைன்னா, எதுக்கு இப்படி கலகலத்துப் போறீங்க?"

"இந்த அபிப்பிராயமே பரவி, அடுத்த கட்ட வாக்குப் பதிவைப் பாதிக்குமே...!"

"இதை ஆட்சியில் இருந்தபோதே யோசிச்சு இருக்கலாமே! எல்லா கட்சிகளுமே அபிப்பிராய வாக்கெடுப்பை எதிர்க்கத்தான் செய்யறாங்க... அதற்கு தடை விதிச்சு சட்டம் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கலாமே..."

"கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் பற்றி யோசிச்சு என்ன பயன்? Exit, Exit... பி.ஜே.பி.யின் Exit ஆகாமல் இருந்தா சரி..."

"ரொம்பத்தான் கலங்கிப் போயிருக்கீங்க" என்று கூறிவிட்டு, அடுத்த ஃபிளைட் பிடித்து மும்பை வந்து இறங்கினேன்.

* * *

பால்தாக்கரேயிடம் சென்று, "என்னங்க, அறுபத்தைந்து வயசுக்கு அப்புறம் யாரும் பிரதமராகக் கூடாதுன்னு ஒரே போடு போட்டுட்டீங்க..." என்றேன்.

"ஆமாம்; ஆனா, அது பொதுப் படையான கருத்து. அப்பப்ப ரூல் மாறிடும். ஏன், எனக்கே எண்பது வயசில் பிரதமராக வாய்ப்புக் கிடைச்சா விட்டுடுவேனா?"

"அதானே, ரூலை வளைக்கிறவன் தானே அரசியல்வாதி! பிரதமர் சொல்றார், 'எல்லாரும் 'டீஸண்ட்டா' தேர்தல் பிரசாரம் பண்ணணும்'னு. நீங்க அவரை மேடையில் வைச்சுக்கிட்டே காங்கிரஸை..."

"ஆமாம், நபும்சகர்கள் கட்சின்னு சொன்னேன்... என்னை யார் கேட்கிறது...?"

"தாக்குங்க தாக்குங்க... உங்க பேரே தாக்கரேதானே! அதே சமயம் உங்க கட்சி 'லெட்ரீன் பாஷைக் கட்சி'ன்னு பேர் வாங்காம பார்த்துக்குங்க" என்று கூறி விட்டு, அவர் தமது குண்டர் தொண்டர்களை அழைப்பதற்கு முன்னர் எடுத்தேன், ஓட்டம்!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? "நாம் அனைவரும் வருமான வரியை ஒழுங்காய்ச் செலுத்தினால் போதும், நாட்டின் பல முக்கியமான பிரச்னைகள் காணாமல் போய்விடும். வரி செலுத்தாமல் சாலைகளைப் பற்றி புகார் செய்வதில் அர்த்தமில்லை" என்று கமல்ஹாசன் சொல்கிறாரே...?



• வரியோபதேசம்!

! நியாயமான முறையில் வருமான வரி செலுத்தாமலிருப்பதை தேசத் துரோகமாகவே கருதலாம். ஆயினும், 'செலுத்தியவரையில் வரிகள் எல்லாம் செம்மையான திட்டங்களாகத் திரும்பக் கிடைத்திருக்கிறது' என்கிற நம்பிக்கை மக்களுக்கு வராதவரை, கமல் சொல்வதிலும் அர்த்தமில்லை.

● சுகந்தி நாராயணன், சென்னை - 39

? ரொம்ப நாட்களாகவே கேட்க ஆசை... கல்கியின் விலாசத்தில் '47NP' என்று வருகிறதே... என்ன அர்த்தம்.

! North Phase என்பதன் சுருக்கம்தான் NP. விலாசத்தில் சேர்க்க வேண்டும் என்று அஞ்சல் துறையின் வற்புறுத்தல்!

● எல்.எம்.அபிதா, திருவண்ணாமலை

? மெட்டி ஒலியை அடக்கவா 'கல்கி' அவதாரம்?

! மெட்டி ஒலி தேய்ந்து போய் ரொம்ப காலமாகிவிட்டது. சுவாரஸ்யம் அதில் குன்றிய நிலையில், 'கல்கி' சுமாராக இருந்தால் கூட ரிமோட் வரவேற்புப் பெறும்.

● எச். எழில்மலை, அக்ரவாரம்

? தேர்தலுக்கு முந்தைய தேர்தல் கணிப்புகள், தேர்தல் முடிந்த பிறகு வெளியாகும் கணிப்புகள் - இவற்றில் எவை மக்களைக் குழப்பும்?

! தே.மு. கணிப்புகளை விடவும் முதல் இரண்டாம் கட்ட தேர்தல்களுக்குப் பிறகு வெளியாகும் கணிப்புகள், அதிக ஆபத்தானவை. மக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த வல்லவை. சிந்தித்து வோட்டுப் போட அனுமதியாமல், ஆட்டு மந்தை மனப்பான்மையைத் தூண்டும் தேர்தல் கணிப்புகள் அனைத்தையுமே தடை செய்வதுதான் சரி.

● ஜி.வி.எஸ். மணியன், திண்டுக்கல்

? தேர்தல் வேட்பாளர்களின் சொத்து விவரங்களைப் பார்க்கும்போது பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள்..?

! India Shining - in some POCKETS!

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க. - அ.தி.மு.க. உறவு நிலைக்குமா...?

! பேரங்கள் படிவதைப் பொருத்துதான் உறவும், அதன் தன்மையும்.

● சிவ. இளங்கோவன், கீழப்பெருமழை ❑

? வாக்களிக்காதவர்களின் வாக்குரிமையை ரத்து செய்தால் என்ன...? ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு எதற்கு அந்த உரிமை?

! பிரச்னைக்குத் தீர்வு இது அல்ல. ஒன்று ஜனநாயகப் பற்றை வளர்க்கும் கல்வி புகட்ட வேண்டும்; இரண்டு - அச்சமின்றி வோட்டளிக்கக் கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும்; மூன்று: அரசியல் ஒரு தொழில் அல்லது வியாபாரம் என்ற நிலை மாற வேண்டும்; மக்களிடம் மனக்கசப்பு நீங்க வேண்டும்.

• விட்ட இடம்...



'மெட்டி ஒலி'யை அடக்கவா



• பத்திலே ஒன்று!

● வெ. ராணி, நாமகிரிப்பேட்டை

? தற்பெருமை, தலைக்கனம்,

பேராசை, முன் கோபம் - இவற்றில் எது மனிதனை விரைவில் அழிக்கும்..?
! எரிகிற கொள்ளியில் எது நல்ல கொள்ளி!

❐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
சிவ. இளங்கோவன்
கீழப்பெருமழை
வழி குன்னலூர்
திருவாரூர் - 614 703

•ரூ. 50/- பரிசு பெறுபவர்:
பி.கே. சௌந்தர்ராஜன்,
எஸ்.வீஸ். ரமணாபாரடைஸ்,
ஈஸ்ட் ஆனந்த் பாக்,
மல்கஜ்கிரி,
ஹைதராபாத் - 500 047

● பி.கே.சௌந்தர்ராஜன்,
ஹைதராபாத் - 47 *

? சோனியா - ராகுல் இருவருமே தேர்தலில் வெற்றி பெற்று, காங்.கூட்டணியும் 280 - 290 இடங்கள் பெற்றால், இருவரில் யார் பிரதமர்? யார் கூட்டணித் தலைவர்?...

! காங். கூட்டணி வெற்றி பெற்றாலும், அக்கட்சிக்குத் தனிப் பெரும்பான்மை இல்லாத வரையில், சோனியா அல்லது ராகுல் பிரதமராவதற்கு நிச்சயம் சில தரப்புகளில் எதிர்ப்பு இருக்கும். சோனியா பெருந்தன்மையுடன் நடந்து கொண்டால், மதச்சார்பற்ற அரசு எளிதில் அமையும். இல்லையேல் குதிரை வியாபாரம்தான்!

• ...தொட்ட இடம்!



'கல்கி' அவதாரம்..?

● வீ. முத்தையா, திருநெல்வேலி

? சோனியா மீதான தனிப்பட்ட விமர்சனங்களுக்கு வருத்தம் தெரிவித்து, தமது கட்சியினர் அவ்வாறு பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று வாஜ்பாய் கூறியுள்ளாரே...?

! என்ன பிரயோஜனம்? அவரை மேடையில் வைத்துக் கொண்டே தாக்கரே, சோனியாவையும் இதர காங்கிரஸ் தலைவர்களையும் ஒருசேர அவமானப்படுத்தியிருக்கிறாரே... 'பிரதமருக்குப் பிடிக்காது என்று தெரியும்... இருந்தாலும் சொல்கிறேன்..' என்று தாக்கரே பேச, வாஜ்பாய் மௌனமாகத்தானே இருந்தார்!

● கா.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்

? உலகின் மிக அதிக செல்வாக்கு பெற்றவர்கள் பத்து பேர் பட்டியலில் ஐஸ்வர்யா ராய் இருப்பது எதைக் காட்டுகிறது...?

! தோற்றப் பொலிவை உலகமே செல்வாக்காக ஏற்பதை.

● கே.வி.ராமன், சென்னை - 73

? அன்னிய நாட்டின் பாஸ்போர்ட் வைத்துள்ள தினகரன், தேர்தலில் போட்டியிடக் கூடாது என்கிறாரே சு.சுவாமி?

! 'தினகரன், சிங்கப்பூர் குடிமகனாகத் தம்மைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்; அதனால் இங்கு வாக்காளராகவோ, வேட்பாளராகவோ இருக்க முடியாது' என்கிறார் சு.சுவாமி. ஆனால், தினகரனிடம் இந்திய பாஸ்போர்ட் இருப்பதாக, அவரது வேட்பு மனுவை ஏற்ற அதிகாரி கூறியுள்ளார். இரட்டைக் குடியுரிமை இங்கும் சிங்கப்பூரிலும் உண்டா..? - இதுவே சட்டப் பாயிண்ட்.

● சி.முருகன்,
தூத்துக்குடி



• சிங்கப்பூர் சிங்கம்!

? தேர்தல் கூட்டங்களில், அம்மாவின் அதிரடிப் பேச்சில் 'கருணாநிதி' பெயர் எத்தனை முறை சொல்லப்படுகிறது?

! யார் பெயரை எத்தனை முறை சொன்னால் என்ன..? அதற்கு முன்னும் பின்னும் சொல்லப்படுவது தானே முக்கியம்....? அந்த வரிசையில் அம்மாவின் லேட்டஸ்ட்:
"கருணாநிதியின் வாதம் பக்கவாதம்(!) ராமதாஸ் பேசுவது பிரிவினைவாதம், வைகோ பேசுவது தீவிரவாதம், நான் பேசுவது இலட்சியவாதம்(!!)". நமக்குத் தோன்றுவதோ, 'இது குதர்க்கவாதம்!'

எதையும் எள்ளளவும் பிசகின்றி சொல்லும் கலை

ஜோதிடப்பயிற்சி

(தபால் வழி போதனா முறை)

அன்றைய நாட்களிலேயே அரிய காலத்தை அளவை செய்யும் தூயதான கலை ஜோதிடத்தை கிரகசார வழியாக சரியாக அளவை செய்து ஜாதகத்தைக் கணித்திடில் எள்ளளவும் பிசகின்றி அவரவர் வாழ்வை அப்படியே சொல்லிடமுடியும் என்ற வழி வகையை பலவாறாக சொல்லி வைத்தும், இன்று கணித்து ஜாதகம் எழுதுவதில் பல பிழைகள் வந்திட செய்கின்றனவாகையால் - அதன் தூய்மை கெட்டு இத்தகைய ஒரு உயர்வு பெற்ற கலை மாசுபடுத்தப்படுவதை எண்ணிடும் போது உரிய வழியை தவறற்ற வழியில் ஜாதகம் கணிதம் செய்யும் முறையை கற்பித்திடவேண்டும் - இந்த அரிய கலையின் அற்புத மேன்மையை நாடறிய செய்ய வேண்டும் என்று தோன்றுகின்றது.

எனவே அதற்காகவே அனைவரும் கற்றுக்கொள்ளும் வழியில் மாதந்தோறும் சிறு தொகை கட்டி ஒவ்வொரு பாடமாக விளக்கி பயிலும் வழிமுறையோடு பாடங்களோடு மிக உயர்வான பலன்களை பிரிப்பது, சரியான முறையில் ஜாதகம் எழுதுவது தொழில் வழியில் தவறாமல் மேன்மை அடைவது, இல்லற வாழ்வில் நிலையான இனிது காண எவ்வித பொருத்தம் பார்க்க வேண்டும் என்ற ரகசியம், குழந்தை செல்வம் இல்லாத நபர்கள் எவ்விதம் விரத நிலைகள் இருப்பின் நிச்சய குழந்தை நலம் ஏற்படும் என்பது சொத்து சுக மேன்மைக்காக கிரகங்கள் எப்படி அமைய வேண்டும் என்ற அரிதான நிலைகள் அத்தனையும் இக்கலையின் ரகசிய நிலைகள் என்னவென்பதை தெளிவாக ஒவ்வொரு மாதத்துடனும் ஒரு இலவச இணைப்பாக இணைத்து கொடுக்க உத்தேசித்து இந்த விளம்பரத்தை பிரசுரிக்கின்றோம். ஜாதக நகலுடன் மனு செய்யுங்கள். நீங்கள் இதனை கற்று எவ்வித தேர்ச்சி பெற்று மேன்மை அடையலாம் என்பதையும் எழுதுகின்றோம்.

தவிர, இது கற்பவர்கள் நிச்சயமாக - மதுபானம் செய்வதோ, புகை பிடிப்பதோ அல்லது பொடி, புகையிலை போடுவதோ கூடாது. இவ்வித தீயப்பழக்கமற்ற நல்லியல்புகள் இருப்பின் சில தபோ நிலைகளை கையாண்டு மெய்ஞான வழியாகவும் வருவன கண்டறியும் தனி தன்மையையும் பெறலாம்

எனவே இவ்வித வழியில் தமிழில் எவரும் புகட்டிடாத அரிய கருத்துக்களையும் எள்ளளவும் பிசகாது ஜாதகம் எழுதும் வரலாறுகளையும் ஜாதகத்தை பார்த்த உடனேயே இது சுகபிரசவமா, அறுவை சிகிச்சையா அல்லது தாயாருக்கு தீதா என்ற உரித்தானவற்றை கண்டறியும் உண்மையான வழிகள் ஒட்டியே இருக்கின்றன. உயிரின் ஓட்டம் உடலின் வல்லமை, ஆயுளின் ஆழம் அனைத்தும் - முதல் மூச்சுவிடும் நேரத்திலேயே எழுதிவைக்கப்படுகின்றன. இன்றைய பஞ்சாங்கங்கள் தோறும் பாதசாரங்கள் வேறு வேறாக இருந்தாலும் அம்ச ரீதியாக மாறி இருப்பினும் ராசிக்கட்டம் கொண்டே அனைத்து நிலவரங்களையும் அவரது வாழ்வில் நடக்கப்போகும் நாட்களை சிறிதும் மாறுதலின்றி அறிந்து கூறிவிடலாம்.

எனவே இந்த கிரகசாரங்களின் அதி அற்புத சாரங்களின் வழியாக மனிதரது வாழ்வு அளக்கப்படும் நிலையில் சிறிதும் மாறுதலின்றி அவரவரது - வாழ்வில் - அதிமேதாவிதன்மை, அட்டகாய சூரத்தன்மை, அன்பின் இணைபாடு ஆதரவு காட்டும் பண்பு - தெய்வத்தொண்டின் வழியில் ஆர்வம், நீதி வழியில் நிலையாக நிற்றல் என்ற இனிதான காலத்தையும் எவரும் மெச்சுகின்ற தன்மையையும் எள்ளளவும் பிசகின்றி கூறிடும் வழிமுறைகள் சற்றும் தவறற்று கற்பிக்கவே இதனை பிரசுரிக்கின்றோம். மாதா மாதம் ஒரு சிறு காணிக்கை வழியாக பாடம் பெற்று முழுமையாக கற்றுத்தேறி 'ஜோதிடக்கலைஞர்' என்ற பட்டமும் சான்றிதழும் பெற்றிடவும், மாதா மாதம் மிக முக்கிய பலன்களை சொல்லும் வழிமுறை ரகசிய இணைப்புகளும் தர இருக்கின்றோம். எனவே இவ்வித இனிதான சந்தர்ப்பம் வாய்ப்பது அரிது. எனவே ***14-06-2004*** தேதி மாலைக்குள் உங்கள் ஜாதக நகலுடன் ஜோதிடக்கலையை கற்றிட விரும்புகின்றேன் என்று எழுதி மனுச்செய்து கொள்ளுங்கள்.. அது கிடைத்தவுடன் உரிய விபர படிவம் அனுப்பி வைக்கின்றோம். அதில் அனைத்து விபரங்களும் இருக்கும். இது சிறப்பான வாய்ப்பு.




பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர் இராஜயோக பயிற்சியாளர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

தபால் பெட்டி எண்: 55

பிளாட்எண்:204, அண்ணாநகர் **மதுரை - 625 020** தமிழ்நாடு

(0452)
253341
252957



பிரதமர் யார்...?

கருத்துக் கணிப்புகளுக்குச் சம்பந்தம் இல்லாத வகையில் நம் நாட்டில் தேர்தல் முடிவுகள் அமைந்ததுண்டு; இனியும் அமையலாம்.

ஆனால், இம்முறை முதல் இரு கட்ட வாக்குப் பதிவுகளை அடுத்து வெளியாகியுள்ள கருத்துக் கணிப்பை, பா.ஜ.கவே ஏற்றுக் கொண்டு கலங்கிப் போயிருக்கிறது. தங்கள் கட்சியின் எதிர்பார்ப்பும், கூட்டணியின் எதிர்பார்ப்பும் பூர்த்தியாக வழியில்லை என்பதை ஒப்புக் கொண்டு, இறுதிக்கட்ட வாக்குப் பதிவுக்கான பிரசாரப் பணிகளைத் திருத்தி அமைத்துள்ளது!

"டிஸ்டிங்ஷனுக்குக் குறி வைத்தால்தானே முதல் வகுப்பில் பாஸ் செய்யலாம்... எதிர்பார்த்த முன்னூறு இடங்கள் வராவிட்டால் போகிறது; எங்கள் கட்சி பெரும்பான்மையை நிர்ணயிக்கக் கூடிய இடங்களைப் பெற்ற தனிக்கட்சியாக **(decisive majority)** நாடாளுமன்றத்தில் நுழையும் வகையில் வாக்களியுங்கள்" என்று இறங்கி வந்து கெஞ்சியிருக்கிறார் வெங்கய்யா நாயுடு.

பா.ஜ.க கூட்டணியின் ஆட்சியில் நாடு முன்னேறியிருப்பதை மறுக்க முடியாது. ஆனால், தொழில், பொருளாதார, விவசாய, விஞ்ஞான, முன்னேற்றங்களைக் காட்டிலும், ஹிந்து அடிப்படை வாதத்தின் முன்னேற்றமே அதிகமாக நிகழ்ந்திருக்கிறது.

இல்லாவிட்டால் அமேதியில் ராகுல் காந்தியை எதிர்த்துப் போட்டியிடும் பா.ஜ.க வேட்பாளர், 'பாப்ரி மஸ்ஜித்தை நொறுக்கி வீழ்த்திய எங்களால் காங்கிரஸை நொறுக்க முடியாதா...!' என்று காழ்ப்புணர்வுடன் பிரசாரம் செய்ய முடியுமா?... இத்தனைக்கும்




கல்கி



2004 மே 9
தாரண சித்திரை 27
மலர் : 62
இதழ் : 41

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



அமேதி பா.ஜ.க. வேட்பாளர் வேதாந்தி, சங்க் பரிவாரைச் சேர்ந்த துறவி!

இன்று இந்த ஹிந்து அமைப்புகளின் கோட்பாடு, 'தங்களை நிலைநாட்டிக் கொள்ள எதையும் அழிக்கலாம்' என்பதாகவே இருக்கிறது. இந்த அமைப்புகளின் பிடியில் பா.ஜ.க. சிக்கிக் கிடப்பதால், வாஜ்பாயோ, வேறு பா.ஜ.க. தலைவரோ உண்மையில் விரும்பினால்கூட மதநல்லிணக்கத்தைப் போற்ற முடியவில்லை. அவர்கள் எப்போதேனும் மதச் சார்பற்ற தெளிவோடு பேசினால், உடனே சிலிர்த்துக் கொண்டு பரிவார் உறுப்பினர்கள் பாய்ந்து வருகிறார்கள். கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

'மத நல்லிணக்கம்' என்பதைக் கெட்ட வார்த்தையாகக் கருதும் ஒரு கட்சியிடம் ஆட்சியைக் கொடுத்தால், நம் நாடு என்ன ஆகும் என்று வாக்காளர்கள் சிந்திக்க வேண்டும். மதக் கலவரங்கள் பெருகினால், இன்று பாதுகாப்பாக உணரும் ஹிந்துக்கள்கூட, நாளை அந்த உணர்வோடு இங்கே வாழ இயலாது போகும். நாடு நாசமாகி விடும்.


குறிப்பாக, தமிழக, புதுவை வாக்காளர்கள் மிகுந்த எச்சரிக்கை காட்ட வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டிருக்கிறது. நாற்பது தொகுதிகளுள் முப்பத்து மூன்றில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். ஏழு தொகுதிகளைத்தான் பா.ஜ.கவுக்குக் கிள்ளிக் கொடுத்திருக்கிறார் ஜெயலலிதா.

மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் பட்சத்தில், அ.தி.மு.க. கணிசமான தொகுதிகளில் ஜெயித்தால், ஜெயலலிதாவின் செல்வாக்கே மேலோங்கியிருக்கும். கடந்த காலத்தில் அவர் பா.ஜ.கவைப் படுத்தி வைத்த பாட்டை நாம் எளிதில் மறந்துவிட முடியாது.

தமிழகத்தில் கடந்த சுமார் மூன்றாண்டுகளாக நடைபெற்று வரும் ஜெயலலிதா ஆட்சியிலும், நிர்வாகத் திறனைக் காட்டிலும், யதேச்சாதிகாரத்தையும் பழிவாங்கும் போக்கையுமே நாம் அதிகம் கண்டிருக்கிறோம்.

அரசு ஊழியர்கள் பேரிலான நடவடிக்கை, பத்திரிகைகள் பேரிலான வழக்குகள், பகிரங்க பொடா துஷ்பிரயோகம், ஊழல் வழக்குகளில் சாட்சிகள் பல்டி - வழக்குகள் வலுவிழப்பு என ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்குக் கணக்கு வழக்கே இல்லை.

இத்தகைய கட்சியை ஆதரிப்பதன் மூலம், அதன் யதேச்சாதிகாரம் பா.ஜ.கவை



ஆட்டி வைக்க வழி செய்து தருவோமேயொழிய, மத்தியில் நல்லாட்சி நிறுவ நமது வாக்குகள் உதவ மாட்டாது.

'பா.ஜ.கவுக்கு மாற்றுக் கட்சியான காங்கிரஸ் இடம் பெறும் மத நல்லிணக்கக் கூட்டணி மட்டும் ஆட்சிக்கு வந்தால் என்ன சாதித்து விடப் போகிறது?' என்று கேட்கலாம். 'தலைமை குறித்தே தெளிவில்லையே?' என்றும் வினவலாம்.

இன்று நாடு கண்டுள்ள பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது ராஜீவ் காந்தியின் ஆட்சியில்தான் என்பதை, பா.ஜ.க. மறுக்க முடியாது. வி.பி.சிங்கின் துணிவும், சாம் பிட்ரோடாவின் தீர்க்க தரிசனமும் செயல்பட வழி வகுத்தவர் ராஜீவ்தான். அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கும், பொருளாதார தாராளமயத்துக்கும், தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கும், இந்த இருவரும் பெரிய அளவில் பங்களித்தனர். ராஜீவ் தொடங்கி வைத்த நற்பணியை நரசிம்மராவ் தொடர்ந்தார்.

காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், நாட்டின் வளர்ச்சி நீடிக்கும் என்பதோடு, மத நல்லிணக்கத்துக்கும் பாதுகாப்பு கிடைக்கும்.

'யார் பிரதமராவார்கள்...? சோனியாவை ஏற்க முடியாதே!' என்று வாக்காளர்கள் யோசிப்பார்கள். காங்கிரஸுக்கு மட்டுமே அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. எனவே சோனியா பிரதமராவது அவ்வளவு சுலபமாயிராது. மதநல்லிணக்கக் கூட்டணி ஆட்சி அமைக்கும் பட்சத்தில், சமாஜ்வாதி கட்சி, கம்யூனிஸ்டுகள் போன்றோரின் ஆதரவுக்கு அவசியம் ஏற்படும். எனவே நல்லதொரு மதச்சார்பற்ற தலைவர், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரதமர் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பு இருக்கிறது.

பிரதமர் யார் என்பதை விடவும், கொள்கை என்ன என்பதே ஜனநாயகத்தில் மிக முக்கியம்.

மதநல்லிணக்கம் என்பதை இறுதி இலக்காகக் கொண்டு, வேட்பாளரைத் தேர்வு செய்யும் பொறுப்பு இன்று வாக்காளர்களுக்கு இருக்கிறது. அவசரப்படாமல், வாய் ஜாலத்தாலும், வசீகரிக்கும் செல்வாக்கினாலும் பாதிக்கப்படாமல், வாரி இறைக்கப்படக் கூடிய பணத்துக்கு அடிமையாகிவிடாமல், அவர்கள் நல்லாட்சிக்கு வாக்களிக்க வேண்டும். ○



அடுத்த குட்டு!

அபர்ணாவின் செல்பேசி எண்களை அழுத்தியதும் மறுமுனையில் "திஸ் இஸ் அபர்ணா" என்றார் வழிய வழிய ஐஸ்கிரீம் சாப்பிடும் சிறுமியின் குரலில். "எங்கே இருக்கீங்க? ஒரு பேட்டி வேணுமே" என்றால், "நான் இப்போ கொடைக்கானலில் இருக்கேன். அசோக் ஆர்.நாத் மலையாளத்தில் சூப்பர் ஹிட் இயக்குனர். அவரது டைரக்ஷனில் 'டிசம்பர்' என்ற படத்தில் கடகட நடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். "என்னங்க., அறிமுகப்படத்தி லேயே 'சுள்ளான் ஸ்டாருடன்' (அதாங்க! நம்ம தனுஷுக்கு விவேக் தந்திருக்கும் லேட்டஸ்ட் டைட்டில்) ஜோடி சேர்ந்து நடிச்சும் தமிழில் வாய்ப்பில் லையா?" என்றதும், "யார் சொன்னது?" என்று அதட்டிவிட்டுச் சொன்னார், "பாலுமகேந்திரா சார் கூப்பிட்டு போட்டோ செஷன் பண்ணியிருக்கிறார். அடுத்த குட்டு அவரது மோதிரக் கையால்தான்" என்று அடித்துச் சொன்ன அபர்ணா, அமெரிக்காவில் ஆறுமாத கால டிஜிட்டல் போட்டோகிராபி படிப்பை முடித்துவிட்டு வந்திருக்கிறாராம். எதற்கு இந்தப் படிப்பென்றால், "பாலுமகேந்திரா வின் படத்தில் நடித்துக் கொண்டே அவரிடம் உதவி இயக்குனராகப் பணிபுரியவும் வாய்ப்புக் கேட்டிருக்கிறேன்" என்று ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கப் போகும் ரகசியத்தை உடைத்தார்!

- ஸ்ரீ

ஆழம், அற்புதம்!

வட்டமேஜை

✉ 'மோடி வளர்க்கும் முரட்டு அரசியல்!' தலையங்கம் மிக அருமை. கோத்ரா தூர்ச்சம்பவத்திற்குப்பின் உண்டான குஜராத் கலவரங்களின்போது, பிரதமர் வாஜ்பாய் ஓரிடத்தில், ராஜதர்மம் பற்றிப் பேசி மோடியைச் சாடினார். வேறோரிடத்தில் சிறுபான்மையினரைக் குறை கூறி, மோடியின் செயலை நியாயப்படுத்தினார். பெஸ்ட் பேக்கரி வழக்கினை வேறு மாநிலத்துக்கு மாற்றி, குஜராத் அரசை உச்ச நீதிமன்றம் கண்டித்ததைப் பிரதமர் கண்டு கொள்ளவுமில்லை; கண்டிக்கவுமில்லை! பிரதமரே இரட்டை நாக்கில் பேசினால், சங்பரிவார் அமைப்புகளின் அட்டூழியங்களும், மோடிகளின் முரட்டு அரசியலும் தொடரத்தானே செய்யும்!

பெருமாள் தேவன்பட்டி, எஸ். அசாதி

✉ அயோத்தி பிரச்னை பற்றிய கேள்விக்கு, கடல்நீரை உவமானமாகக் காட்டி பங்காரு அடிகளார் அளித்த பதில் ஆழமானது, அற்புதமானது!

அயன்புரம். த.சத்தியநாராயணன்

✉ சீதா ரவி எழுதிய 'சாயாதேவி எழுதாத காதல் கதை' சிறுகதை படித்தேன். நிச்சயம் இந்தக் கதை நீண்ட நாள்களுக்கு எங்கள் மனதில் நிற்கும். அதிலும் குறிப்பாக, கோபுலு வரைந்த படத்தில், திலகா பாத்திரம் எங்கள் முன் உயிர்பெற்று வந்ததைப் போல் இருந்தது.

ஈரோடு. இரா.வி.சௌந்தர்யா விசாலினி

✉ கோடை விடுமுறையில் யாத்திரை செல்வது சகஜம். ஆனால், அதையும் உபயோகமாக புண்ணியம் தேட யோசனை அளித்து, மினி கல்கி மூலம் உதவியும் செய்த கல்கிக்கு, ஆயிரம் கோடி நமஸ்காரங்கள்.

சென்னை. ஆர்.நாகராஜன்

✉ வட்டமேஜை பகுதியின் சிறப்புக் கடிதத்திற்கு ஒரு பிசியோதெரபிஸ்ட் என்ற முறையில் மிகுந்த ஆட்சேபத்தைத் தெரிவிக்கிறேன். கால்கள் செயலிழந்து போன ஒருவர் எழுந்து, நடந்து சமூகத்தில் மீண்டும் ஒரு மனிதனாகக் கருதப்படும்போது, அவர் கண்களில் தெரியும் கண்ணீரையும், நன்றியையும் ஒரு பிசியோதெரபிஸ்ட்டால் மட்டுமே உணர முடியும். மேலும் சிறப்புக் கடிதத்தில் கூறப்பட்டதுபோல், பி.பி. இல்லாமல், ஷுகர் கண்ட்ரோலில் இருந்தால் ஸ்ட்ரோக் வராது என்று முடிவு செய்து விட முடியாது. ஸ்ட்ரோக் வருவதற்கு பிறவகையான காரணிகளும் உண்டு.

சி. சிந்தியா சுவர்ணலதா,
(சீனியர் விரிவுரையாளர் பிசியோதெரபி)
கோத்ரா (குஜராத்)



✉ 'குழந்தைகள் அமைத்த கூட்டணி' என்ற கட்டுரையில் வெயிலுக்குப் பாதுகாப்பாகப் பிடித்திருந்த குடைகளில், மதுபான விளம்பரம் அச்சிடப்பட்டிருந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளீர்கள். குடைகளை அயல்நாட்டு மதுபான நிறுவனம் ஸ்பான்ஸர் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள். எங்கள் இயக்கத்தின் சார்பில், குழந்தைகள் வெயிலில் சிரமப்படக்கூடாது என்ற நல்ல நோக்கத்தில், ஒவ்வொருவருக்கும் ஒரு குடை, சென்னையில் உள்ள கடை ஒன்றில் இருந்துதான் வாங்கிக் கொடுத்தோம்.

என்.ராதா, மாநில அமைப்பாளர்,
குழந்தை உழைப்பு எதிர்ப்பு
பிரசாரம் - தமிழ்நாடு

(கருத்துடன் குடை வாங்கியவர்கள், மதுபான விளம்பரமிட்ட குடைகளைத் தவிர்த்திருக்கலாம்.)

- ஆர்.

காலச்சுவடு
மாத இதழ்

தமிழ் இலக்கியத் தளத்தில் முனைப்புடன் செயல்பட்டுவரும் காலச்சுவடு மே 2004 முதல் மாத இதழாகிறது.

புதிய பகுதிகளோடு
ஒரு புதிய பயணம்

1987இல் சுந்தர ராமசாமியால் துவக்கப்பட்ட காலச்சுவடு, தமிழ் இலக்கியம், கலைகள், சிந்தனை சார்ந்த இடையறாத தேடலுடன், தீவிர இதழியலில் அழிக்க முடியாத சுவடுகளைப் பதித்துவருகிறது.

தமிழின் முக்கியமான படைப்பாளிகள் மட்டுமல்லாது, பிறமொழிப் படைப்பாளிகளும் இதழில் தொடர்ந்து பங்களிக்கவிருக்கிறார்கள்.

யு. ஆர். அனந்தமூர்த்தி (கன்னடம்)   பால் சக்கரியா (மலையாளம்)

ஆகியோருடன்

அம்பை   சுந்தர ராமசாமி   களந்தை பீர் முகம்மது
அ. முத்துலிங்கம்   ரவிக்குமார்   அனந்த கிருஷ்ணன்

போன்ற தமிழின் முக்கிய ஆளுமைகளும் தொடர்ந்து எழுதுகிறார்கள்.

பிரெஞ்சுப் படைப்பாளிகள், படைப்புகள் மற்றும் சிந்தனைகளை அறிமுகப்படுத்தி செவாலியே வெ. ஸ்ரீராம் எழுதுகிறார்.

படைப்புகள், திரைப்படம், சமூகம், அரசியல் சார்ந்த விவாதங்கள், நேர்காணல்கள், ஊடகங்கள் குறித்த பார்வை ஆகியவற்றுடன் புதிய சவால்களையும் புதிய எல்லைகளையும் எதிர்நோக்கித் தன் பயணத்தைத் தொடர்கிறது காலச்சுவடு.

பக்கங்கள் : 64   தனி இதழ் விலை ரூ. 15

ஆண்டுச் சந்தா : ரூ. 140; இரண்டாண்டுச் சந்தா : 225; ஐந்தாண்டுச் சந்தா : 600

வெளிநாடு : ஆண்டு : 600; இரண்டாண்டு : 1000; ஐந்தாண்டு : $ 75.

முகவர்கள் இல்லாத ஊர்களில் முகவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.
விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

முகவரி

தலைமை அலுவலகம் :
669, கே. பி. சாலை,
நாகர்கோவில், கன்னியாகுமரி - 1.
தொலைபேசி : 04652 - 278525
மின்னஞ்சல் : kalachuvadu@sancharnet.in

கிளை அலுவலகம் :
9/4, முசாபர் ஜங் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
தொலைபேசி : 044 - 31049832
மின்னஞ்சல் : kalachuvadu@yahoo.com

துண்டு

கந்தர்வன்



கந்தர்வன் கவிஞர், சிறுகதை ஆசிரியர். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்தவர். பல்வேறு விருதுகளைப் பெற்றவர். செம்மலரில் 1997ம் ஆண்டு வெளியான அவரது இந்தக் கதை இலக்கியச் சிந்தனைப் பரிசை பெற்றது.

அவர் வாசலில் நின்று வீட்டைப் பார்த்து, ''ஆத்தோவ்'' என்றார். ஆளடியிலும், பட்டகசாலையிலும் ஆள் நடமாட்டங்கள் தெரிந்தன. கூப்பிட்டதற்கு பதில் வரவில்லை. இது வெகுகாலப் பழக்கம் அவருக்கு. குத்துக்கால் வைத்து உட்கார்ந்து ஒரு வைக்கோல் துரும்பைத் தூக்கி அந்தப் பக்கம் போட்டார். அப்புறம் இந்தப் பக்கம் போட்டார். பத்து நிமிடங்களுக்கு துரும்போடு விளையாடிக் கொண்டேயிருந்தவர், எழுந்து வீட்டைப் பார்த்து மறுபடி ''ஆத்தோவ்'' என்றார்.

எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் பந்தோடு வெளியே ஓடி வந்தவன், ''அப்பத்தா, வேலு வந்திருக்கான்'' என்று வீட்டைப் பார்த்துக் கத்தி விட்டு விளையாட ஓடிப் போனான். ''சின்னய்யா எப்பொ வந்தீக?'' என்றார் அவர்.

''நேத்தே வந்துட்டோமே'' என்று சொல்லிக் கொண்டே ஓடி விட்டான் பையன். வீட்டிற்குள் சிரிப்பும் கனைப்புமாய்ப் பேச்சுச் சத்தங்கள் கேட்டன. வெளியில் யாரும் வரவில்லை. பத்து நிமிடங் கழித்து மறுபடி எழுந்து, ''ஆத்தோவ்'' என்றார்.

''இவன் ஏன் இந்தக் கத்துக் கத்துறான். என்னன்னு வந்து கேளுங்க'' என்று உள் வீட்டைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே அந்த அம்மாள் 'நேத்துச் சொல்லி விட்டதுக்காடா பய மகனே இண்ணைக்கு வாரெ'' என்றும் கேட்டுக் கொண்டே, அடுத்த வீட்டைப் பார்த்து நடந்தாள். இவர் மேல் துண்டை எடுத்து முழங்கையில் போட்டுக் கொண்டு நின்றார்.

பிடித்த பிடி சங்கிலிகளோடும் பல்லாயிரம் ஆண்டுச் சிவப்புக் கால்களோடும் அந்த அம்மாள் நடந்து மறைந்ததும், இவர் முழங்கைத் துண்டை எடுத்து மேலே போட்டுக் கொண்டு வீட்டைப் பார்த்து நின்றார். சிறிது நேரத்தில் பட்டும் பவுடருமாய் சின்னப் பேத்தியின் கையைப் பிடித்துக் கொண்டு அம்பலக்காரர் வந்தார். வழுவழுவென்ற திண்ணையில் அமர்ந்து சாய்தளத்தில் முதுகைச் சாய்த்தார். வேலு மேல் துண்டை இறக்கி முழங்கையில் போட்டுக் கொண்டு, கையிரண்டையும் தலைக்கு மேல் வைத்துக் கும்பிட்டார்.

''இதப்பாருடா, இவங்கல்லாம் நேத்து வந்து எறங்கிட்டாங்க'' என்று சிவப்பும் அழகுமான பேத்தியைக் காண்பித்தார் அம்பலக்காரர்.

''ஆத்தா போன தடவைக்கு இப்ப வளந்துட்டாக.''

''என்ன வளத்தி போ. வந்ததிலெருந்தே இதுக மொகங்க நல்லாயில்லே.''

''ஆத்தா சிரிச்சு மொகமாவுலெ இருக்காக.''

''வேலு, எங்க வீட்டுப் பண்ணைக்காரன் வயித்திலெ குளுமையைக் கட்டிக்



கிட்டாண்டா. ஒரு படி அரிசிச் சோறையும் தின்னப் பொறகு தான் எதிரெ யார் வந்து சோறு போடுறாகன்னு பாக்கிறான். போட்டா இங்க, ஏத்தினா சொமக்கனு எனக்கு ஒரு ஆளு கெடச்சான் பாரு. உழுக, மாடு மேய்க்க, பருத்திக் கொட்டை அரைக்கனு மொரட்டு வேலைகளுக்குத் தாண்டா அவன் லாயக்கு. அவன்ட்ட நாருக்குக் கெடையாதுடா வேலு."

"சாமி"

"போன வருடம் வந்தப்ப இந்த வாசல் தாண்டி, அந்தா அங்கனெ பேரப் புள்ளெ வெளையாண்டாரு. ஒரு கல்லுத் தடுக்கிக் கீழே விழுந்து சில்லு மூக்குப் பேந்து போச்சு. மொத வேலையா அந்தா அங்கெயிருந்து இங்கே வரை மேடு பள்ளமில்லாம இந்த எடம் பூராவையும் சரி பண்'' என்று சொல்லிக் கொண்டே, திண்ணையில் கிடந்த மண் வெட்டியை யெடுத்து திண்ணைப் படியில் வைத்தார்.

வேலு முழங்கையில் கிடந்த துண்டை எடுத்துத் தலையில் கட்டிக் கொண்டு மேடுகளைத் தரிக்க ஆரம்பித்தார். கடுத்த வாசனையோடு மண் விரவியது. சிறு கூழாங்கற்கள், செத்தை, குப்பைகள் என்று வேண்டாதவைகளை மண் வெட்டியைப் பக்கவாட்டில் இழுத்துக் கோதிக் கோதிக் காய்ந்து கிடந்த வாரியில் வீசினார். வெயில் மட்டுமில்லையென்றால், தரையை மிதிக்கிறோமா, பூவை மிதிக்கிறோமா என்கிற மாதிரி, அவர் கைப்பக்குவத்தில் அந்த இடம் பூராவும் ஆகிப் போனது.

எது ஒன்றும் நேர்த்தியாக அமைய வேண்டுமானால் வேலுவைத்தான் கூப்பிடுவார்கள்.

கயிறு பிரித்தும் அறுந்தும் கருவாடாய்க் கிடக்கும் கட்டிலைப் பின்ன வேலுவுக்கு ஆள் போகும். கயிற்றுப் பிரியோடு வேலு கட்டிலுக்கு குனியும் போது முத்தமிடுவது போல் தோன்றும். பின்னும் அழகை ஜனம் கூடி ரசிக்கும். பின்னி முடித்துக் கயிற்றைத் தட்டும் போது வில்லைத் தட்டுவது போலிருக்கும், கிண்கிண் எனும் ஒலி.

பயிர்க்குழிக்குப் பந்தல் கட்டப் போனால் வேலு முதலில் ஐந்தாறு குழிகளையும் கண்ணால் அளப்பார். பச்சை மரங்களில் கசப்பு மரங்களைத் தொட மாட்டார். அது காய்ப்பிற்குக் கேடு என்பார். மதுரமான மரங்களி

விருந்து கொப்புகளைத் தரித்து வருவார். விச்சரிவாளால் பத்துக் கம்புகளை இலைகளையும் கிளைகளையும் நீக்கி வரிசையாய்ப் போடும் போது, ஒன் போல் அளவில் இருக்கும் எல்லாமும்.

குழிதோண்டிக் கம்பூன்றி மேலே பந்தல் கம்புகளை கட்டி முடித்துக் கீழே வெளியே வரும்போது அப்படி ஒரு நறுவிசாக இருக்கும்.

காவணம் போட, நிரைச்சல் மேய, படப்புப் போட என்று வேலு எதைச் செய்தாலும், செய்கிற போது பார்த்துக் கொண்டேயிருக்கத் தோன்றும்.

வேலு வாசல் வெளியைக் கண்ணாடியாக்கி முடித்த போது, வெயில் எல்லாவற்றையும் பொருபொருவென்றாக்கிக் கொண்டிருந்தது. மண்வெட்டியைப் படிமேல் வைத்தார். தெப்பமாய் நனைந்து கிடந்த உடம்பைத் தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்துத் துடைத்தார். அம்பலக்காரர் உள்ளேயிருந்து வந்து செருப்பை மாட்டிக் கொண்டு, வெயிலைச் சற்றும் மதிக்காமல் நின்றார்.

உள்ளே பார்த்து, "வேலுவுக்குக் கஞ்சி ஊத்து" என்றார் அம்பலக்காரர். வேலு தொழுவத்துக் கூரையில் சொருகியிருந்த பண்ணைக்காரன் தட்டை எடுத்துக் கொண்டு வந்தார். உள்ளே கரியலும் பொரியலுமான வாசனை வந்தது. அந்த அம்மாள் முதல் நாள் பழையதைக் கொண்டு வந்து தட்டில் ஊற்றினார். அம்பலக்காரர் திண்ணையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்க, வேலு இடுப்புத் துண்டை அவிழ்த்து, சாணமும் மூத்திரமுமாய்க் கிடந்த தொழுவத்தின் ஒரு மூலையில் போட்டு, அதன் மேல் உட்கார்ந்து சாப்பிட்டார்.

முடிந்ததும் துண்டை எடுத்து முழுங்கையில் போட்டுக் கொண்டு திண்ணையருகில் வந்தார். அம்பலக்காரர் திண்ணையில் ஒருக்கனித்து உட்கார்ந்து கொண்டு, "வேலு, வீட்டுக்குப் பின்னாலெ நீர்த்தாரை தேங்கிக் கெடக்கு. அதை வகுந்துக் கொண்டு போய் வாரியிலே விடு" என்றார்.

கன்னங்கரேலென்று துர்நாற்றத்தோடு சின்னக் குளமாய்க் கிடந்தது அது. வேலு மண் வெட்டியைக் கீழே வைத்து விட்டு, முழங்கையில் கிடந்த துண்டை எடுத்துத் தலையில் கட்டிக் கொண்டு, வாரிப் பக்கமிருந்து வேலையைத் துவக்கினார்.


கறுப்புக் குளத்திற்கும் வாய்க்காலுக்குமிடையே ஒரு வெட்டுக்கு பாக்கி வைத்துவிட்டு, வாய்க்காலைத் தடவிக் கொடுத்துப் பிடித்து விடுவது போல் மண்வெட்டியால் நீவினார். ஒரு தடவை அங்கிருந்த இங்காக வாய்க்காலைக் கூர்ந்து பார்த்தார். முகத்தில் திருப்தி தெரிந்தது. பாக்கியிருந்த ஒரு வெட்டைப் பார்த்து, ஒரு வெட்டு விழுந்ததோ பூ விழுந்ததோ எனும்படி மண்வெட்டியால் போட்டார். அம்பலக்காரர் வீட்டுப் பெண்கள், ஆண்கள் குழந்தைகளின் அழுக்கு நீர், கரும்பாம்பு போல் வாய்க்காலில் ஓடி வாரியில் போய் விழுந்தது.

அம்பலக்காரர் சம்சாரம், "என்ன வேலு, வெட்டி முடிசாச்சா? இங்கெ வா. திண்ணையிலெ. ஐயா உன்னைக் கூப்பிடுறாக" என்றாள். வேலு துண்டை எடுத்து மேலெ போட்டுக் கொண்டு, மண்வெட்டியோடு சுற்றி வந்தார். அம்பலக்காரர் திண்ணையிலிருந்தார். அவரைப் பார்த்ததும், மேலே போட்டிருந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார்.

"வா எப்படி வெட்டியிருக்கெனு பாப்பம்" என்று சொல்லிக் கொண்டே படியிறங்கினார். பின்னால் கூடி நடக்கவும், வேலு முழங்கைத் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு, எதற்கும் இருக்கட்டுமென்று மண்வெட்டியையும் தூக்கிக் கொண்டு நடந்தார்.

அம்பலக்காரர் வாய்க்கால் வெட்டைப் பார்த்து, "அதோ அந்த வளை

மிஸ்டர் பாலம்!



ஓய்வு பெற்றதும் வீட்டுக்குள் உட்கார்ந்து ஹாயாக நாட்களை ஓட்டாமல், கையில் பையுடன் வீதி வீதியாக ஸ்கூட்டரில் பறக்கும் ராமச்சந்திரனை சென்னை வாசிகள் பார்த்திருக்கலாம்.

கையில் இருக்கும் அறுநூறு கார்டுகளைப் பார்த்து, விலாசம் தேடி, மாடியானாலும் ஏறி ஏறி, பையுடன் இறங்கி, அடுத்த முகவரி தேடி...

துளியும் அலுத்துக் கொள்ளாமல், இரண்டு வருடங்களாக, பிடி அரிசித் திட்

டத்தில் தம் உடல் உழைப்பை மனதார வழங்கி வரும் இவர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முன்னாள் அலுவலர்.

"அறுநூறு குடும்பங்கள் மனமுவந்து பிடி அரிசித் திட்டத்துக்கு உதவ முன் வரும்போது, நான் ஒரு பாலம் போல இருந்து பலரும் பசியாற உதவலாம் அல்லவா?" என்கிறார் ராமச்சந்திரன்.

"நமக்காகச் செய்வதில்லை. பிறருக்காகச் செய்கிறோம் என்கிறபோது உழைப்பில் உற்சாகம் இன்னும் கூடுகிறது. சொந்த கஷ்ட - நஷ்டங்கள் பெரிதாகத் தெரிவதில்லை" என்கிறார் ராமச்சந்திரன்.

- சித்தார்த்

விலே ஒரு போடு போட்டு மண்ணைப் பேரு; சிக்குது பாரு" என்றார். வேலு இடுப்பிலிருந்த துண்டை எடுத்துத் தலையில் கட்டிக் கொண்டு, அம்பலக்காரர் வம்புக்காகச் சொன்ன இடத்தில் மண் வெட்டியால் ரெண்டு போடு போட்டு விட்டு வந்து, தலைத்துண்டை அவிழ்த்து முழங்கையில் போட்டுக் கொண்டு நின்றார்.

"இங்கெ வா" என்று கூப்பிட்டு விட்டு, வீட்டிற்குள் போய் ஒரு அரிவாளோடு வெளியே வந்தார். விறுவிறுவென்று படப்புக் கொல்லைப்பக்கம் நடந்தார்.

கொல்லையில் கலக்கம் கலக்கமாய் நிற்கும் நாலு பனை மரங்களையும் அம்பலக்காரர் அண்ணாந்து பார்த்தார். மரத்தில் பச் பச்சென்று மூன்று குலை நுங்கு கிடந்தன. "இதையெல்லாம் டவுன்லெ எங்கனெ வாங்கி சாப்பிடப் போறாங்க. அந்த மூணு குலைகளையும் வெட்டுடா வேலு" என்றார்.

வேலு முழங்கையில் கிடந்த துண்டை எடுத்துத் தலையில் கட்டிக் கொண்டார். அரிவாளை வாங்கி இடுப்பில் செருகினார். சூட்டில் கொதித்து அவரைப் போலவே கறுப்பாய் நிற்கும் பனை மரத்தில், கிருகிருவென்று ஏறினார். வெகு தூரத்தில் போய்ச் சின்னச் செடியருகில் போதாத நிழலுக்குள் நின்றார் அம்பலக்காரர். அப்படியும் குலைகள் கீழே விழுந்து ஒரு காய் தெறித்து, அவர் கால்வரை வந்து விட்டது.

வேலு மரத்திலிருந்து இறங்கத் துவங்கும்போது அம்பலக்காரரும் நடந்து அருகில் வந்தார். கீழே இறங்கியதும் அம்பலக்காரர் முன்னால் வேலு தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு நுங்குக் குலைகளைச் சேர்த்தார்.

எல்லா நுங்குகளையும் அள்ள வேண்டி வந்தபோது, இடுப்புத் துண்டை அவிழ்த்துத் தலையில் கட்டிக் கொண்டார். வீட்டிற்குப் போய் சாக்கு வாங்கி வந்து, அவ்வளவையும் அள்ளித் திண்ணையில் போட்ட போது,

"இந்தாடா வேலு" என்று ரூபாய் நோட்டை நீட்டினார். திண்ணைக்குக் கீழே நின்று, இரண்டு கைகளையும் முறம் போல் விரித்து வாங்கிக் கொண்டார். "வேலு, நாளைக்கு விடியக் காலமெ வந்திரு. இங்கெயெ கஞ்சி குடிச்சிக்கிரலாம். நாலஞ்சு வேலைக கெடக்கு. மறக்காம வந்திரு" என்றார்.

வேலு முழங்கைத் துண்டோடு நடந்து, தெரு தாண்டிப் போய்த் துண்டை விரித்து மேலே போட்டுக் கொண்டார்.

மறுநாள் காலையில் அம்பலக்காரர் வீட்டு வேலைக்காகக் கிளம்பி வெளியே வந்த போது அவர் சம்சாரம், "என்ன துண்டை மறந்துட்டுப் போறெ. இந்த மணத்துக்கிட்டுக் கெடக்கு. எடுத்துக்கிட்டுப் போ" என்றாள். வேலு தலையில் கிடந்த பத்துப் பதினைந்து செம்பட்டை முடியைத் தடவிக் கொண்டே சொன்னார் : "இந்தத் துண்டுக்கு எழவு கூட்டத்தான் நேரஞ் சரியாயிருக்கு. தலையிலெ கட்டுறது; ஆளைக் கண்டா அவுத்து மொழங்கையிலெ போடுறது; இடுப்பிலெ கட்டுறதுனு, இதுக்கே பொழுது சரியாயிருக்கு. துண்டே வேணாம். நான் போறேன்."

அம்பலக்காரர் திண்ணையில் வந்து உட்கார்ந்து முதுகைச் சரித்துக் கொண்டு பார்த்தார். வேலு எதிரில் இளம் வெயிலில் நின்றார். அவர் வெகு நேரம் உற்றுப் பார்த்து விட்டு, உள்ளே போய் ஒரு புதுத் துண்டைப் பெட்டியிலிருந்து எடுத்துக் கொண்டு வந்தார்.

"இந்தாடா வேலு. துண்டில்லாம நல்லா இல்லெடா ஒனக்கு. இதை வைச்சுக்கோ அப்பதான் அம்சமா இருக்கும்." ●

தலைவர்களை நேரில் பார்க்கும் ஆர்வம் தொலைக்காட்சி புண்ணியத்தால் மழுங்கி விட்டது

தேசிய கட்சித் தலைவர்கள் ஒவ்வொரு தேர்தலின்போதும் மாநிலங்களுக்குப் பிரசாரம் செய்யப் படையெடுப்பது, சடங்காகிவிட்டது. கண்ணாடியைப் பார்க்கும்போதெல்லாம் முகத்தைச் சரி செய்து கொள்வது மாதிரி அர்த்தமற்ற சடங்கு. திருத்திக் கொள்வதால் முகம் வேறாகிப் போய்விடுமா என்ன?

தேசியத் தலைவர்களின் மாநிலங்கள் நோக்கிய படையெடுப்பு, அவர்களது கூட்டணிக்கு அதிக வாக்குகளைப் பெற்றுத் தருமா? இவர்களது பேச்சைக் கேட்க வரும் கூட்டம் வாக்குகளாக மாறுமா? என்பது ஆராய்ச்சிக்குரியது.


"தேசிய அரசியலில் நேரு குடும்பத்தோடு அந்த விஷயம் முடிந்து போய்விட்டது. நேரு ஓரிடத்துக்கு வருகிறாரென்றால், அவர் பேசும் மொழி புரியாவிட்டால் கூட, அவரது அழகான உச்சரிப்புக்கும், உருவத்துக்கும் வசியப்பட்டே ஏகப்பட்ட கூட்டம் வரும். இதே போல்தான் இந்திராவுக்கும், ராஜீவுக்கும். இவர்களிடம் மக்களை ஈர்க்கும் கவர்ச்சி இருந்தது. இந்தக் கவர்ச்சி, வாக்குகளாக மாறியது. இன்றைய தலைவர்களிடம் அது மைனஸ்தான்..." என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, மாநிலக் கட்சிகளைச் சார்ந்துதான் தேசிய கட்சிகள் இருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தல் என்றாலுங்கூட வாஜ்பாயோ, அத்வானியோ, சோனியாவோ இங்கு வந்தால், அ.தி.மு.க. அல்லது தி.மு.க. கட்சிக்காரர்கள்தான் இவர்களுக்கான பார்வையாளர்களாக அதிகம் காணப்படுவார்கள். அத்வானி அல்லது வாஜ்பாய்க்கோ, சோனியாவுக்கோ சொந்த செல்வாக்கு இங்கு குறைவுதான் என்கிற





தொண்டர்களுக்கு



• பி.சி. கணேசன்



• அ. மார்க்ஸ்



• காளீச்சரண்



• ஆர்.எம்.வீரப்பன்

கருத்தையும் மறுக்க முடியாது.

அப்படித் தனிப்பட்ட செல்வாக்கு இருக்குமானால், அத்வானி கன்யாகுமரியில் ரதயாத்திரையைத் துவங்கிய போதும், கோவை வந்த போதும் பெருந்திரளான கூட்டம் வந்திருக்க வேண்டும். ஆனால், ஜெயலலிதாவின் தேர்தல் கூட்டங்களுக்கு வருகிற அளவு கூட்டம் கூட, அத்வானியின் அந்த நிகழ்ச்சிக்குச் சேரவில்லை.

"1971ம் ஆண்டு, கருணாநிதி, காங்கிரஸுடன் கூட்டணி வைத்தார். சுதந்திரா கட்சியை நடத்திய ராஜாஜி, ஸ்தாபன காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்த காமராஜருடன் கூட்டணி வைத்து, மெரீனாவில் பெரிய பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினார். தமிழகம் அதுவரை காணாத கூட்டம் திரண்டிருந்தது. ஆனால் நடந்த சட்டசபைத் தேர்தலில் காமராஜர், ராஜாஜி கூட்டணி பெற்றது வெறும் பதினைந்து இடங்கள்தாம். கூட்டத்தை வைத்து வாக்குகளை மதிப்பிட முடியாது; கூடாது" என்கிறார் பி.சி. கணேசன்.

தலைவர்களின் கருத்துகளைக் கேட்டு, அவர்கள் சொல்லும் விஷயத்தைப் பொறுத்து வாக்களித்த மக்கள், கடந்த பதினைந்து வருடங்களுக்கு முன்புவரை இருந்தார்கள். ஆனால் இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது. தலைவர்கள் பேசும் விஷயங்களை எடைபோட்டு முடிவெடுப்பதற்கெல்லாம் யாருக்கும் பொறுமை இல்லை. தலைவர்களும் அவ்வாறு சித்தாந்த அடிப்படையில் சிந்தையைத் தூண்டும்படி பேசுவ

'டானிக்!'

இல்லை. காந்தியை வன்முறைக்கெதிரானவர் என்றும், காமராஜரை ஏழைப்பங்காளன் என்றும், அண்ணாவைத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி என்றும் அடையாளப்படுத்தி வைத்திருந்தார்கள் மக்கள். அதனால்தான் அவர்களது கருத்துகளைக் கேட்க மக்கள் அலைந்தார்கள். இன்று எந்த அடிப்படையில் தலைவர்களை அடையாளப் படுத்துவது?

"முன்பெல்லாம் பொதுக் கூட்டங்கள் மட்டுமே பிரசார சாதனமாக இருந்தன. இன்று மீடியா நிமிடத்துக்கு நிமிடம் தகவல் சொல்கிறது. தலைவர்களை நேரில் பார்க்கும் ஆர்வம், தொலைக்காட்சி புண்ணியத்தால் மழுங்கி விட்டது" என்கிறார் ஆர்.எம்.வீ.

"கூட்டம் சேர்ந்து அது வோட்டாகவும் மாறியது, எம்.ஜி.ஆருக்கு நடந்தது. அந்த அளவுக்கு வேறு தலைவருக்கு ஏற்படவில்லை..." என்கிறார் அவர்.


வட இந்தியத் தலைவர்கள் இங்கு வருவது முக்கியமாகத் தொண்டர்களை உற்சாகப்படுத்தத்தான். அப்படி வரும் போது, கூடியிருக்கும் கூட்டத்தையும் தலைவர்களின் பேச்சையும் மீடியா வெளியிடும்போது, 'இவ்ளோ கூட்டமா?' என்று வியப்புறுகிற சில வாக்காளர்கள், அந்தக் கூட்டத்தால் வசியப்பட்டு வாக்களிக்கிறார்கள். மற்றபடி தேசியத் தலைவர் வருகையால் வாக்காளர்களின் சிந்தனை அலை, திசை திரும்புவதெல்லாம் இயலாதது.

இந்தக் கருத்தை மறுக்கிறார் லயோலா கல்லூரியின் பண்பாடு மக்கள் தொடர்பு மைய உதவி இயக்குனர் காளீச்சரண். "தேசியத் தலைவர்களின் வருகை தொண்டர்களை மட்டுமல்ல, மக்களையும் மனம் மாற்றும்" என்கிறார்.


"தமிழகம் மற்றும் புதுவை நாடாளுமன்ற தொகுதிகளுக்குச் சென்று, கருத்துக் கணிப்பை நடத்தி முடித்திருக்கும் இவர், "இந்த நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்த வரை, வாஜ்பாயை விட சோனியாவுக்கான வரவேற்பு அதிகரித்திருக்கிறது. அவர் மேலான மரியாதையும் கூடியிருக்கிறது. இந்தச் சமயத்தில் அவர் தமிழக தொகுதிகளில் பிரசாரம் செய்தால், வாக்குகள் அதிகரிக்கும். எனினும், எல்லாத் தேர்தல்களிலும் இதுபோல் தேசியத் தலைவர்கள் வரவால் அவர் கட்சிக்கு வோட்டு அதிகரிக்காது; அது வேறு பல சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும் பொறுத்தது" என்கிறார்.

இதே கருத்தைத்தான் பேராசிரியர் அ.மார்க்ஸும் சொல்கிறார்.

"தமிழக அரசியல் களம் வித்தியாசமான ஒன்று. இங்கு தலைவர்கள் பேசும் பேச்சுக்குத் தனிக் கவனம் உண்டு. இருந்தாலும் தேசியக் கட்சித் தலைவர்கள் இங்கு பிரசாரம் செய்ய வருவதால் வாக்குகள் அதிகரிக்குமா, என்பதைக் கணிப்பது கஷ்டம். அது அந்தந்தக் கால அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தது. இன்றைய நிலையில், சோனியா அந்நியர் என்ற பிரசாரம் எடுபடாத மாநிலம் தமிழகம்தான். பெரியார் மற்றும் திராவிடக் கருத்துக்கள் ஊறிப் போயிருக்கிற தமிழகத்தில், பா.ஜ.கவின் கொள்கைகள் காலூன்ற முடியவில்லை. அதற்கு மாற்றாக இங்கு சோனியாவுக்கான செல்வாக்கு அதிகரித்திருக்கிறது என்பதே என் கருத்து. இந்தச் சூழ்நிலையில் அவர் பிரசாரம் செய்ய வந்தால் நிச்சயம், அதிக வாக்குகளைப் பெற முடியும்" என்கிறார் இவர்.



• சண்முகநாதன்



• அசோக்குமார்



• குஞ்சிதபாதம்

"எந்த தலைவர் வந்தால் என்ன சார்? எல்லாம் சந்தர்ப்பவாதக் கூட்டணி என்பதால், எதிரணியினர், போன முறை இதே தலைவர்கள் ஒருத்தரையொருத்தர் திட்டிக் கொண்டதை எடுத்து விடுவாங்க... இன்றைய பிரசாரம் அதுல சுத்தமா அடிபட்டுப் போகும். போதாக் குறைக்கு பிராக்ஸி யுத்தம் வேற டெய்லி டி.வியில் (சன் Vs ஜெயா) நடக்குது.. இதையெல்லாம் பார்த்து. மனுஷன் வோட்டுப் போட முடியுமா...? அவங்கவங்க மனசுல கட்சிகளுக்கும் அவை நடத்திய ஆட்சிக்கும் ஒரு மதிப்பெண் போட்டு வைச்சிருப்பாங்க... அதை அடிப்படையா வைச்சு தான் வோட்டுப் போடுவாங்க..." என்கிறார் முது பெரும் வாக்காளரான கே. குஞ்சிதபாதம். இவர் ஓய்வு பெற்ற ஹெல்த் இன்ஸ்பெக்டர்.


பெருந்தலைவர்கள் வருகையால் தொண்டர்களின் உற்சாகம் நிச்சயமாக வைட்டமின் இன்ஜக்ஷன் பெறுகிறது. கூட்டணியின் முக்கியப் புள்ளிகள் ஒரே மேடையில் ஒற்றுமையைப் பறைசாற்றும் போது, மனவியல் ரீதியாக உற்சாகம் ஊட்டப்படுகிறது. இதை ஆமோதிக்கின்றனர் பா.ஜ.க. தொண்டரான அசோக்குமாரும் காங்கிரஸ் ஆதரவாளரான சண்முகநாதனும்.

- ஏக்ஜி

படங்கள் : ஸ்ரீஹரி

புக்பேங்க்

இறவாக் காவியம்!




• ரவி ஆறுமுகம்

• படம் : ஸ்ரீஹரி

ஸ்ரீ அரவிந்தர் எழுதிய 'ஸாவித்ரி' காவியத்தை தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார் ரவி ஆறுமுகம்.

''மகாபாரதத்தில் எழுநூறு வரிகளில் வருகிற ஸாவித்ரி கதையை, அரவிந்தர் இருபத்து நான்காயிரம் வரிகளில் காவியமாகப் படைத்திருக்கிறார். அதை இரண்டு வால்யூம்களாக, ஆயிரத்து நானூற்றி ஐம்பது பக்கங்களுக்கு மொழி பெயர்த்திருக்கிறேன்'' என்கிற ரவி ஆறுமுகம், இதற்காக இரண்டரை வருடங்கள் செலவழித்திருக்கிறாராம்!

''இதயம் அள்ளும் இந்த இறவாக் காவியத்தை அரவிந்தர் வளமான ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். ஒரு பக்கத்தை மொழி பெயர்க்க, இருபத்தைந்து முறை படித்திருக்கிறேன். கிரேக்க, பிரெஞ்ச் புராணங்களையும் தெரிந்திருக்க வேண்டியதாக இருந்தது. தமிழில் இரண்டு மந்திர நூல்கள் உண்டு. ஒன்று கந்தரனுபூதி, மற்றொன்று திருமந்திரம். இரண்டும் முறையே, அருணகிரிநாதர், திருமூலரால் அனுபூதி நிலையிலேயே அருளிச் செய்யப்பட்டவை. அந்த வரிசையில், யோக அனுபூதி நிலையிலிருந்து அரவிந்தர் அருளிச் செய்தது சாவித்ரி. இந்த ஸாவித்ரியைப் பாராயணம் செய்து வந்தால், மந்திர முழக்கத்துக்கான சக்தியைப் பெறலாம்னு அன்னை சொல்றாங்க. அப்படிப்பட்ட ஒரு நூலை, தமிழில் மொழிபெயர்த்திருப்பது, எனக்குக் கிடைத்திருக்கிற கௌரவமாகக் கருதறேன்'' என்கிறார் ரவி ஆறுமுகம்.

நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, பாண்டி பஜார், சென்னை - 17 விலை: ரூ. 1200/-

-- அப்பு

ஜன்னலோரச் சிறகுகள் - கலைமதி ஆனந்த்

பேசப்படாத தொனியில், உணரப்படாத பொருள் பலவும், திட்டப்படாத வடிவில் வடித்த வாழ்க்கைக் கவிதைகள். வார்த்தைகளின் வடிவமைப்பில் பெண்மை தெரிந்தாலும், வாசிக்கும் போது ஆழத்திலிருக்கும் ஆளுமை புரிகிறது.

காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024. விலை : ரூ. 65/-

ஜானு - பாஸ்கரன் தமிழில் எம்.எஸ்

அடிமைப்படுத்தப்பட்ட ஆதிவாசிச் சமூகத்திலிருந்து கிளம்பி, அதிகாரவர்க்கத்தை மட்டுமின்றி, அரசையே அசைத்துப் பார்த்த கேரளாவைச் சேர்ந்த ஸி.கே. ஜானுவின் வரலாறு.

காலச்சுவடு பதிப்பகம், 669. கே.பி. சாலை, நாகர்கோவில் - 629 001. விலை : ரூ. 40/-

- விஷ்வக்





கோஷ்டிப் பூசலில்





• அ. ராஜசேகரன்

கடுமையான போட்டிச் சூழலில் சூடாகியிருக்கிறது சேலம் நாடாளுமன்றத் தொகுதி. இத்தனைக்கும் காங்கிரஸ் வேட்பாளர் அளவுக்கு, அ.தி.மு.க வேட்பாளர் பிரபலம் இல்லாதவர் என்றாலும், இரண்டு கட்சிகளிலும் கோஷ்டிப் பூசல்கள் வெடித்துக் கிளம்பியும், மறைந்து நின்றும் செயல்படுகின்றன.

அ.தி.மு.க.வில் கடந்த முறை வெற்றி பெற்ற செல்வகணபதிக்கு இந்த முறை வாய்ப்பு தரப்படவில்லை. தற்போது தேர்தல் பொறுப்புகளிலும் அவருக்கு முக்கியத்துவம் இல்லாதிருந்தது. இதனால், அதிருப்தியிலிருந்த அவரது ஆதரவாளர்கள் 'தேர்தல் வேலைகளில் ஒதுங்கியே இருந்து வந்தனர். 'அம்மா'வின் சேலம் வருகைக்குப் பின்னர் நிலைமை கொஞ்சம் மாறியிருக்கிறது.

காங்கிரஸ் தரப்பில் தொகுதி பிரமுகரான ஆர்.ஆர். சேகரனுக்கு சீட் தரப்படவில்லை. கே.வி. தங்கபாலுவுக்கு சீட் தந்ததில், தொகுதிக்குள் பெரும் அதிருப்தி. நொந்து போன தங்கபாலு, தி.மு.க மாவட்டச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகத்தைச் சந்தித்தார். அவர் ஆலோசனையின் பேரில் ஆர்.ஆர். சேகரனிடம் நேரில் சென்று ஆதரவு கோரினார் தங்கபாலு. இருப்பினும் காங்கிரசின் உட்கட்சிப் பூசல்கள் குறைந்தபாடில்லை.

ஓமலூர், ஏற்காடு, சேலம் ஒன்று, சேலம் இரண்டு, வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியது சேலம் நாடாளுமன்றத் தொகுதி. அ.தி.மு.க வேட்பாளர் மெடிக்கல் ராஜா என்கிற அ. ராஜசேகரன், சேலம் கிழக்கு மாவட்ட ஜெ. பேரவைச் செயலாளர். இவர் சந்திக்கும் முதல் தேர்தல் இது.

தற்போது சேலம் இரண்டு சட்டமன்றத் தொகுதி பா.ம.க வசமும், மீதமுள்ள ஐந்து சட்டமன்றங்களும் அ.தி.மு.க வசமுமே இருக்கின்றன. மொத்தம் பன்னிரண்டு லட்சம் வாக்காளர்கள். வன்னியர்கள் முப்பது சதவிகிதம். ஆதி திராவிடர்கள் இருபத்து மூன்று சதவிகிதம். இஸ்லாமியர் - கிறிஸ்தவர் பன்னிரண்டு சதவிகிதம். மற்றையோர் இதர சமூகத்தினர்.

சேலம் நாடாளுமன்றத் தொகுதியெங்கிலும் பரவலாக வன்னியர்கள் வாழ்ந்தபோதிலும், இங்கு பா.ம.க.வுக்கென தனியாக வாக்கு வங்கி குறிப்பிடும்படியாக இல்லை. பா.ஜ.க மற்றும் ம.தி.மு.கவின் நிலவரமும் சொல்லிக் கொள்ளும்படி இல்லை. கோஷ்டிப் பூசல்களால் காங்கிரஸ் பெற்று வந்த நிலையான வாக்குகளும் சிதறிப் போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொகுதி முழுவதுமாக அ.தி.மு.க வாக்கு வங்கி முதல் இடத்திலும், தி.மு.க வாக்கு வங்கி இரண்டாமிடத்திலும் இதுவரை இருந்து வந்துள்ளது. கடந்த மூன்றாண்டுக் கால அ.தி.மு.க அரசு மீது, அ.தி.மு.க வாக்கு வங்கியில் கணிசமானவர்கள் சற்றே

தவிக்கும் வேட்பாளர்கள்!

அதிருப்தி அடைந்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் 'கை' சின்னத்துக்கு மாறக் கூடும்.





• தங்கபாலு

சேலம் தொகுதியில் விவசாயமும், நெசவும்தான் முக்கியத் தொழில்கள். குச்சிக் கிழங்கு, மாம்பழம், வெற்றிலை போன்ற பணப் பயிர்கள் விளைந்து வரும் செழிப்பான மண் வளம். தொடர்ந்து மழைகளற்ற பாசன நீர்த் தட்டுப்பாட்டில், விவசாயம் பின் தங்கியே இருக்கிறது.

அடுத்து, நெசவுத் தொழில். சேலம் நாடாளுமன்றத் தொகுதி மட்டுமல்லாது, தமிழகம் எங்கிலும் இருக்கின்ற விசைத்தறியாளர்களிடையே பெரும் எதிர்ப்பைப் பெற்றுள்ளது மத்திய அரசு வசூலித்து வரும் சென் வாட் வரி.

"சேலம் உருக்காலையைத் தனியார் மயமாக்குவதைத் தடுப்பேன். சேலத்தில் ரயில்வே கோட்டம் அமைத்து, முக்கிய நகரங்களுக்கு நேரடி ரயில் வசதியை ஏற்படுத்துவேன். சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் பாசன வசதி கிடைக்க புதிய திட்டங்களைச் செயல்படுத்துவேன். சென்வாட் வரி போன்ற பிரச்னைகளை நீக்கி, ஜவுளி - நெசவுத் தொழிலைப் பாதுகாப்பேன்!" என்று காங்கிரஸ் வேட்பாளர் தங்கபாலு பிரசாரம் செய்து வருகிறார்.

ஓமலூர், ஏற்காடு, வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் அடங்கிய கிராமப்புறப் பெண் வாக்காளர்களிடையே, இரட்டை இலை, ஆதரவு இப்பொழுதும் அமோகமாகத்தான் இருக்கின்றது. அ.தி.மு.க வேட்பாளரின் வெற்றி நம்பிக்கையும் இங்கேதான் மையம் கொண்டுள்ளது. அ.தி.மு.க.வின் ராஜசேகரனுக்கு ஆதரவாக, அமைச்சர் செம்மலை மற்றும் முன்னாள் எம்.பி செல்வ கணபதி ஆகியோர் வாக்கு சேகரித்து வருகின்றனர். காங்கிரசின் தங்கபாலுவுக்கு ஆதரவாக, வீரபாண்டி ஆறுமுகமும், அவர் மகன் ஆ. இராஜாவும் தொகுதி முழுவதும் வாக்குகள் கேட்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட சதவிகித வாக்காளர்களிடையே தோன்றியுள்ள அ.தி.மு.க அரசு மீதான அதிருப்தி, விவசாயிகள் மற்றும் நெசவாளர்களின் ஆதரவு, குறைந்த சதவிகிதமே என்றாலும் கூட்டணிக் கட்சிகளின் வாக்குகள், தொகுதிக்குள் நிலையான பெரும்பான்மை, தி.மு.க வாக்குகள் - இவற்றைத்தான் காங்கிரசின் 'கை' பெரிதாக நம்பியுள்ளது.

காங்கிரஸ் கோஷ்டிப் பூசல் புயலில் தத்தளிக்கும் படகில் பயணம் செய்து வருகிறார் தங்கபாலு. வீரபாண்டியார் மற்றும் அவர் மகன் ஆ. இராஜா என்கிற தி.மு.க துடுப்புகள், அந்தப் படகினை வெற்றியின் கரை நோக்கிக் கொண்டு வந்து சேர்த்து விடும் என்கிறார்கள்.

சேலம்

— திருநாவுக்கரசு

தேர்தல்-2020!

முகில்

2004 தேர்தலில் 'அநியாயத்திற்கு' ஆங்காங்கே கூத்துக்கள் கும்மியடித்துக் கொண்டிருக்க, 2020-ல் தேர்தல் களம் எப்படி இருக்கும் - ஒரு வலம் வரலாமா!

* வீட்டில் குத்த வைத்துக் கொண்டே, இணையம் வழியே வோட்டைக் குத்தும் வசதியிருந்தும் - 100% வாக்குப் பதிவு நடக்காது.

* ''எங்களின் ஏழாவது அணியே, மத்தியில் ஆட்சியை நிர்ணயிக்கும்''. சு.சுவாமியின் 'நக்கல்' அறிக்கை அப்போதும் இருக்கும்.

* பிரியங்காவின் மகள் காங்கிரஸிற்காக பிரசாரக் களத்தில் குதிப்பார்.

* ''பா.ம.க. தலைவர் அன்புமணியைத் தோற்கடிப்போம்'' - லிட்டில் சூப்பர் ஸ்டார் சிம்பு - தன் ரசிகர்களுக்குக் கட்டளையிடுவார்.

* ''2024-ல் தமிழகத்தில் காமராசர் ஆட்சி'', தமிழக காங்கிரஸ் - தென் சென்னைப் பிரிவு செயற்குழுவின் முதன்மைத் தலைவர்(?) ஜி.கே. வாசன் அறிக்கை.

* ''சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றுவதே எங்களின் முதன்மையான குறிக்கோள்...'' வைகோவின் கர்ஜனை தொடரும்....

* முன்னாள் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் - மத்தியில் பி.ஜே.பிக்கு ஆதரவு என அறிக்கை

* கோபி - தொகுதியில் வீரப்பன் சுயேட்சை வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்வான்.

* வேட்பாளர்கள் தங்களுக்குச் சொந்தமான 'தண்ணீர்க் கிணறுகளின்' மதிப்பையும் அறிவிக்க வேண்டும் - தேர்தல் கமிஷன் உத்தரவிடும்.



சிக்கிக்கொண்ட சினேகா!

“என்னை இப்போது ஒரு பேய் துரத்திக் கொண்டிருக்கிறது'' என்று ஷாக் கொடுத்தார் சினேகா. 'அதுதான் இத்தனை அதிர்ச்சியான முகபாவமா?' என்றால், “'அது' படத்தில் துரத்துகிறது'' என்றார். “நான் பிறவியிலேயே கண் தெரியாத பெண். எனக்குப் பார்வை கிடைக்க, ஐ டிரான்ஸ்பிளாண்ட் பண்ணுகிறார்கள். அவ்வளவு தான்! எனக்குக் கண் தெரிய ஆரம்பித்த அடுத்த கணத்திலிருந்து, பேய் என்னைப் பின் தொடர்கிறது. அந்தப் பேய் யார் என்பதுதான் படம்” என்று முழுக் கதையையும் சொல்லி முடித்தார்.

எலும்புக்கூடு, மெழுகுவர்த்தி, வெள்ளைச் சேலை உட்பட வழக்கமான பேய்ப் படம் இல்லையாம். “ஆஸ்திரேலியாவில் கிராபிக்ஸ் செய்கிறோம். ஹாலிவுட்டில் எடுக்கப்பட்ட கோஸ்ட் படம் மாதிரி சாஃப்டான பேய் படம்'' என்கிறார். நீண்ட இடைவேளைக்குப் பிறகு கோலிவுட்டில் பேய்!

- ஜெய்









உணர்திறன்

புஜபலம்
முழுவதையும் திரட்டி
பேஸ்ட் பிதுக்குவேன்,
பல் துலக்க.

ஷேவிங் பிளேடு
போலாகி விடும்
குளியல் சோப்பு.

மூச்சடக்கி
பலம் சேர்த்து
முழுங்க வேண்டியிருக்கும்,
போதிய எண்ணெய் இன்றி
கிளறி இறக்கப்பட்ட
கோதுமை உப்புமாவை.

அரசியல் மற்றும்
சமூக அவலங்கள் குறித்து
கருத்துப் பரிமாறிக் கொள்ள,
அடிக்கடி வந்து போவார்
வீட்டை எனக்கு
வாடகைக்கு விட்டிருப்பவர்.

சோப்பும்
உப்புமாவும்
இதுபோன்ற
இன்னபிறவும்
சொல்லாமல் சொல்வதை
உணராமலில்லை நான்.

எனினும்,
குரலெடுத்து,
கூவினால்தான்,
நிறைவாக இருக்கும்
என் மனைவிக்கு
'மாசக் கடைசி' என்று!



ஜெஸ்மி ராஜேந்திரன்

டோனி பூஷான் தத்துவத்தை மீண்டுமொரு முறை தொகுத்துச் சொல்கிறேன்:

1. ஒரே சமயத்தில் நமது மூளை பல விஷயங்களையும் ஆராய்கிறது.

2. ஒரே சமயத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் சிந்திக்கிறது.

3. எல்லாத் தகவல்களையும் மூளை படங்களாகப் பதிவு செய்கிறது.

4. பல்வேறு தகவல்களுக்கிடையேயுள்ள தொடர்புகளை / ஒற்றுமையை மூளை மின்னல் வேகத்தில் கண்டுபிடிக்கிறது.

5. பல கோணங்களிலிருந்து ஒரு விஷயத்தை ஆராயும் மூளையின் இயல்புக்கு ஏற்றவாறு, நாம் சிந்திக்கப் பழகிக் கொள்ள வேண்டும். ஒரே நேர்வழிப் பாதையில் மட்டும் செல்ல அதைக் கட்டாயப்படுத்தாமல், அதை அதன் வழியிலேயே 'ஓட' விட வேண்டும்.

சித்திரங்களுக்கு

பேராசிரியர் ப. இராம்கோபால்

6. நடைமுறையில் இருந்து வரும் கற்பித்தல் முறையும், பாடங்களைப் படிக்கும் முறையும், அவற்றைக் குறிப்புகள் எடுக்கும் முறையும், மூளையின் இயல்புக்கு மாறானவை. எனவே, மூளை வெகு வேகமாகச் சோர்ந்து போய் விடுகிறது.

7. வழக்கமான குறிப்பெடுக்கும் முறையில் சில சிறிய மாற்றங்கள் செய்தாலே, மிகப் பெரிய அளவில் நன்மைகள் கிடைக்கின்றன. உதாரணமாக, குறிப்புகளை கறுப்பு / நீல நிற இங்க்குகளைக் கொண்டு மட்டும் எழுதாமல், கூடவே இரண்டே இரண்டு வேறு வண்ணங்களையும் (ஆரஞ்சு, பச்சை, சிவப்பு, பச்சை) இப்படிப் பயன்படுத்தினால் நினைவாற்றல் திறன் நூறு சதவிகிதம் அதிகரிக்கிறது. அதுமட்டுமல்ல, இவ்வாறு பல வண்ணங்களைப் பயன்படுத்தும் போது மனத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

8. கதிரவன் ஒளி ஒரே சமயத்தில் பல கோணங்களிலும் பரவுவது போல், மூளையும் ஒரே சமயத்தில் பல கோணங்களிலிருந்தும் விஷயங்களை ஆராய்கிறது. மூளையின் இந்தப் 'பல கோணப் பரவல்' / 'பல்'திசைப் பரவல்' ஆற்றலை, கதிரொளிச் சிந்தனை முறை என்றழைக்கலாம். மேலும், புதிய குறிப்பெடுத்தல் முறையில் பெரும்பாலும் சித்திரங்களைப் பயன்படுத்துகிறபடியால், நினைவு கூர்தல் சுலபமாகிறது.

சிந்தனைச் சித்திரங்களின் தந்தை டோனி பூஷான் கற்றலியலில் (The science of learning) ஒரு பெரிய புரட்சியையே ஏற்படுத்தியிருக்கிறார். அது மட்டுமல்ல, குறிப்புகள் எடுத்தலிலும் ஒரு புதிய முறையை அறிமுகம் செய்திருக்கிறார். இதை மேனாடுகளில் மாணவர்கள் மட்டுமல்ல, பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், புகழ் பெற்ற நிறுவனங்கள் I.B.M., Boeing, Nabisco, EDS, DEL, Temple Marketing பயன்படுத்துகின்றன(ர்).

சிந்தனைச் சித்திர முறையை யாரெல்லாம் பயன்படுத்தலாம்?

கோடு கிழிக்கத் தெரிந்த குழந்தை முதல் (3 வயது?) கை கொஞ்சமாக நடுங்கும் குடுகுடு கிழவர் வரை, 'படம்' போடலாம். கணிப்பொறி இயக்கம் தெரிந்தவர்கள், கிராஃபிக்ஸ் உதவியுடன், கணிப்பொறியிலேயே சி.சி. தீட்டி ஜமாய்க்கலாம். மாணவர்கள் மட்டுமின்றி, யார் வேண்டுமானாலும் வரையலாம்.

ஆசிரியர்கள் பாடங்களை நடத்துவதற்கான தங்கள் குறிப்புகளை இந்த முறையில் தயார் செய்யலாம். அப்படிச் செய்யும் போது, ஆசிரியர் வகுப்பறைக்குள் குழப்பத்துடனும், சந்தேகங்களுடனும் நுழையவே முடியாது. எந்த நேரத்திலும் பாடத்தைப் பற்றிய முழுப் பார்வையும், ஆசிரியர் மனத்தில் ஒட்டிக



மார்க் இல்லை!

கொண்டிருக்கும். தப்பித் தவறி மாணவர்கள் ஏதாவது சந்தேகம் கேட்டால், சட்டென்று பதில் சொல்ல முடியும்.

கல்விப் பயிற்சிக்கு மட்டுமல்ல... மாதாந்திர மளிகைச் சாமான் லிஸ்ட் தயார் செய்வது முதல், தினசரி செய்ய வேண்டிய வேலைகள், மாதாந்திர / வருடாந்திர திட்டமிடல், குடும்ப வரவு செலவுக் கணக்கு வரை... சகல விஷயங்களுக்கும் படம் போடலாம். பெரிய நிறுவனங்கள் எல்லா வேலைகளுக்கும் இதைப் பயன்படுத்தலாம்.

எச்சரிக்கை 1: சிந்தனைச் சித்திரம் வரைதல், ஒரு விதமான "போதை" தரும் பழக்கம் - கம்ப்யூட்டர் கேம்ஸ் / கிராபிக்ஸ் போல. சித்திரம் வரைதலிலேயே மூழ்கி விடாதீர்கள். ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய (உதாரணமாக உயர்ந்த மதிப்பெண்கள்) இந்த முறை ஒரு டெக்னிக்கே தவிர, இதுவே இலக்கு அல்ல... படங்களையேனும் நன்றாகப் போட வேண்டும் என்று காலத்தைக் கழிக்காதீர்கள்.

இந்தச் சித்திரங்களுக்கு யாரும் மார்க் போடப் போவதில்லை. உங்கள் நினைவாற்றலுக்கும் எழுதும் விடைக்கும்தான் மார்க்!

எச்சரிக்கை 2: இந்த டெக்னிக் மனப்பாடம் செய்வதற்கு ஒரு மாற்று அல்ல. இப்போதும் நீங்கள் மனப்பாடம் செய்துதான் தீரவேண்டும். மனப்பாடம் செய்வதிலிருந்து நீங்கள் தப்பிக்கவே முடியாது, நீங்கள் மாணவனாக இருக்கும் வரை! நமது கல்வித் திட்டத்தின் தன்மை அப்படி! ஆனால் இந்த முறையைக் கடைப் பிடித்தீர்களானால், நீங்கள் புரிந்து கொண்டு மனப்பாடம் செய்ய முடியும்.

எச்சரிக்கை 3: தேர்வுகளில் விடைகளை எழுத சிந்தனைச் சித்திர முறையைப் பயன்படுத்தாதீர்கள். அவற்றை எழுத வகுப்பாசிரியர் மற்றும் தேர்வு நடத்துபவர்கள் சொல்லும் விதிமுறைகளை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

மார்க் வாங்கலாம் வாங்க 17

(தொடரும்)

கிராமத்தில் சிறு பெண்ணாக நான் இருந்தபோது, என் தாத்தாவை எல்லோரும் எப்படி மதித்தார்கள் என்று எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. எங்கள் வீட்டின் முன்னால் இருக்கும் அரச மரத்து நிழலில், ஒரு பாயைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பார் தாத்தா. கையில் எப்போதும் ஒரு புத்தகம் இருக்கும். மாலை நேரங்களில் அவரிடம் ஆலோசனை கேட்க, நிறையப் பேர் வருவார்கள்.

எனக்குச் சிறகுகள்

சுதா மூர்த்தி



கிராமத்திலுள்ள மிகப் பெரிய பணக்காரர் கூட, எங்கள் வீட்டைத் தாண்டிப் போகும்போது அவரை வணங்கி விட்டுத் தான் போவார். "ஆசிரியரை ஏன் வணங்க வேண்டும்?" என்று நான் தாத்தாவைக் கேட்டேன்.


அவர் சிரித்துவிட்டு, கதை சொல்ல ஆரம்பித்தார்:

''துரோணாச்சாரியாருக்கு ஏன் அவ்வளவு மரியாதை கொடுக்கிறாய் என்று, அர்ஜுனனிடம் சில நண்பர்கள் கேட்டார்களாம். துரோணர் வயதானவர். அர்ஜுனன் போல் செல்வம் இருக்கவில்லை அவரிடம். அரசாள நாடு கூடக் கிடையாது. ஆனாலும் அர்ஜுனன் எப்போதும் அவர் காலடியிலேயே இருந்தானாம். அதற்கு என்ன காரணம் தெரியுமா? "உலகத்தில் எல்லாமே அழியக்கூடியவை. பிறருக்குக் கொடுக்க ஆரம்பித்தாலோ, நாளாவட்டத்தில் குறைந்து கொண்டே போய் விடும். செல்வம், அழகு, நிலம் எல்லாமேதான். ஒன்றே ஒன்று மட்டும் தான் இதற்கு விலக்கு. அதுதான் அறிவுச் செல்வம். கொடுத்தால் குறைந்து போகாது. மாறாக, பெருகும். ஓர் ஆசிரியர் தம் மாணவர்களுக்கு அறிவைக் கொடுக்கிறார். அவர்தான் பெரிய செல்வந்தர் என்று நான் நினைக்கிறேன். அதனால்தான் ஆசிரியரை நான் மதிக்கிறேன்" என்றான் அர்ஜுனன்."

இப்படிப் பல விஷயங்களைத் தாத்தா கூற கற்றுக் கொண்டேன். முதல் முதலாக நான் வீட்டை விட்டு வெளியே காலடி எடுத்து வைத்த போது, போன இடம் கிராம நூலகக் கட்டடம்தான். எங்கள்

இருந்தால்...

கிராமத்தில் அது ஒரு சிறிய இரண்டு மாடிக் கட்டடம். கீழ்த்தளத்தில் ஒரு கடையும், முதல் மாடியில் நூலகமும் இருக்கும். கட்டடத்தைத் தொட்டாற் போல் ஒரு பெரிய அரச மரம் இருக்கும். அதனடியில் சிமெண்ட்டாலான மேடை



இருக்கும். மாலை நேரங்களில், கிராமத்து முதியவர்கள் அங்கே கூடுவார்கள். என் தாத்தாவும் அவர்களில் ஒருவர். அவர் என்னை மாடிக்கு அழைத்துப் போய் விட்டு விட்டு, கீழே மேடையில், மற்றவர்களோடு அமர்ந்து விடுவார்.

நான் பார்த்த பல நூலகங்களில், நான் நுழைந்த முதல் நூலகம் அது

உள்ளங்கையில் உலகம் 5

தான். கண்ணாடிக் கதவுகள் கொண்ட அலமாரிகளில் அடுக்கப்பட்டிருக்கும் புத்தகங்களின் தலைப்புகளை, நின்ற படியே படித்து விடலாம். செய்தித்தாள் களும், பத்திரிகைகளும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மேஜை நாற்காலி கள் உண்டு. அமைதியாக இருக்கும். தாத்தா கீழே இருந்து என்னைக் கூப் பிடும் வரை, குழந்தைகளுக்கான கதைப் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப் பேன்.

எனக்குப் பன்னிரண்டு வயதாகும் போது, அந்தக் கிராம நூலகத்தில் இருந்த புத்தகங்கள் எல்லாவற்றையுமே படித்து விட்டேன். இனி படிக்கப் புதுப் புத்த கங்கள் இல்லையே என்று நினைத்து, நூலகத்துக்குப் போவதற்கே பிடிக்காமல் போயிற்று. ஆனாலும், மாலையில் தாத்தாவுடன் போவதை நிறுத்தி விட வில்லை.

ஒரு நாள் மாலை நேரம், தாத்தாவுடன் வெளியே போய் விட்டு வந்து கொண்டிருந்தேன். நூலகம் போர் அடித்தது. சாலை இருளாக இருந்தது. தெரு விளக்குகள் அணைந்து அணைந்து எரிந்தன. தாத்தாவுக்குக் கண் பார்வை சரி யாக இருக்க வில்லை. எனவே, அவர் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தேன். திடீரென்று அவர், "நான் கவிதை யின் ஒரு பாதியைச் சொல்லுகிறேன். நீ மீதியைச் சொல்லி முடிக்கிறாயா?" என்று கேட்டார். "உனக்குத் தெரிந்த பாடல்தான்" என்றார்.

"நான் முயற்சி செய்கிறேன்" என்றேன். அடிக்கடி இந்த மாதிரி விளையாட்டு களில் நான் நிறையக் கவிதைகளைத் தெரிந்து கொண்டிருந்தேன். தாத்தா தொடங்கினார்:

"எனக்குச் சிறகுகள் இருந்தால்..."

"...பக்கத்துக் கிராமத்து நூலகத் துக்குப் பறந்து சென்று, புத்தகங் களைப் படித்துத் தள்ளுவேன்" என் றேன், கொஞ்சம் கூடத் தயங்காமல். தாத்தாவுக்கு வியப்பு: "திரும்பச்



நான்கு 'மை'!

ஒருமுறை, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், 'கல்கி' அவர்களிடம் ''எனக்குக் கதை எழுத வேண்டும் என்று ரொம்ப நாளாகவே ஆசை'' என்றார்.

அதற்கு, ''கதை எழுத நான்கு 'மை' வேண்டுமே'' என்றார் கல்கி.

''என்னென்ன 'மை' வேண்டும்?'' என்று என்.எஸ். கிருஷ்ணன் கேட்டார்.

''திற'மை', தனி'மை', பொறு'மை', பேனா 'மை' என்ற நான்கு 'மை'கள் வேண்டும்'' என 'கல்கி' பதில் சொன்னதும், ''நீங்கள் சொன்னது மிகவும் அருமை'' என்று என்.எஸ். கிருஷ்ணன் சொல்ல, அங்கிருந்தவர்கள் சிரித்த சிரிப்பில், இனி'மை' மிகுந்திருந்தது!

- வே.ந. சுதிர்வேல்.

சொல்லு" என்றார்.

"பக்கத்துக் கிராமத்து நூலகத்துக்குப் பறந்து சென்று, புத்தகங்களைப் படித்துத் தள்ளுவேன்."

தாத்தா சிரித்துவிட்டு, "பாட்டைப் பூர்த்தி செய்ய இது என்ன ஓர் அசாதாரணக் கற்பனை! பாட்டின் மூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியுமா?" என்று கேட்டார்.

"எனக்குச் சிறகுகள் இருந்தால்
நீல வானத்தில் சிறகடித்துப் பறப்பேன்.
பூமியிலுள்ள அழகான இடங்களை எல்லாம் பார்ப்பேன்.
உலகிலுள்ள பெரியோர்களை எல்லாம் சந்திப்பேன்.
மறைந்து கிடக்கும் புதையல்களை எல்லாம் தேடுவேன்."

தாத்தா எதுவும் பேசவில்லை. வீட்டுக்குப் போனதும் தம்முடைய இடத்தில் அமர்ந்து கொண்டு, என்னைக் கூப்பிட்டார். களைத்துப் போயிருந்தாலும், மகிழ்ச்சியாகத் தெரிந்தார். என் சின்னக் கைகளைப் பிடித்துக் கொண்டு, "அமெரிக்காவில் ஆன்ட்ரூ கார்னகி என்றொரு பெரிய மனிதர் இருந்தார், தெரியுமா? ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்த கோடீசுவரர் அவர். அவர் தம்முடைய சொத்துக்களை எல்லாம், தமது குழந்தைகளுக்கு எழுதி வைக்காமல், கிராமப்புறங்களில் நூலகம் கட்ட, உயில் எழுதி வைத்தார். நான் அமெரிக்காவுக்குப் போனதில்லை. ஆனால் அங்கே கிராமங்களில் உள்ள நூலகத்தை எல்லாம் ஆன்ட்ரூ கார்னகியின் சொத்திலிருந்து கட்டியிருக்கிறார்களாம்.



"நான் எவ்வளவு காலம் வாழப் போகிறேன் என்று தெரியாது. ஆனால் இன்றைக்குத்தான் நீ புத்தகங்களை எவ்வளவு நேசிக்கிறாய் என்பதை உணர்ந்தேன். நீ வளர்ந்து பெரியவளானதும், உன் தேவைக்கு மேல் அதிகமாக உள்ள பணத்தை எடுத்து, புத்தகங்கள் வாங்கி, ஒரு நூலகத்துக்காவது கொடுப்பேன் என்று சத்தியம் செய்வாயா?"

அந்தக் குளிர்கால இரவில், அவர் கைகளில் இருந்த சூடான கதகதப்பு, என் கரங்களில் உறைத்தது. சாக்குக் கட்டியால் பலகையில் ஆயிரக்கணக்கான வரிகளை தினசரி எழுதி, எழுதி (பள்ளி ஆசிரியர் அல்லவா?...) அவரது கைகள் சுருக்கம் விழுந்து கடினமாக இருந்தன. கார்னகியைப் போல நாங்கள் செல்வந்தர்கள் அல்ல. ஆனால், தாத்தாவிடம் அனுபவமும் அறிவும் நிறையவே இருந்தன.

பின்னாளில் எனக்கு வசதிகள் நிறைந்த வாழ்க்கை அமைந்தது. தாத்தா மறைந்து பல வருடங்கள் ஆன பிறகும், அவருக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நினைத்துக் கொண்டேன். இன்று இன்ஃபோஸிஸ் ஃபவுண்டேஷன் வாயிலாக, பத்தாயிரம் நூலகங்களை உருவாக்க முடிந்திருக்கிறது.

(தொடரும்)

தேர்தல் வைரஸ்

இந்திய ஜனநாயகம் - ஒரு
கணினி
எத்தனை மாநிலங்களோ
அத்தனை Driveகள்!
ஒவ்வொன்றிலும்
எத்தனையோ
கட்சிகள், Folderகளாக!

எத்தனை எத்தனை சாதிகள்
Fileகளாக!
தேர்தல் சமயத்தில் மட்டும்
தேவைப்படும் - பொது ஜன Fileகள்
தேடி எடுக்கப்படும் Recycle Binல் இருந்து!

ஆளுங்கட்சி Folderகள்
Driveகளில் நிரம்பிவழிய,
எதிர்க்கட்சி Folderகள்
Zip (அடக்கி) பண்ணி வைக்கப்படும்!

இந்தக் கணினியில் ஏராளமான
வைரஸ்கள்...
அடிக்கடி தீயாய்ப் பற்றிக் கொண்டு
அப்பாவி Fileகளை மட்டும் அழிக்கும்
மதவாத வைரஸ்!
எல்லா Folderகளிலும்
நீக்கமற நிறைந்திருக்கும் - லஞ்ச
வைரஸ்!

புகைப்படங்களாய் - வீடியோ காட்சிகளாய்
அழகு காட்டும் ஊழல் வைரஸ்!

பொது ஜன Fileகளை மட்டும்
விரும்பி விரும்பித்தாக்கும் -
பற்றாக்குறை வைரஸ்!
விடாமல் தாக்கும் விலைவாசி வைரஸ்!

தேர்தல் சமயத்தில்
தேடி வந்து தாக்கும்
அனுதாப அலை வைரஸ்!

வகை வகையாய் வைரஸ்கள்...
எல்லா Driveகளிலும்
Folderகளின் ஆதரவோடு!
இனி வரும் ஜனநாயகம்
தொடர்ந்து இயங்கத் தேவை
Anti Virus Softwareகள்!

சிந்தித்துப்பார் இந்தியனே...
உன் கையிலிருக்கும்
வாக்குச்சீட்டு - Temporary file அல்ல!
நாளைய இந்தியாவின்
முன்னேற்றத்திற்கான Boot File.

- வித்யன்




அழகை அழகாய் காட்டுமே
பெண்ணின் கனவுகள்
நிஜமாகும் வேளையில்
இதயங்கள் இணைந்திடும் வேளையில்
ஆரெம்கேவி உங்கள் அழகை
அழகாய் காட்டுமே.
ஆரெம்கேவி முகூர்த்தப் பட்டுகள்.
பாரம்பரியத்தை பிரதிபலிக்கும்
நவீன படைப்புகள்.



RmKV
முகூர்த்தப் பட்டுகள்
பனகல் பார்க் | சென்னை | போன் 044-28144445
வடக்கு ரத வீதி | திருநெல்வேலி | போன் 0462-2333105
www.rmkv.com




''படிக்கும் குழந்தைகளுக்கு சைபர் நினைவு வரக் கூடாது என்பதற்காகத்தான் சத்துணவில் முட்டைப் போடுவதை நிறுத்தினேன்... இது ஒரு தவறா...?''

- ராஜிராதா

''தலைவர் ஏன் ஸ்டார் ஓட்டலில் ரூம் புக் பண்ணச் சொல்றாரு?''
''மீட்டிங்குல சொல்லப் போற கதையை டிஸ்கஸ் பண்ணணுமாம்.''





''ஸ்கூல் ஹெட்மாஸ் டரைக் கட்சித் தலைவர் ஆக்குனா இப்படித்தான் நடக்கும்!''
''என்னாச்சு?''
''வேற கட்சியிலேயிருந்து நம்ம கட்சிக்கு வர்றவங்க கிட்டே டிரான்ஸ்பர் சர்டிபிகேட், கான்டக்ட் சர்டிபிகேட் டெல்லாம் கேக்கிறார்!''

- நெல்லையப்பபுரம் செல்வன்

''ஒரே நாளில் இவ்வளவு நகை கொள்ளையடிச்சிருக்கே...''
''அக்ஷயதிருதியை அன்னிக்கு நகையைச் சேர்த்துகிட்டா நல்லதுன்னு சொன்னாங்க பெரிசு...''






''எதிர்க்கட்சித் தலைவர் உங்க மேலே கேஸ் போட்டிருக்காரு—''

''எதுக்கு?''

''போன வாரம் மீட்டிங்குல நீங்க சொன்ன கதை அவரோடதாம்.''



''தேர்தல் சமயத்துல நீங்க ஏன் வாய்ஸ் குடுக்கல?''

''என்னோட டப்பிங் ஆர்ட்டிஸ்ட் சுகமில்லாம இருக்கார்!''

- அம்பை தேவா

''ப்ளஸ் டூவில் நல்ல மார்க் வாங்குற பசங்களோட மேற்படிப்பு செலவை நம்ம தலைவரே ஏத்துகிறதா சொல்லியிருக்காரு.''

''நல்ல விஷயமாச்சே... அப்போ ஃபெயிலான பசங்களுக்கு?''

''அவங்களை கட்சிப் பணிக்குச் சேர்த்துக் கறாராம்!''


- வி. கிருஷ்ணகுமார்



"உமையா!" என முதல் கட்டிலிருந்து வெளியில் கூவினாள் விசாலாக்ஷி. பதில் இல்லை.

முற்றத்தில் நிழலில் காயவைத்த ஈரப் பச்சரிசியை முறத்தில் அள்ளிப் போடத் தொடங்கினாள். எத்தனை படி போட்டு மாவு திரித்து பலகாரம் செய்து வைத்தாலும், இரண்டு பொழுதுக்கு வருவதில்லை. கடைசிப் பிள்ளை லக்ஷ்மணன் இரண்டு ஓட்டம், ஒரு குதி முடிந்தால், பாதி பலகாரத்தைக் காலி செய்து விடுவான்.

மிக்ஸி, கிரைண்டர் என ஆயிரம் நவீன மின் சாதனங்கள் வழக்கில் வந்து விட்டன. முன்பு போல உரலில் தோள்பட்டை நோக இடிக்க வேண்டிய அவதி இல்லை. ஆத்தாள் வீட்டில் பிள்ளையார் நோன்பு என்றால், ஏழு படிக்குக் குறையாமல் மாவு இடிக்க வேண்டும். அப்பச்சி வீட்டில் பெரியப்பச்சி, சித்தப்பு என பெரிய கூட்டுக் குடும்பம். தேவகோட்டை யில் ஒரு வீதியை அடைத்து வீடு.



வலம்புரி முத்து

1

சத்தியப்பிரியன்



நாலு கட்டு. தனிக்குடித்தனம் என்றாலும், அப்பத்தாள் அப்பச்சியுடன் இருந்ததால் அப்படி ஒரு உத்தரவு. விசாலாக்ஷிதான் வெல்லமும், கருப்பட்டியும் காய்ச்சி, பணியாரம் செய்து படைக்க வேண்டும். அப்பொழுது ஒரு மூட்டை நெல்லைக் கூட அவித்து, உலர்த்தி எடுக்க வலு இருந்தது. வசதி பெருகப் பெருக, புறாக்கூண்டு மாதிரியான வீட்டில் கூட மூச்சு வாங்குகிறது.

"உமையா! கூறுகெட்டவளே! கூப்பிடுறேன் இல்ல! வந்து தொலை."

"ஆத்தா! உனக்கு ஆயிரம் மொறை சொல்லியாச்சு. எனக்கு செமஸ்டர் பரீட்சை இருக்கு. வேணுமின்னா தாமரையைக் கூப்பிட்டுக்க."

"ஏஞ்சு தாமரை! இங்கன வாம்மா! ஒன் தங்கச்சி ஐ.ஏ.எஸ் படிப்பு பாஸாப் போவுதுன்னு பெரியதனம் பேசுறா. ஒத்தாசைக்கு வாயேன்."

தாமரை இடுப்பில் தூக்கிச் செருகிய சேலையும், ஒரு எவர்சில்வர் கிண்ணியில் கரைத்த அரிசி மாவுடனும் வெளியில் வந்தாள்.

கொப்புப் போல மகள் நின்ற தோரணையைக் கண்டதும், ஆச்சியின் கண்களில் நீர் திரண்டது. பதினெட்டு வயதில் செட்டி ஆச்சியின் மகமுண்டியாக (மகனின் மனைவி) விசாலாக்ஷி வந்து விட்டாள். கல்லூரிப் படிப்பு அறவே வேண்டாம் என்று அப்பச்சி தீர்மானமாக இருந்ததால், நாலு எழுத்து படிக்கவும்; தேவாரம், திருவாசகம் மனப்பாடமாகச் சொல்லவும் தெரிந்தால் போதும், என எட்டாவது வகுப்பு படிப்புடன் நிறுத்தி விட்டார். சடங்கான பின்பு, இரண்டு வருடத்தில் அருணாசலம் அப்பாவுக்கு வாக்கப்பட்டு வந்து, இவள் வயதில் அருணாசலம் பிறந்தே விட்டான். பிள்ளைக்கு இந்த மாசி வந்தால் இருபத்தியொரு வயது பூர்த்தியாகிறது.

"அவளை எதுக்கும்மா கூப்பிடறீங்க? அடுத்த வாரம் எக்ஸாம் வருதுல்ல? படிக்கட்டுமே."

"செட்டிப் பொண்ணு படிச்சு என்னடி செய்யப் போறா? வக்கணையா சோறாக்கத் தெரிஞ்சா போதாது? குழம்புன்னா ஏழு வகை. இளங்குழம்பு, கம்மா குழம்பு, கெட்டிக் குழம்பு, காரக் குழம்பு, புளிக் குழம்பு. பணியாரம்னா ஏழு வகை. கந்தரப்பம், கருப்பட்டி பணியாரம், பால் பணியாரம், பயத்தம் பணியாரம், வெள்ளைப் பணியாரம். இது போதாதுன்னு உக்காரை..."

"நிறுத்தும்மா! நான் தொடரட்டுமா? கவுனரிசி, கும்மாயம், தேங்குழல், சீடைக்காய், மனகோலம்... ரைட்டா?"

பெண் சிரித்தாள். இளமையும், அழகும், வடிவும் ஒன்று சேர்ந்த பெண். தேவகோட்டைக்கு சஷ்டி விழாவுக்கோ, பழனி பாத யாத்திரைக்கோ போக நேரும் பொழுது, அப்பத்தா உருவி விட்டது போலிருக்கும். கொள்ளுப்பேத்தி தாமரையைப் பார்த்து, 'சிறு வயசுல ஒங்க

ஆத்தா விசாலாட்சியைப் பார்க்குறாப்பல இருக்கு' என நீட்டி முழக்கத் தவறியதே இல்லை. பெரியவன் அருணாசலத்திலிருந்து, கடைக்குட்டி லட்சுமணன் வரை சாயல் என்றால் பிள்ளைகள் தகப்பனைக் கொண்டுள்ளனர். ஆனால் அப்பச்சியின் குணமும், புத்தியும் தாமரையைத் தவிர யாருக்கும் இல்லை. அது ஒன்றுதான் விசாலாட்சியின் நெஞ்சோடு எரியும் அணையாக் கனல்.

தாமரை உலர்ந்த ஈர அரிசியை இரண்டு, மூன்று முறைகளாக மிக்ஸியில் போட்டுப் பொடியாக்கினாள். நீள நீளமாக செய்தித்தாள்களை தரையில் பரத்தி, மாவு சல்லடையினால் பொறுமையாகச் சலித்து, கப்பியை மீண்டும் மிக்ஸியில் போட்டு, எஞ்சிய கப்பியை சிறிய தட்டில் மாற்றி, பரத்தி வைத்தாள்.

கிடைத்த நேரத்தில் விசாலாட்சி முற்றத்துத் தூண் ஒன்றில் சாய்ந்து, காலை நீட்டிக் கொண்டாள். காற்று இதமாக வீசியதால் ஐம்பது வயது தள்ளாமை, இலேசாக கண் அசந்தது.

அருணாசலம் வீட்டில் இல்லை. கடையில் இருப்பான். கண்ணன் பஜாரில் கடையும் குடோனும் உண்டு. நான்கைந்து அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் கம்பெனிகளில் ஏஜென்ஸி எடுத்து, உதிரியாகவும், மொத்தமாகவும் வியாபாரம். இருபத்தி நான்கு மணி நேரமும் விழித்திருந்து, எல்லா வழிகளிலிருந்தும் பணம் பண்ண ஆசை. அருணாசலத்தின் எதிர்பார்ப்பெல்லாம், வழி எப்படி ஆனாலும் 'பொருள் செய்வது நன்று' என்பது தான். பழனியப்பனும், அருணாசலமும் அடிப்படையில் முரண்படும் இடம் இதுவாகவே இருக்கும்.

லட்சுமணன் எங்கிருந்தோ வாங்கி வந்து வைத்த நெற்கதிர், கண்ணுப்பூளை, ஆவாரம் பூக்களை சேர்த்துக் கட்டிய பந்தை, வாசல் நிலைப்படியில் செருகினாள் தாமரை. வாசலில் பழனியப்பன் புத்தகத்திலிருந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். அப்பச்சி மகளைப் பார்த்துச் சிரித்தார். நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து வெளிவரும் வாஞ்சைச் சிரிப்பு. பதிலுக்குச் சிரித்து விட்டு, "என்ன புஸ்தகம்?" என்றாள்.

"ஷேக்ஸ்பியரின் லியர் மன்னன்" என்றார் பழனியப்பன்.

வாய் கொள்ளாத சிரிப்பு அவள் முகத்தில் வெடித்துச் சிதறியது. "சரியான புஸ்தகம் தான்" என உள்ளே ஓடி விட்டாள்.

தேன்குழல், முறுக்கு முதலியவற்றிற்கான மாவை படியில் அளந்து, தனித்தனி முறத்தில் கொட்டி வைத்தாள். எள்ளுருண்டை, கடலை உருண்டை, கருப் பட்டிப் பணியாரம் மூன்றுக்கும் வெல்லம், ஏலக்காய் தட்டி மொத்தமாக எடுத்து வைத்தாள். ஆத்தா தனித்தனியாக எடுத்துக் கொள்வாள். மனகோலத்திற்கு மிக்ஸியில் அரைத்து வைத்திருந்த பச்சரிசி, உளுத்தம் பருப்பு, பாசிப் பருப்பு, கடலைப் பருப்பு மாவை தண்ணீர் ஊற்றிப் பிசைந்து, மனகோல கட்டையில் உருண்டையாக உருட்டி வைத்தாள். எண்ணெய்ச் சட்டியை அடுப்பில் ஏற்றி, முக்கால் சட்டி வரை எண்ணெய் ஊற்றி அடுப்பைப் பற்ற வைத்தாள். கருப்பட்டி, வெல்லப்பாகு காய்ச்ச, ஆத்தாள்தான் வர வேண்டும். கருப்பட்டிப் பணியாரம் பிள்ளையார் ஸ்பெஷல். சுத்தம் மிகுந்தது. எச்சில் படக் கூடாது.

பழனியப்பன் குடித்தனம் கூட்டுக்குடித்தனம் இல்லை என்பதால், பிள்ளையார் நோன்புக்கு தனி சாமி வீடு கிடையாது. பூசையறையில் தான் பிள்ளையார் நோன்பு. பூசையறைச் சுவரைக் கழுவி விட்டு, கம்பு பிடித்து மாக் கோலம் போட்டு, கட்டமண் பிள்ளையாரை எடுத்து வைத்தாள். நோன்பு தொடங்குவதற்கு கால் மணி நேரம் முன்பாகத்தான், அண்ணமுண்டி (அண்ணி) சீதா, பீரோவைத் திறந்து வெள்ளிப் பிள்ளையாரையும், வெள்ளி விளக்கையும் எடுத்து வருவாள். இரண்டுமே அவள் தாய் வீட்டுச் சீதனம். பீரோவில் வைத்துப் போற்றப்படும் சீதனம். பி.காம் படித்த பெண் என்பதால், அருணாசலத்தின் கணக்கு வழக்குகளை அவள்தான் பார்த்துக் கொள்கிறாள். வளவு வீடுகளைப் போல தனித் தனிக்குடித்தனம் இல்லை என்றாலும், சீதா தன் கணவன், தன் மக்கள் (விஸ்வநாதன், சொக்கலிங்கம் என இரண்டு பாலர் பள்ளி பிள்ளைகள்) தன் அறை என்பதை விட்டு வெளியில் வர மாட்டாள்.

"மருந்துக்கடைக்காரரைக் கல்யாணம் பண்ணிக் கிட்டியே..." வாழ்க்கை எப்படி இருக்கு?"
" 'சிரப்'பா இருக்கு!"
- தஞ்சை தாமு



நேரம் ஏறிக்கொண்டிருந்தது. ரிக்ஷாக்காரனிடம் காலையிலேயே சொல்லி விட்டதால், அனேகமாக எல்லா நகரத்தார் பிள்ளைகளையும் ஸ்பெஷல் ட்ரிப் பாக பூஜை நேரத்தில் பள்ளியிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து விடுவான். காலோடு ஓடும் பிள்ளைகள், வீட்டிலேயே இருந்தால் வேறு வேலை ஓடாது. பிள்ளைகளுக்கும் இழை எடுக்கும் நேரமாகப் பார்த்து வீட்டிற்குள் வந்தால்தான் ஒரு தனி குஷி.

அடுப்படியில் எண்ணெய் வாசனை எழ, விசாலாட்சி விழித்துக் கொண்டாள். 'சே! என்ன ஒரு அலுப்பு மேலுக்கு!

''ஏன் ஆத்தா, நேரம் வெரசா போயிடுமே. அருணாசலம் வந்தா நோம்பியை முடிச்சு கடைக்குப் போவனு மின்னு பறப்பானே. எழுப்பிருக்கக் கூடாதா?'' என்றபடி அடுப்படியில் நுழைந்தாள்.

தாமரை, தேங்குழல், முறுக்கு சுட்டு, மனகோலம் பொரித்துக் கொண்டிருந்தாள். நெற்றியில் வியர்வை முத்து முத்தாக அரும்பி இருந்தது.

"வா! வா! வெல்லப்பாகு, கருப்பட்டி பாகு பதம் பார்த்து காய்ச்ச உன்னால் தான் முடியும்."

வெல்லப்பாகு கொதிக்கும் பொழுது அருணாசலத்தின் மகன்கள் "அப்பத்தா! பணியாரம் ரெடியா?" என்றபடி ஓடி வந்தனர்.

"பூட்சு காலோட உள்ளார வரக் கூடாதுன்னு சொல்லி இருக்கேன்ல?" என விசாலாட்சி பேரப் பசங்களைச் செல்லமாக விரட்டினாள்.

மகன்கள் வந்தது தெரிந்து வெளியில் வந்த சீதை, ''ஏன் அத்த, பலகாரம் கூட ஒரு கை கூடமாட ஒத்தாசையா இருன்னு கூப்பிட்டா, நா என்ன மாட்டேன்னா சொல்லப் போறேன்?'' என்றபடி அடுப்படியில் நுழைந்து, இரண்டு சின்ன வட்டியில் தேங்குழல், முறுக்கு வடைகளை எடுத்து வைத்தாள். விசாலாட்சி மகனை ஒரு பார்வை பார்த்தாள். ஆயிரம் பொருள் கொள்ளும் பார்வை!

"நீ ஓம் பிள்ளைகளைக் கவனி சீதா! பாவம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்திருக்கு. பசிக்கப் போவுது'' என்றாள் மாமியார்க்காரி.

திரட்டுப்பால் காய்ச்சி, கூம்பு வடிவில் செய்து நறுக்கி வைத்த திரிகளை, மேல் எழுந்து நிற்கும் வண்ணம் பிடித்து வைத்தாள். பழனியப்பன் கை, கால் கழுவிக் கொண்டு மேல் துண்டை இடுப்பில் கட்டி, மேனியில் திருநீற்றைப் பூசிக் கொண்டு வந்தார்.

'நேரம் ஆகுதே. இன்னும் அவுகளைக் காணுமே' என்ற சீதாவின் வாட்ட ரேகை மறைவதற்குள் அருணாசலம் அவனுடைய இரு சக்கர வாகனம் 'டர்ர்...' என சப்த மெழுப்ப, வாசலில் வந்து நின்றான்.

உள்ளே நுழைந்தவன் அவசர, அவசரமாக வேட்டியைச் சுற்றிக் கொண்டு, கைகால் கழுவி பூஜையறைக்குள் வந்து நின்றான்.

"ஏன் லேட்டு?" என்றபடி உள்ளே நுழைந்த சீதாவின் கைகளில், கையகல வெள்ளிப் பிள்ளையாரும், ஒன்றரையடி வெள்ளிக் குத்துவிளக்கும் இருந்தன.

"ஏன் லேட்டா? இன்னிக்கு வசூல் போற பையன் லீவு எடுத்துக்கிட்டான். புதுப்பையன் கடை..., கடையா அலைஞ்சு பாங்கில ரொக்கம் கட்டுறதுக்குள்ள கிளியரிங்குல செக்கு வந்துருச்சின்னு போன் வந்திருச்சு. பையனைத் தேடிக் கண்டுபிடிச்சு பணம் கட்டிட்டு வர்றதுக்குள்ள நேரமாயிருச்சு. கல்லுக்கட்டில மெய்யப்பன்தான் கேட்டான், மானி இன்னிக்கு பிள்ளையார் நோன்புன்னு.. இல்லாட்டி அது கூடத் தெரியாது."

"பாங்குகாரவுகளை ஏன் போன் பண்ண விடுற? செக்கைக் கிழிச்சு வெளிய அனுப்பிட்டா, அக்கவுண்ட்ல பணம் இருக்குற மாதிரி பார்த்துக்க மாட்டியா?'' என்றார் பழனியப்பன் சாதாரணமாக.

'வியாபாரம்னா என்னன்னு தெரியுமா உங்களுக்கு? ஆத்திச்சூடியும், கொன்றை வேந்தனும் ஸ்கூல் பசங்களுக்குச் சொல்லிக் கொடுத்தா மட்டும் போதாது" - காட்டமாகப் பதில் சொன்னான்.

பழனியப்பன் முகம் சிறுத்துப் போனது. விசாலாட்சி

புரட்சிகர தேவயானி!

'கோலங்கள்... கோலங்கள்...' என்று மென்மையாக ஆரம்பிக்கிறது டைட்டில் பாடல். அதே பாடலில் "பெண்ணே



எழுது புதுக் கோலம் எழுது...!" என்ற புரட்சிகர வரி உச்சஸ்தாயியில் ஒலிக்கும் போது, தமிழ்த் தாய்மார்களுக்கு பிடரி சிலிர்த்து எழுகிற உணர்ச்சி. இந்தக் காட்சியைப் பார்த்து உற்சாகம் கொண்ட தாய்மார்கள், இப்போது உஷ்ணமாகி விடுகிறார்களாம். காரணம் "பாட்டு என்னவோ புரட்சிகரமாகத் தான் இருக்கிறது. ஆனால் கொடுமைக்கார புருஷன், அடாவடி மாமியார், இவர்களிடம் தேவயானி இன்னும் ஏன் பணிந்து போக வேண்டும்? இந்நேரம் இவர்களை உதறி வீட்டை விட்டு வெளியேறி இருக்க வேண்டாமா?" என்று தொடரின் இயக்குனர் திருச்செல்வனைத் துளைத்து எடுக்கிறார்களாம். 'மிக விரைவில் புரட்சிகர தேவயானியைக் காட்டப் போகிறேன்' என்கிறார்.

திரைப்படத்தில் இப்படி திரைக்கதையை அடிக்கடி திருத்த முடியுமா?

— ஜெய்

மகனின் ஓங்கிய குரலைக் கண்டிக்கவில்லை. தந்தையைச் சமாதானம் செய்யும் முகமாக எள்ளுப் பொரியையும், நெல் பொரியையும் எடுத்து வைத்து, "அப்பச்சி! நீங்க போயி தடுக்கில அமருங்க" என்றாள் தாமரை.

"சீதக் களபம் செந்தாமரைப்பூ
பாதச் சிலம்பு பண்ணிசை பாட....."

பழனியப்பனின் கணீர்க் குரலில் வார்த்தை தப்பிதமில்லாமல், இசையளவு மாறாமல், விநாயகர் அகவல் ஒலிக்கத் தொடங்கியது.

விநாயகரை வணங்கி, எடுத்து வைத்திருந்த இழையில் ஒன்றை தீபத்தில் ஏற்றி, ஒளி அணையாமல் அண்ணாந்து வாயில் போட்டுக் கொண்டார். பிள்ளையார் நோன்பு நகரத்தாரின் தனிச்சிறப்பு வாய்ந்த பண்டிகை என்றால், இந்த இழை எடுத்தல் பிள்ளையார் நோன்பின் தனிச்சிறப்பு. ஜோதிமயமான இறைவன், ஜீவன்களின் உள்ளும் நிறைந்திருப்பதை நினைவுறுத்தும் விதம்தான் இந்த இழை எடுத்தல்.

விசாலாட்சி பழனியப்பனை வணங்கி இழை பெற்றுக் கொண்டாள். அருணாசலம் விழுந்து வணங்கவில்லை என்பதால், சீதாவும் வணங்காமலே இழை பெற்றுக் கொண்டாள். தாமரை அம்மாவையும், அப்பாவையும் நிற்க வைத்து விழுந்து வணங்கி, இழை பெற்றுக் கொண்டாள்.

"அடுத்த நோன்புக்குள்ளயாவது ஒனக்குக் கலியாணம் முடிஞ்சு நோம்பை உன் மாமியார் வீட்டில் நூற்கணும் தாமரை" என்றார் பழனியப்பன்.

"புதுக்கோட்டை வரன் என்ன ஆச்சு?" என்றாள் விசாலாட்சி பொதுவாக.

"எல்லாம் கூடி வந்துச்சு. ஒன் பொண்ணு தான் மேல படிப்பன்னு ஒத்தக் காலில் நிக்குதே" அருணாசலம் சீறினான்.

"ஒத்தக் காலில் இல்லை, ரெண்டு காலிலும் ஸ்ட்ராங்கா நிப்பேன். நான் மேல எம்.சி.ஏ. படிக்கோணும்" என்றாள் தாமரை.

விர்ரென்று வாசல் திண்ணையில் சென்று அமர்ந்தான்.

வாசலில் கதவு திறக்கப்படும் ஒலி கேட்டது. ஒரு நிமிடம் உயிர்ப்பறவை கூட்டிலிருந்து வெளிக் கிளம்பி, வெளியெங்கும் சிறகடித்துப் பறப்பதைப் போல உணர்ந்தான். கதிரேசன் அவனது பழைய சைக்கிளிலிருந்து இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தான்.

(தொடரும்)

திருவிளையாடல் படத்தின் நூறாவது நாள் விழாவில் எனக்கு அழைப்பிதழ் கூட அனுப்பவில்லையே என்று நொந்து போயிருந்த போது, அதிர்ச்சியூட்டும் ஒரு தகவல் தெரிய வந்தது.

'நூறாவது நாள் விழாவில் எனக்கு ஒரு மஞ்சள் பையில் கற்களைப் போட்டு, 'இதோ! தருமிக்குப் பொற்கிழி' என்று தரலாம். எல்லோரும் ரசிப்பார்கள்' என்று நான் சொன்னதை, அந்த அசோசியேட் டைரக்டர், தம் ஆபீசுக்குப் போய், ''நாகேஷைப் பார்த்தேன். சிவாஜிக்கு வைர வாள், பத்மினிக்கு வைர மோதிரம் எல்லாம் தரப்போறாங்களாமே! எனக்கும் ஒரு பை நிறைய தங்கக் காசு கொடுக்கக் கூடாதா?'' என்று கேட்கிறார்'' என்று திரித்துச் சொல்லிவிட்டிருக்கிறார்.

விளைவு: புதுமையாக இருக்குமே என்று ஐடியா கொடுத்த நான், முற்றிலுமாகவே புறக்கணிக்கப்பட்டேன்.



• ஏவி.மெய்யப்பச் செட்டியார்

யோவுக்குள் நுழைந்தேன். ஏவி.எம்மின் சொந்தப் படம் என்று நினைவு. செட்டுக்குள் நுழைந்தவுடன், எனக்கு வழக்கமாக தரப்படுகிற சிகரெட்

குறும்பு விளையாடல்கள்!

திருவிளையாடல் படத்தின் போது நடந்த திருவிளையாடல் ஒரு பக்கம் இருக்கட்டும். நான் ஷூட்டிங்கின்போது, பண்ணின குறும்பு விளையாடல்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால், நேரம் போவதே தெரியாது.

ஒரு கால கட்டத்தில், தயாரிப்பாளர் சங்கத்தில் புரொடெக்ஷன் செலவு ஏறிக்கொண்டே போகிறது. இதனால் பல தயாரிப்பாளர்கள் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். தயாரிப்புச் செலவைக் குறைக்க, தயாரிப்பாளர்கள் எல்லாரும் சில கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள்.

ஒரு நாள் காலை ஷூட்டிங்குக்காக ஏவி.எம். ஸ்டுடி

பாக்கெட்டுகள் தரப்படவில்லை. கொஞ்ச நேரம் பொறுமையாக காத்துக் கொண்டிருந்தும் பலனில்லை.

மெதுவாக மேக்அப்மேனிடம் விசாரித்த போது, தயாரிப்பாளர்கள் சங்கத்தில் போட்ட தீர்மானத்தின்படி, சிகரெட் சப்ளை நிறுத்தப்பட்டு விட்டது என்று தெரிய வந்தது. எனக்கு இந்த விஷயத்தை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

பரபரப்பாக எல்லாரும் செட்டுக்குள் வேலைபார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் இதுதான் சரியான தருணம் என்று, நைஸாக அந்த செட்டுக்குள்ளே இருந்து நழுவி விட்டேன். ஷூட்டிங்கிற்கு எல்லாரும் ரெடி. ஆனால் நான் மட்டும் மிஸ்ஸிங்.

39 சிரித்து வாழ வேண்டும்



நாகேஷ்



• 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில்... படம் - நன்றி: பிலிம் நியூஸ் ஆனந்தன்

சில மணி நேரம் கழிந்தபின், நைஸாக மறுபடி செட்டுக்குள் வந்தேன். "எங்கே போயிட்டீங்க? உங்களை எங்கே எல்லாம் தேடறது? ஏதாவது வேலை இருந்தா, ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போயிருக்கலாமே!" என்று ஆளாளுக்கு என்னை கேள்விமேல் கேள்வி கேட்டார்கள்.

நான் எனக்குள் குறும்பாக சிரித்துக் கொண்டேன். பொறுமையாக நான் சொன்ன பதில் இதுதான்:

''உங்களுக்கெல்லாம் நான் ஒரு செயின் ஸ்மோக்கர் என்பது ரொம்ப நல்லாவே தெரியும். ஆனால், தயாரிப்பாளர் சங்கத்துல சிகரெட் சப்ளைக்குத் தடை போட்டது, எனக்குத் தெரியாது. ஷூட்டிங்கிற்கு வருகிறபோது, கையில் சிகரெட் கொண்டு வர மறந்து போய் விட்டேன். ஒரு டாக்சி பிடிச்சி, நான் வழக்கமாக சிகரெட் வாங்க கணக்கு வைத்திருக்கும் கடைக்குப் போய், சிகரெட்டையும் வாங்கிக் கொண்டு, டாக்சி சார்ஜையும் தருவதற்கு பணமும் வாங்கிக் கொண்டு வந்தேன். அதுதான் லேட்... சாரி!'' என்றேன்.

விஷயம் ஏவி.எம். செட்டியார் காதுக்குப் போனவுடனே, அவரிடமிருந்து அழைப்பு வந்தது. போனேன்.

'இனிமே இங்கே சிகரெட் சப்ளைக்குத் தடை ஏதும் கிடையாது. உங்களுக்குத் தேவையான சிகரெட், தேவையான அளவுக்கு தாராளமாகக் கிடைக்க நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்றார். உடனடியாக அதற்கு ஏற்பாடும் செய்து விட்டார்.

மிகவும் பிஸியாக நடித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில், எல்லாம் தயாராக இருந்து, நான் வராததால், ஷூட்டிங் தாமதமாவது பலரையும் எரிச்சலூட்டும். எனவே, அவர்கள் கவனத்தை திசை திருப்ப, பல்வேறு விதமான உபாயங்களை நான் கையாண்டிருக்கிறேன்.

ஆர்ட் டைரக்டர்களை நான் சிநேகம் செய்து கொள்ளுவேன். அவர்களிடம் என் கால்ஷீட் பிரச்னையை ரகசியமாகச் சொல்லி, 'செட் ரெடியாவதை' ஓரிரு நாட்கள் தாமதப்படுத்தச் சொல்லுவேன். அவர்களும் 'எல்லா வேலையும் முடிஞ்சாச்சு! பெயிண்ட் காயலை. ரெண்டு, மூணு நாளில் பக்காவா ரெடியாயிடும்' என்று சொல்லி, எனக்கு ஒத்துழைப்புத் தருவார்கள்.

அடுத்த கட்டமாக, நான் செட்டில் லைட் பாய்ஸ், எலக்ட்ரிஷியன் வேலைகளுக்குப் பொறுப்பான மேஸ்திரி ஆகியோரை என் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுவேன்.

ஒரு படத்தின் ஷூட்டிங்கில் இருப்பேன். வேறு ஒரு படத்தின் ஷூட்டிங்கில் கூப்பிடுவார்கள். 'ஒரு மணி நேரம் போதும்! எப்படியாவது அட்ஜெஸ்ட் பண்ணிக் கொண்டு, வந்து விட்டுப் போய் விடுங்கள் நாகேஷ்!'' என்று தகவல் வரும். கரெக்டாக அரை மணி நேரத்தில் அந்த ஷூட்டிங் ஸ்பாட்டில் நான் இருப்பேன். ஒரு மணி நேரம் போல, அங்கே நடித்துக் கொடுத்துவிட்டு, சிட்டாய்ப் பறந்து, பழைய ஷூட்டிங்கில் இருப்பேன்.

இதற்கு நான் கடைப்பிடித்த டெக்னிக்கை இப்போது நினைத்துப் பார்த்தால் 'அக்கிரமம்' என்று தான் தோன்றுகிறது.

(சிரிப்பு தொடரும்)



மல்லிகைப் பூ மழை!

கலை ரசிகர் கி. சந்திரசேகரன் நூற்றாண்டு

ஒரு முறை நடனக் கலைஞர் பாலசரசுவதி ஒரு திருப்புகழ் பாடலுக்கு அபிநயம் செய்தார். சிவனாக அபிநயம் செய்து, பிறகு ஜடைமுடி, பிறை, கங்கை எல்லாவற்றையும் கழற்றுவது போலச் செய்தார். அவையோருக்குப் புரியவில்லை. திருப்புகழுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என விழிப்பு! நிகழ்ச்சி முடிந்ததும் பலர் பாலசரசுவதியைப் பார்க்க உள்ளே சென்றார்கள். எல்லோரும் பேசிவிட்டுச் செல்லும் வரை காத்திருந்துவிட்டு, கடைசியாக 'பாலா'வைப் பார்த்தார் கி. சந்திரசேகரன்.

"சோர்வாக இருக்கிறீர்களே?"

"ஆமாம்"

"ஒரு சின்ன சந்தேகம். ஜடாமுடி, பிறை எல்லாம் கழற்றியதன் அர்த்தம் என்ன? ஏன் அப்படி அபிநயம் செய்தீர்கள்?"

"உங்களுக்கு என்ன தோன்றியது?"

"நீங்கள் ஆடியது திருப்புகழ். தந்தைக்கு உபதேசம் செய்கிறான் முருகன். ஆகையால் சீடனாக வரும் சிவன், குருவுக்கு முன்னால் அணிகலன்களை அகற்றி வினயமாக வருகிறார் என்று தோன்றியது."

'பாலா' கண்களில் சோர்வு மறைந்து, புத்துணர்வு தோன்றியது.

"இத்தனை பேர் பார்த்தார்கள். ஒருத்தருக்கும் புரியவில்லை. என்னை வந்து கேட்டார்கள். நீங்கள் ஒருவர்தான் புரிந்து கொண்டீர்கள். அது போதும்!"

சங்கீத ரசிகர். மியூசிக் அகடமியின் துணைத் தலைவராக இருந்திருக்கிறார். ஆனால் சினிமாப் பாட்டு என்றால் வெறுப்புக் கிடையாது. தணிக்கைக் குழு உறுப்பினராக இருந்தபோது கே.ஆர். ராமசாமி நடித்த படம் ஒன்றைப் பார்த்து விட்டு வீட்டுக்கு வந்தார். அதில் ஒரு பாட்டை கே.ஆர். ராமசாமி பாடுவது போலவே பாடிக் கொண்டே, "என்னமா பாடறார் தெரியுமா?" என்று ரசித்துக் கொண்டே சொன்னார். கண்ணை மூடிக் கொண்டு கேட்டால், கே.ஆர்.ஆர். பாடுவது மாதிரியே இருக்கும்.

சில வருடங்களுக்கு முன் தன் பேத்தி தயாவைப் பார்க்க அமெரிக்காவுக்குச் சென்றார். அந்த அனுபவங்களைப் பற்றி சுவையாக விவரிப்பார் :

"அங்கே மழை என்ன அழகாகப் பெய்கிறது தெரியுமோ? மல்லீப்பூ கொட்டற மாதிரி!"

மேடை நாடகங்களை ரசித்துப் பார்ப்பார். அதிலும் டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகங்களை மிகவும் விரும்புவார். டீ.வி., சினிமா நடிகர் ஏ.ஆர்.எஸ்., கி. சந்திரசேகரனின் உறவினர். அவர் அமெச்சூர் நாடக மேடையில் தோன்றுவது அதிர்ச்சி அளித்திருக்கும் என்று ஏ.ஆர்.எஸ். நினைத்தாராம். ஆனால் நாடகத்தைப் பார்க்க வந்த கி. சந்திரசேகரன், அவருக்கு ஒன்றல்ல, இரண்டு பாராட்டுக் கடிதங்கள் அனுப்பி வைத்தாராம்.

ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் மூன்றிலும் தேர்ந்தவர் சந்திரசேகரன். தாகூர் இலக்கியங்கள் பற்றி சென்னைப் பல்கலைக் கழகத்தில் இரண்டு வருடங்கள் மாதா மாதம் சொற்பொழிவாற்றியவர். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்தவர். நிறையச் சிறுகதைகள் எழுதியிருக்கிறார்.

தொகுப்பு :
சித்தார்த்



தி.சா.ராஜு

ராணுவத்தில் பணிபுரிந்த மருத்துவர் தி.சா. ராஜு. 5.12.1965 கல்கி ராணுவ மலரில், எழுதிய நெடுங்கதையின் ஒரு பகுதி இது. இந்தோ-பாக். யுத்தத்தினிடையே, போர்க்களத்தின் மத்தியில், எங்கோ ஒரு பாசறைக் கூடாரத்துக்குள்ளிருந்து, மண்ணெண்ணெய் விளக்கின் மஞ்சள் ஒளியில் இந்தக் கதையை கல்கிக்கு எழுதி அனுப்பினார் தி.சா.ராஜு.



பார்த்தனுக்காக

அந்தப் பரந்த பொட்டல் வெளியில் பெரிய வெள்ளைத் துணி விரித்திருந்தது. அதன் நடுவே பளிச்சிட்டது செஞ்சிலுவை உருவம். வானத்தில் ஐந்நூறு அடி உயரத்திலிருந்து பார்த்தாலும் அந்தச் சிலுவை அடையாளம் தெளிவாகப் புலப்படும். அதற்குப் பக்கத்தில் ஒரு நீண்ட துணிக் கூடாரம். கூடாரத்துக்குள் போர்க் களத்தில் காயமுற்ற போர் வீரர்கள் தரையில் படுத்திருந்தார்கள். வெள்ளை உடை அணிந்த நர்ஸிங் சிப்பாய்கள் பரபரப்புடன் இங்குமங்கும் ஓடினர்.

பத்து டாக்டர்களும், இருபது நர்ஸுகளும் சமாளிக்க வேண்டிய அத்தனை நோயாளிகளை இந்த இருவருமே கவனித்துக் கொண்டார்கள். என்றாலும் முகத்தில் துளி அலுப்புக் குறி இல்லை; சினம் இல்லை. சில நிமிஷங்களுக்கொரு தரம் நர்ஸிங் சிப்பாய் ராஜமாணிக்கம், வேணுகோபாலனுடைய நெற்றிப் பொட்டையும், கழுத்துப் பிடியையும் வெள்ளைத் துண்டினால் துடைத்து விட்டான். சூடான தேநீரைக் கலந்து அவருடைய வாயருகில் கொண்டு போனான். அவருடைய இரண்டு கைகளுக்கும் அவ்வளவு ஒழிவில்லாத வேலை இருந்தது.

இரண்டு கால்களிலும் இடது கையிலும் பலத்த கட்டணிந்திருந்த ஹவால்தார் சொக்கலிங்கத்தின் கேஸ்

காகிதத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு எழுந்தார் மேஜர் ஜான்ஸன். பரிவுடன் சொக்கலிங்கத்தை நோக்கினார். அவருடைய நெற்றிப் பொட்டைத் தடவிக் கொடுத்தார். 'ஆம்புலன்ஸ் வண்டி வருவதற்கு இன்னும் கொஞ்ச நேரம் பிடிக்கும். இங்கேயும் ஹெலிகாப்டர் ஸர்வீஸ் தொடங்குமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்று கூறியவாறே கர்னல் ஜனார்த்தனம் தமது ஜீப்பை விட்டுக் கீழே இறங்கினார். 'குட்மார்னிங் டாக்' வலது கையிலிருந்த தமது பிரம்பை உயர்த்தினார்.

'மார்னிங், மார்னிங் ஸார்' தமது இரு கரங்களையும் பேஸினில் கழுவியவாறே பதிலிறுத்தார் ஜான்ஸன். கர்னல் நேராக ஹவால்தார் சொக்கலிங்கத்தை அணுகினார். அவருக்குப் பக்கத்தில் மண்டி போட்டு உட்கார்ந்தார். 'வளர வேதனிக்குன்னோ சொக்கலிங்கம்?' கண்கள் பனிக்கக் கேட்டார். சொக்கலிங்கம் தலையை நிமிர்ந்து பார்த்தார். நாக்குப் புரளவில்லை. உடலையும் அசைக்க முடியவில்லை. கண்கள் பேசின. ஆயிரம் சொற்கள் மௌனப் பூவாய்ச் சொரிந்தன.

'விசனிக்கண்டா சொக்கலிங்கம், நீங்கள் அறியாதது ஏதுமில்லை. இதெல்லாம் யுத்தத்திலே சகஜமாணு. நிங்களோட தைர்யம் ஸாஹஸம் இதொக்க எங்களுக்கு ஆதர்சம். தெய்வமுண்டு ஹவல்தார்ஜீ. விஸ்வாஸம் பலதாயகம்."

பட்டாலியன் கமாண்டரின் பரிவு



மட்டும் அன்று!

மிக்க சொற்கள் சொக்கலிங்கத்தை நெகிழ வைத்தன. 'காம்ரேடியர்' என்று இதைத்தான் ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள். போர்க்களத்தில் எதிரியின் படைக்கலத்தின் முன்பு ஏற்படும் சமத்துவ உணர்ச்சியும், அந்தத் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் துணிச்சலும் அங்கே மட்டும் கிடைக்கக்கூடிய அற்புதமான அனுபவமாகும்.

டாட்ஜ் ட்ரக் ஒன்று வெளியே வந்து நின்றது. அதனுடைய முன் ஆசனத்திலிருந்து சுபேதார் மேஜர் பரசுநாத் டோக்ரா கீழே இறங்கினார். மருதோன்றி தடவிய நரைத்த தலைமயிரிலிருந்துதான் அவர் வயதானவர் என்பது தெரிந்ததே தவிர, மற்றப்படி அவருடைய முகத்தில் சுருக்கமில்லை. உடலில் தொய்வு இல்லை. அவருடன் கூட அழகிய நாய் ஒன்றும் கீழே குதித்தது. பரசுநாத்துக்கு



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2004

படைப்பாளிகளுக்கும்...

வாசக எழுத்தாளர்களுக்கும் மாபெரும் வாய்ப்பு!

முதல் பரிசு	–	ரூ.	**10,000**
இரண்டாம் பரிசு	–	ரூ.	**7,500**
மூன்றாம் பரிசு	–	ரூ.	**5,000**

கடைசித் தேதி : ஜூன் 15

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும். விதிமுறைகள், மற்ற விவரங்களுக்கு 2.5.2004 இதழ் கல்கியைப் பாருங்கள். அல்லது அடுத்த இதழுக்குக் காத்திருங்கள்.

- ஆர்.

முன்பு அது சொக்கலிங்கம் படுத்திருந்த ஸ்ட்ரெச்சரை நோக்கித் தாவி வந்தது. மெல்லிய குரலில் கரைந்தது. சொக்கலிங்கத்தின் உடலையும் காலையும் நக்கிற்று. ஸ்ட்ரெச்சரைச் சுற்றிச் சுற்றி வந்து கூத்தாடத் தொடங்கிற்று. நாவு இருந்தால் அந்த நாய் பேசி அரற்றியிருக்கும்.

பரசுநாத் கமாண்டரை நோக்கி ஸலாம் வைத்தார். ஸ்ட்ரெச்சரின் முன்பு மண்டி போட்டு உட்கார்ந்தார். ஹவல்தார் சொக்கலிங்கத்தின் முகத்தைப் பார்த்துத் தேம்பித் தேம்பிச் சிறு குழந்தையைப் போல் அழுதார். அவருடைய முகத்தைக் கண்ணீரால் கழுவினார். அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டார். "சொக்கலிங்கம், நீ என் குரு, என் ஸ்வாமி. நான் உன்னை மறுபடியும் காணப் போகிறேனா?" என்று அவர் விம்மினார்.

சொக்கலிங்கத்தின் உதடுகள் துடித்தன. கண் இமைகள் படபடத்தன. உடல் அசைந்தது. அவரால் பேச முடியவில்லை. மகிழ்ச்சியும் துயரமும் தொத்து வியாதியைப் போன்றது. பரசுநாத் அனுபவித்த மனத் துயரம் அங்கே நிழலைப் போலப் பரவத் தொடங்கியதும், கர்னல் ஜனார்த்தனம், சுபேதார் மேஜரைத் தனிமையில் அழைத்துக் கொண்டு போய்த் தேற்றினார். "பரசுநாத் சாகிப்! நீங்கள் என்ன, இப்போதுதான் போர்க்களத்தைப் பார்க்கிறீர்களா? டோப்ருக்கும் மலேயாவும் மறந்து போயிற்றா? ஜங்கட் போர் உங்களுக்கு நினைவில்லையா? உங்களுக்கு முன்னால் நாங்கள் அனைவரும் சிறுவர்கள். நீங்கள் இப்படி அழலாமா?" அவருடைய குரல் தழுதழுத்தது. கண் இமை ஓரங்கள் பனித்தன.

"மன்னிக்க வேண்டும் கர்னல் ஸாஹிப்!" பரசுநாத் தலையைக் குனிந்து கொண்டார். பிறகு தணிந்த குரலில் பேசத் தொடங்கினார். "என்னுள் நிறைந்திருந்த மயக்கத்தை நீக்கி, சக்தியைத் தூண்டி, படையினரின் ஒரு புதிய சாதனையை என் மூலம் செய்தார் சொக்கலிங்கம். இந்த ஹில் போஸ்டை அவருடைய தூண்டுதல் இல்லாமல் என்னால் பிடித்திருக்க இயலாது. ஆனால் அந்த வெற்றியின் பயனை அனுபவிக்க முடியாமல் சொக்கலிங்கம் தமது இரு கால்களையும் இடதுகையையும் இழந்து விட்டாரே! இதை என்னால் தாங்க முடியவில்லையே!"

விர்ரென்று தாழப் பறந்து வந்தது ஒரு விமானம். அதன் வால் புறத்திலிருந்த மூவண்ண வட்டம் வெயிலில் பளபளத்தது. எல்லோருடைய பார்வையும் வானத்துக்கு உயர்ந்தது. அது ஓர் இன்டர்ஸெப்டர் நாட். இந்தியாவில் செய்தது. எல்லைக்கோட்டை ஒட்டியிருந்த இந்தியச் சாவடி வரை சென்று,

கிழக்கு நோக்கித் திரும்பிற்று. நாட் விமானம் பறப்பதைக் காணும்போதெல்லாம் படை வீரரின் உதிர நாளங்கள் விம்மிப் புடைத்தன.

வெளிப்புறத்தில் நிஸ்ஸான் ஜீப் வந்து நின்றது. சொக்கலிங்கம் படுத்திருந்த ஸ்ட்ரெச்சரை நலுங்காமல் ஜீப்பினுள் வைத்தார்கள் நால்வர். இன்னும் இரு நோயாளிகள் அதில் ஏறி உட்கார்ந்தனர். இருவரும் முதல் நாள் போரில் காயமடைந்த வீரர்கள்.

"இந்த ஜீப் 'தவ்வி' ஆற்றைக் கடந்து எப்படிப் போகும்?'' என்று கர்னல் ஜனார்த்தனம் வினவினார்.

''நெஸஸிடி-மதர் ஆஃப் இன்வென்ஷன் ஸார். நமது தொழிற்சாலையில் பெரிய பெரிய எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள். நீரிலே நிற்கும் 'டக்' வண்டிக்கும் கரையோரத்துக்கும், ஓர் இணைப்பைத் தயாரித்து விட்டார்கள். இரவுக்கிரவே, ஜீப்பை 'டக்'கினுள் ஏற்றி விடுகிறார்கள். டக் ஜீப்புடன் எதிர்க் கரைக்குச் செல்லுகிறது. அந்தக் கரையிலும் ஒரு பாலம் இருக்கிறது. அதன் வழியாக ஜீப் இறங்கி விடுகிறது. இன்னும் ஒரு மணி நேரத்தில் இந்த ஆம்புலன்ஸ் ஜீப் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்து விடும்.'' மேஜர் ஜான்ஸன் பதிலிறுத்தார்.

"உண்மையில் ஜான்ஸன், நம்முடைய பையன்கள் இந்த நெருக்கடிக் காலத்தில் காட்டியிருக்கும் முன்யோசனை, செயல் திறமை இவற்றுக்கு ஈடு இணையே இல்லை. ஒருவரையாவது இதைச் செய், அதைச் செய் என்று நாம் உத்தரவு தரவில்லை. இரவும் பகலும் தாங்களாகவே உழைத்து அவர்கள் வேலையை முடித்து விட்டார்கள். 'வி ஆர் மேக்கிங் ஹிஸ்டரி ஜானி, நாட் ரைட்டிங் இட்.' (We are making history Johny, not writing it) என்றாவது நமது நாட்டினர்கள் இதை உணரும் காலம் வரும்'' உற்சாகத்துடன் கூறினார் கர்னல் ஜனார்த்தனன்.

ஸ்டெரிலைஸ் செய்த கொதி நீரில் மத்தூளையும் சர்க்கரையும் போட்டு, டப்பாப் பாலைக் கலந்து பீங்கான் மக்கில் கொண்டு வந்தான் நாயக் கோவிந்தன். அந்தத் தேநீரின் சில துளிகளைச் சொக்கலிங்கத்தின் வாயில் செலுத்தினார் பரகநாத். சொக்கலிங்கத்தின் கண்கள் பெருக்கெடுத்தன. இருவரையும் தனியே விட்டு மற்றவர்கள் விலகினர்.

சரளைக் கல் பாதையில் அலுங்காமல் நகர்ந்தது அந்த ஆம்புலன்ஸ் வண்டி! "போலோ ஹவால்தார் சொக்கலிங்கம் கி!'' பரகநாத் டோக்ரா கையை உயர்த்தினார்.

'ஜே' கூடாரத்தினுள் படுக்கையில் இருந்த நோயாளிகள் உட்படப் பலர் பலத்த கோஷமிட்டனர்.

கியரை மாற்றி வேகத்தை அதிகப் படுத்தினான் ஆம்புலன்ஸ் டிரைவர். சுபேதார் மேஜரின் கையில் பிடித்திருந்த சங்கிலியைத் தறித்துக் கொண்டு, ஒரேயடியாக அம்பைப் போல் பாய்ந்தது சொக்கலிங்கத்தின் நாய் நிம்மி. பந்து போல் உருண்டு அந்த ஜீப்பைப் பின் தொடர்ந்தது. ஒருகணம் வேகத்தைத் தணித்தது ஜீப். பிறகு விரைவாகச் செல்லத் தொடங்கிற்று.

தொலைவில் இரண்டு புள்ளிகள் தெளிவாகத் தெரிந்தன. ஒன்று அந்த ஆம்புலன்ஸ், மற்றது - நிம்மி -சொக்கலிங்கத்தின் பைரவம்!

"அந்த ஸ்டண்ட் நடிகரை தேர்தல் பிரசாரத்துக்குக் கூப்பிட்டது தப்பாப் போச்சு."

''ஏன்?''

''எதிர்க்கட்சிக்காரரை கடுமையா, தாக்கிப் பேசும் போது, உணர்ச்சிவசப்பட்டு பக்கத்தில் இருந்த தலைவர் மூஞ்சில விட்டார் ஒரு குத்து!''

- அனிதா ராமச்சந்திரன்



திசை திரும்பும் அலை

சிவகங்கை

தமிழகத்தின் மொத்த கவனத்தையும் ஈர்த்துள்ள தொகுதிகளுள் ஒன்று, சிவகங்கை. "தொகுதிக்கு என்ன செய்தார்?" என்ற கேள்வியை இந்தத் தேர்தலிலும் எதிர்க்கட்சிகள் முன்வைக்க, காங்.-தி.மு.க. கூட்டணி வேட்பாளராக களம் இறங்கியிருக்கிறார் ப.சிதம்பரம்.

தொகுதிக்கு என்ன செய்தார்? என்ற கேள்விக்கு இப்போதெல்லாம் தொகுதி மக்களே பதில் வைத்துள்ளார்கள் : "அவர் எதுவும் செய்யவில்லை. நீங்கள் என்ன செய்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்" என்று எதிர்க்கட்சியினரை நோக்கிக் கேட்க ஆரம்பித்துள்ளார்கள்.

பலமிக்க கூட்டணி, தொகுதிக்குப் பரிச்சயமில்லாத எதிரணி வேட்பாளர், அரசியல்வாதி என்ற நிலைக்கு அப்பாற்பட்டு, 'சிந்தனைவாதி' என்ற மக்களின் முடிவு... ப. சிதம்பரத்தின் வெற்றிக்குச் சாதகமான அம்சங்கள்.

எதிர்த்துப் போட்டியிடும் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர், சுப. கருப்பையா தம்முடைய இன வாக்குகள், ஜெயலலிதாவின் செல்வாக்கு, இரட்டை இலை விசுவாசிகள்... இவற்றை நம்பி வலம் வருகிறார்.



• கருப்பையா



• ப.சிதம்பரம்

திருமயம், காரைக்குடி, திருப்பத்தூர், திருவாடானை, சிவகங்கை! இளையான்குடி ஆறு சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய சிவகங்கை தொகுதியில், சுப. கருப்பையாவுக்கு அதிக செல்வாக்கு உள்ள தொகுதி, திருவாடானை. ஆனால் ஜெ. அரசு மீதான எதிர்ப்பு அலை அவரது செல்வாக்கைத் திசை திருப்பி விட, 'உள்ளதும் போச்சே' என்று நொந்து போயிருக்கிறார். இதுபோதாதென்று, முக்குலத்தோருக்கு எதிராக, மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இணைந்திருப்பதும் கருப்பையாவுக்குப் பின்னடைவைத் தந்திருக்கிறது.

கூட்டணிக் கட்சிகளைப் பொறுத்தவரை, ப.சிதம்பரத்திற்கு தி.மு.க.வும், கம்யூனிஸ்டுகளும் அதிகமாகவே வேலை செய்கின்றனர்.

"இதுநாள்வரை இந்தியா என்ற கண்ணாடி மூலம் சிவகங்கை தொகுதியைப் பார்த்தேன். இனிமேல் சிவகங்கை என்ற கண்ணாடி மூலம் இந்தியாவைப் பார்ப்பேன்..."

"கைது செய்யப்பட்டபோது கலைஞரின் அவிழ்ந்த வேட்டியையும், அலறல் சப்தத்தையும் ஒவ்வொரு தி.மு.க.வினரும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்"

"நன்றி, வணக்கம் என்று சொன்ன ம.தி.மு.க.வுக்கு, பதினெட்டு மாத சிறையா?"

இவ்வாறு பல்வேறு தரப்பினரையும் உணர்ச்சிகரமாகவே உசுப்பேற்றி விடுகிறார் சிதம்பரம்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் தம்முடைய நகரத்தார் சமூகத்தினர் உள்ள ஒவ்வொரு ஊருக்கும் வாக்குகள் கேட்டுக்

• பிரசாரத்தில் அ.தி.மு.க. வேட்பாளர்



திணறும் அ.தி.மு.க.!

கடிதம் எழுதுவது, சிதம்பரத்தின் வழக்கமாம். ஆனால் இந்தத் தேர்தலில் இது வரை அதுபோன்ற கடிதம் எதுவும் வரவில்லை என்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்களாம்.

சிவகங்கை தொகுதி முழுவதும் அ.தி.மு.க.வினர் காட்டும் பிரசார வேகமும், விளம்பர வேலைகளும் கூடுதலாகவே இருக்கின்றன. அ.தி.மு.க.வின் வெற்றிக்காக, அமைச்சர் வேலுச்சாமி கடுமையாக வலம் வந்து கொண்டிருக்கிறார். இந்தத் தொகுதியில் வெற்றியை இழந்து விடக்கூடாது என்பதில், கூடுதல் அக்கறையுடன் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் கோகுல இந்திரா எம்.பியும், உமாதேவன் எம்.எல்.ஏயும்.

முதல்வர் ஜெயலலிதாவின் காரைக்குடி வருகை, கிராமப்புறப் பகுதிகளில் ஓரளவு மாற்றத்தை ஏற்படுத்தலாம். காரைக்குடியில் ஜெயலலிதா பேசிய போது, ப. சிதம்பரம் பற்றி வாயே திறக்கவில்லை.

ப. சிதம்பரத்தை ஆதரித்து அண்மையில் சிவகங்கைக்கு விசிட் செய்த காங்கிரஸ் தலைவர் சோ. பா., "இந்தத் தொகுதியில் உட்கட்சிப் பூசல் இல்லாமல் காங்கிரஸ் ஒற்றுமையாக வேலை செய்கிறது, வேறு எந்த தொகுதியிலும் இல்லாத அளவிற்கு" என்றார். அதற்குப் பிறகு, ப. சிதம்பரத்துக்கு ஆதரவு திரட்ட சிவகங்கைக்கு வந்த ஜி.கே. வாசனை வரவேற்ற நாளிதழ் விளம்பரங்களில், ப.சிதம்பரம் புறக்கணிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க முடிந்தது.

அ.தி.மு.க. அரசின் மீதான பல்வேறு அதிருப்திகளில் உள்ள மக்கள், அரசு அதிகாரிகள், பலமான கூட்டணி, தனிப்பட்ட செல்வாக்கு என்று, இந்த ஓட்டப் பந்தயத்தில் ப.சிதம்பரம் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில், வெற்றியை எட்டிப் பிடிப்பார் என்ற கருத்தே நிலவுகிறது.

இந்த ஒருமுறை எம்.பி. ஆகிவிட்டால் அடுத்த முறை தொகுதியை இழக்காத அளவிற்கு, "தொகுதிக்கு என்ன செய்தார்" என்று கேள்வி கேட்க முடியாமல் "எல்லாம் செய்வார்" என்றே பேசிக் கொள்கின்றனர் மக்கள்.



★ பிரசாரத்தில் சிதம்பரம்

முன்னாள் அமைச்சர் தா.கியுடைய ஆதரவாளர்களின் வாக்கு, சிவகங்கை பகுதியில் தி.மு.க.வுக்கு எதிராகத் திரும்பும் என்று அ.தி.மு.க. நம்புகிறது. ஆனால் தா.கியின் ஆதரவாளர்கள் உள்ள பகுதியான மானாமதுரை, இராமநாதபுரம் தொகுதியில் போய் விடுகிறது. சிவகங்கையில் தா.கியின் ஆதரவாளர்களின் வாக்கு தி.மு.க. வைத் தவிர வேறு யாருக்கும் கிடைக்காது. அந்த அளவிற்கு தா.கியின் தி.மு.க. விசுவாசம், அவரது ஆதரவாளர்களையும் திசைதிருப்பாது என்றே பேசிக் கொள்கிறார்கள்.

- குன்றக்குடி சிங்காரவடிவேல்

ஹைஸ்கூலில் ஐ.ஏ.எஸ்!



பரபரப்பான பனியன் சிட்டியான திருப்பூரின் கொங்கு பிரதான சாலை. ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை அருகே அமைந்துள்ள சி.கே.எஸ் வளாகம். எந்த அலுவலகமும் திறக்கப்படாத அந்தக் காலை ஏழரை மணிக்கு, முதல் ஆளாக தமது அலுவலகத்தைத் திறக்கிறார் அந்த இளைஞர். திறந்தவர் துடைப்பத்தை எடுத்து அவரே பெருக்கவும் செய்தார். பத்துக்கு இருபது நீள அகலம் கொண்ட ஒரே அறையில், பத்துப் பதினைந்து ஃபைபர் நாற்காலிகள். அது ஒரு வகுப்பறை என்பதை உணர்த்துவது போல், மார்க்கர் கொண்டு எழுதும் வெண்ணிற பிளைவுட் எழுதுபலகை சுவரில் இடம் பிடித்திருந்தது. சரியாக ஏழு ஐம்பதுக்கு, புத்த கப் பைகளுடன் உள்ளே நுழைந்த பதினாறு வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகள் இருக்கைகளை நிறைத்தார்கள். சரியாக எட்டு மணி, "இன்றைய கவிதையை யார் சொல்லப் போகிறார்கள்?" என்றார் இளைஞர். கௌரி சங்கர் என்ற மாணவர் எழுந்து, துண்டுச் சீட்டில் எழுதி வந்த கவிதையை வாசித்தார்;

'புகை
மனித குலத்தின்
முதல் பகை!
மனிதா
நீ புகை மீது
பற்று வைத்தால்
அது உனக்குள்
புற்று வைக்கும்!'

என்று தொடங்கிய கவிதையைக் கேட்டு அனைவரும் கைதட்ட, அந்தக் கவிதையோடு அன்றைய வகுப்பு தொடங்கியது. நிக்கோடின் பற்றியும், பாசிவ் ஸ்மோக்கிங் பற்றியும், கேன்சரைக் குணப்படுத்த முடியாது; ஆனால் நம்மால் தடுக்க முடியும் என்பது பற்றியும் எளிமையாக எடுத்துச் சொன்ன அந்த இளைஞர், சூரியகுமார்! அடுத்து, இரு ஆங்கில வார்த்தைகளுக்கு இடையிலான உறவுகளை விளக்கும் அனாலஜி பற்றி வகுப்பைத் தொடர்ந்தார். மணி எட்டு முப்பத்தைந்தைத் தொட்டதும், அனாலஜியைத் தற்காலிகமாக நிறுத்தினார்.

"கிரண்பேடி எதிர்கொண்ட சவால்கள், இன்று ஆறாவது பகுதியைப் பார்க்கப் போகிறோம்" என்று முதல் நாள் விட்ட இடத்திலிருந்து கிரண்பேடியின் திகார் சிறைச்சாலை சீர்திருத்தம் பற்றி, கதை போல, சுவாரஸ்யமாக விவரிக்க ஆரம்பித்தார். மணி எட்டு ஐம்பத்தைந்தை எட்டியதும், வகுப்பை நிறுத்திக் கேட்டார். "இன்றைக்குக் குட்டிக்கதை சொல்லப் போவது யார்?" மாணவி ஸ்வேதா எழுந்து குட்டிக்கதை சொன்னார்.


"வண்ணத்து பூச்சியைப் பார்த்து, அவசரப்பட்டு வெளியே வந்த கூட்டுப் புழு கேட்டது. 'உனக்கு இத்தனை பளபளப்பான வண்ணங்கள் எப்படிக் கிடைத்தன? வண்ணத்துப் பூச்சி சொன்னது: நான் இறக்கைகள் முளைக்கிறவரை பொறுமையோடு கூட்டுக்குள் தவம் இருந்தேன். அதற்கு கிடைத்த வரம் இந்த வண்ணங்கள்.' கூட்டுப்புழு வெட்கித் தலை குனிந்தபடி இலையைத் தின்றது. வண்ணத்துப் பூச்சியோ பறந்துபோய் மலரில் தேனெடுத்தது" என்று ஸ்வேதா முடித்ததும், மற்ற மாணவர்கள் இதை "எங்கே படிச்சீங்க?" என்று கேட்க, "இறையன்பு ஐ.ஏ.எஸ் புத்தகத்தில்"

என்றார். ''ஓ.கே பாய், நாளைக்குப் பார்க்கலாம்'' என்று எல்லோருக்கும் சூரியகுமார் விடை கொடுக்க, ''சி யூ மாஸ்டர்'' என்றபடி மாணவ, மாணவிகள் அவரவர் பள்ளிகளுக்கு விரைந்தனர்.

இங்கே என்ன நடக்கிறது? நன்னடத்தைப் பயிற்சி வகுப்பா? அதுதான் இல்லை, ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் பயிற்சி வகுப்பு என்றால், நம்ப முடிகிறதா? நம்புங்கள். ''ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் என்று லட்சியம் கொண்டிருக்கிற மாணவர்கள், அந்தத் தேர்வுகளுக்கு

• சூரியகுமார்





தங்களைத் தயாரித்துக் கொள்ள, எதற்குப் பட்டப்படிப்பு வரை காத்திருக்க வேண்டும்? உயர்நிலைப் பள்ளி படிக்கிற போதே தினசரி ஒரு மணி நேரம் ஒதுக்கி விடலாம் அல்லவா? அதற்கான முயற்சி தான் இது'' என்று விழி விரிய வைக்கிறார், இரண்டு முதுகலைப் பட்டங்கள் பெற்று, முனைவர் பட்டத்திற்குப் படித்துக்கொண்டே, தி காம்பட்டிடீவ் வோர்ல்டு என்ற பயிற்சி நிறுவனத்தைத் தொடங்கி நடத்திவரும் சூரியகுமார். இப்படியொரு பயிற்சி வகுப்பைத் தொடங்க வேண்டும் என்று சூரிய குமாருக்குள் பனிச்சிட்டது எப்படியாம்?

''நான் இப்போது விட்டில் ஸ்டார் மெட்ரிகுலேஷன் என்ற தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் நான் பணி புரிந்த பள்ளியிலிருந்து விலகினேன். அப்போது மாணவர்கள் என் வீட்டுக்குப் படையெடுத்து வந்து விட்டார்கள். 'இனி எங்களுக்குத் தன்னம்பிக்கை தரப் போவது யார்?' என்று கேட்டு நெகிழ வைத்தார்கள். அந்த நிமிடங்களில் என் மனத்தில் தோன்றிய பொறிதான் இந்த காம்பட்டிடீவ் வோர்ல்டு'' என்று சொல்லும் சூரியகுமார், கற்பித்தலில் இனிமை, கவுன்சலிங் முறையில் கலந்துரையாடல், வகுப்புக்கள் அளவிலான தனித்திறமைப் போட்டிகள், என்று மாணவர்களை வசிகரித்திருக்கிறார்.

இப்போது ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் பாடங்களை, ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குக் கற்பிக்கும் வண்ணம் எளிமைப்படுத்தி, பயிற்சி அளித்துவரும் சூரியகுமார், ''மதிப்பெண் அடிப்படையிலான கல்வி கூடாது. அதற்கு மாற்றுக் கல்வி வேண்டும் என எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் ஆக்கப்பூர்வ முயற்சிகள் இல்லை. முதலில் மாணவர்களது தனித்திறமைகளையும், அவர்களது எண்ணங்களையும் அடிப்படையாக வைத்து, அவர்களை 'மோட்டிவேட்' செய்ய வேண்டும். அதை நமது கல்வி முறை செய்யத் தவறி விட்டது'' என்கிறார்.

திருப்பூரில் உள்ள அரசுப் பள்ளிகள் விரும்பினால், தற்போது மாணவர்களுக்கு தரும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் பயிற்சியை, இலவசமாக மாணவர்களுக்கு அளிக்கத் தயாராக இருக்கிறேன்'' என்கிறார் விருது எதுவும் பெறாத இந்த இளம் நல்லாசிரியர்!

— ஆர்.சி.ஜெ




அரபுக் கவி அல்கோசாய் பாலைவனத்தில் வசித்தார். ஒருநாள் நாவா மரம் ஒன்றைக் கண்டார். அதன் கிளையிலிருந்து வில்லையும் சில அம்புகளையும் நெடுநேரம் சிரமப்பட்டுச் செய்து கொண்டார். இரவு காட்டுக் கழுதைகளை வேட்டையாடப் புறப்பட்டார். ஒரு கழுதைக் கூட்டம் போகும் காலடிச் சத்தம் கேட்டது. கழுதைக் கூட்டத்தை நோக்கி முதல் அம்பைச் செலுத்தினார். இருளில் அம்பு ஒரு கழுதையின் உடலை ஊடுருவி, பக்கத்திலிருந்த பாறையைத் தாக்கியது. அவ்வளவு பலத்துடன் வில்லை வளைத்திருந்தார். அம்பு பாறையில் பட்ட சப்தம் கேட்டுக் குறி தவறி விட்டதே என வருந்தினார். இரண்டாம் அம்பை எய்தார். அதுவும் ஒரு கழுதையின் உடலை உருவிச் சென்று பாறையில் மோதியது. திரும்பவும் குறி தவறி விட்டதாகத் தவறாக நினைத்தார். அதுபோலவே மூன்றாம், நான்காம், ஐந்தாம் அம்புகளையும் எய்தார். ஒவ்வொரு தடவையும் அம்பு பாறையில் மோதும் அதே சத்தம். கோபத்தில் வில்லை உடைத்து விட்டார். காலையில் எழுந்து பார்த்த போது, பாறை அருகே ஆற்றல் மிக்க வில்லின் சக்தியால் ஐந்து கழுதைகள் விழுந்து கிடப்பதைக் கண்டார். அவர் மட்டும் பொறுமையோடு காலை வரை காத்திருந்தால், மன அமைதியையும் இழந்திருக்க மாட்டார். வில்லையும் இழந்திருக்க மாட்டார்.

(ஆதாரம் : ஸ்ரீ அன்னை அமர கதைகள் - ஸ்ரீஅரவிந்த ஆசிரம வெளியீடு.)

இங்கிலாந்தில் பட்ட இன்னல்கள்...

சின்னஞ்சிறு ஊர், ஹூக்ளி மாவட்டத்திலுள்ள 'கோனகர்'. பழைய சம்பிரதாயங்களில் ஊறிய கிராம மக்கள். தெய்வமே நேரில் வந்து காட்சி தந்தாலும், தங்கள் சம்பிரதாயப்படிதான் காட்சி தர வேண்டும் என தெய்வத்திடமே வற்புறுத்தக்கூடிய பிடிவாதம் கொண்டவர்கள்! என்ன செய்வது! அவர்கள் தங்களின் மூடப்பழக்க வழக்கங்களையே தெய்வமாகக் கும்பிட்டுப் பழகிப் போனவர்கள்!




புரட்சிகரமான உயர்ந்த கருத்துகளைக் கூறி, விவேகானந்தர் போன்ற ஆன்மிகச் சிங்கங்கள் கர்ஜித்த போதெல்லாம், பாரதமெங்கும் இருந்த இத்தகைய மக்கள் தொடக்கத்தில் தங்கள் செவிகளில் இன்னும் அதிகமாக மூடநம்பிக்கைப் பஞ்சை வைத்து மூடிக் கொண்டவர்கள்தாமே! அவர்கள் கோபம் கொள்ளத் தக்கவர்கள் கூட அல்ல, இரங்கத் தக்கவர்கள்.

அத்தகைய மக்கள் வாழ்ந்த அந்தக் கோனகர்தான், ஸ்ரீஅரவிந்தரின் தந்தை டாக்டர் கிருஷ்ண தனகோஷின் சொந்த ஊர். கடல் கடக்கலாகாது என்ற அந்த ஊர்ப் பிற்போக்கு மதவாதிகளின்

திருப்பூர் கிருஷ்ணன்

எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல்தான் கோஷ், மருத்துவ மேற்படிப்பான எம்.டி. படிப்பதற்காக இங்கிலாந்துக்குச் சென்றார். அவர் பாடம் கற்றுத் திரும்பி சொந்த ஊருக்கு வந்த போது, ஊர் மக்கள் அவருக்குப் பாடம் கற்பிக்க விரும்பினார்கள்! பிராயச்சித்தச் சடங்கை அவர் மேற்கொள்ள வேண்டும் என்றும், இல்லாவிட்டால் ஜாதிப் பிரஷ்டம் செய்யப் படுவார் என்றும் எச்சரித்தார்கள்.

ஜாதிப்பிரஷ்டம்! கோஷ் தமக்குள் நகைத்துக் கொண்டார். அட



மூட மக்களே! உங்கள் ஜாதி நெறியும், நீங்கள் அனுசரிக்கும் தீண்டாமையும் உங்களோடு போகட்டும். என்னை நீங்கள் என்ன ஜாதிப்பிரஷ்டம் செய்வது! நான் பிராயச்சித்தம் செய்யாவிட்டால் ஊரிலிருந்து விலக்கி வைப்பீர்கள். அவ்வளவுதானே! நீங்கள் என்ன விலக்குவது! நானே விலகிக் கொள்கிறேன்.

அவர் தாம் எந்தத் தவறும் செய்யவில்லை என்றும், பிராயச்சித்தமெல்லாம் செய்ய இயலாது என்றும் கண்டிப்பாக மறுத்துவிட்டார். சரசரவென்று தம் சொந்த ஊரிலுள்ள சொத்துகளையெல்லாம் குறைந்த விலைக்கு விற்றுத் தீர்த்தார். ஊரை விட்டு நிரந்தரமாக விலகி விட்டார். ஊர் மக்கள் கடும் அதிர்ச்சி அடைந்தார்கள் என்பதைச் சொல்லத் தேவை

யில்லை. பிறகு அவர் குல்னா, ராம்பூர், பகல்பூர் மாவட்டங்களில், சிவில் சர்ஜனாகப் பணியாற்றினார். ஓர் உயர்ந்த மருத்துவரின் தொண்டை அந்தக் கிராம மக்கள் நிரந்தரமாக இழந்தார்கள்.

இந்து சமய மூடநம்பிக்கைகள் மேல் கொண்ட வெறுப்பு, கோஷை ஆங்கில நாகரிக மோகம் என்ற தவறான பாதைக்குத் திருப்பியது. ஆனால் அடிப்படையில் அவர் தாராள சிந்தை கொண்ட கனவான். தம் சக்திக்கும் மீறி வாரி வாரி வழங்கிய வட இந்தியப் பாரி. 'தனக்கு மிஞ்சித்தான் தானமும் தருமமும்' என்ற பழமொழியின் அர்த்தத்தை அவர் உணரவில்லை. அவ்விதம் உணராததன் கடும்விளைவுகளை சொந்த வாழ்வில் அவரும், அவர் காரணமாக அரவிந்தர் உள்ளிட்ட அவர் குடும்பத்தினரும் சந்திக்க நேர்ந்தது. குறைந்த விலைக்கு அவசர அவசரமாக விற்ற சொத்துகளால் கிடைத்த தொகை, விறுவிறுவென்று குறையத் தொடங்கியது.

போதாக்குறைக்கு அரவிந்தரின் தாய் சுவர்ணலதா தேவி, மனநோயால் பாதிக்கப்பட்டார். கொஞ்ச காலமாகவே இந்தப் பிரச்னைதான். அதற்கான மருத்துவச் செலவுகள் காலவரையற்று நீண்டன. அரவிந்தர் தாய்ப் பாசத்தைச் சரிவர அனுபவித்தவர் அல்ல. தந்தைப் பாசத்தையும் எங்கே அனுபவித்தார்! சிறு வயதிலேயே விடுதிக்கு அனுப்பிப் படிக்க வைக்கப்பட்டார். பின் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அரவிந்தர் மேல் மிகுந்த பாசமுள்ள கோஷுக்கு, அதை வெளிப்படையாகக் காண்பிக்கக் கூட நேரமில்லை. அவ்வளவு வேலை. நேரம் காலம் பாராத மருத்துவப் பணி.

கோஷ் தம் மூன்று மகன்களை இங்கிலாந்தில் படிக்க வைக்க விரும்பினார். ரங்பூர் மாஜிஸ்ட்ரேட் கிளேசியர், கோஷின் நெருங்கிய நண்பர். கிளேசியரின் உறவினர் வில்லியம் ட்ருவெட், மான்செஸ்டரில் வசித்து வந்த ஒரு பாதிரியார். 1880ம் ஆண்டு கோஷ் இங்கிலாந்துக்குச் சென்று தம் மூன்று பிள்ளைகளையும் அந்தப் பாதிரியாரின் பொறுப்பில் விட்டுவிட்டு இந்தியா திரும்பினார்.

அரவிந்தருக்கு அப்போது வயது ஏழு. அரவிந்தரின் அண்ணாக்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டார்கள். அரவிந்தருக்கு ட்ருவெட்டும், அவர் மனைவியும் கொஞ்ச காலம் வீட்டிலேயே கல்வி கற்பித்தார்கள். ட்ருவெட் லத்தீனும் ஆங்கிலமும் கற்பித்தார். அவர் மனைவி வரலாறு, கணிதம் போன்றவற்றைக் கற்பித்தார். ஐந்தாண்டுகள் மான்செஸ்டரில் படித்தார் அரவிந்தர். பின் பன்னிரண்டாம் வயதில் 1884ல் லண்டன் செயின்ட் பால் பள்ளியில் படிப்பு. 1890ல் பதினெட்டு வயதில் கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரியில் சேர்ந்தார்.

இளம் அரவிந்தர் தாமாகவே பைபிள் படிக்கலானார். ஷெல்லி, கீட்ஸ் கவிதைகளைப் படித்தார். பின்னாளில் ஆங்கிலேயர்களே வியக்கும் அளவு ஆங்கில ஆளுமை பெற, அப்போதே அவர் மனத்தில் அடித்தளம் போடப்பட்டது. வார்த்தைகளில் அடங்க மறுத்த ஆழ்ந்த நுண்ணுணர்வுகளைக் கூட, மொழிக்குள் இழுத்துக் கொண்டு வரும் பேராற்றலுக்கான வித்து, இளம் வயதிலேயே ஊன்றப்பட்டது.

சிறு வயதிலேயே கவிதைகள் எழுதலானார். அவை அப்போதே 'ஃபாக்ஸ் வீக்லி' என்ற பத்திரிகையில் வெளிவரவும்

அருள்வாக்கு

'வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது' என்ற வார்த்தை இப்போது ரொம்பவும் அடிபடுகிறது. சர்க்கார் திட்டங்கள் இதற்குத்தான் என்கிறார்கள். எல்லோருக்கும் வயிறு நிரம்பச் சாப்பாடு, மானத்தையும் குளிர் வெயிலையும் காப்பாற்றப் போதுமான வஸ்திரம், வசிப்பதற்கு ஒரு சின்ன ஜாகை இருக்க வேண்டியதுதான். இதற்கே சர்க்கார் திட்டம் போட வேண்டும். இதற்கு அதிகமாகப் பொருள்களைத் தேடிப் போவதால், வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடாது. உண்மையில் 'வாழ்க்கைத் தரம்' என்பது வெளிவஸ்துக்களின் பெருக்கத்தில் இல்லை. தரமான வாழ்க்கை மன நிறைவோடு இருப்பதுதான். தேவைகளை அதிகமாக்கிக் கொண்டு அவற்றுக்காக ஆலாப் பறப்பதால் நிறைவு ஒரு



வருக்கும் கிடைக்காது. இதைப் பிரத்யட்சத்தில் பார்க்கிறோம். நாம் மேல்நாட்டுக்காரர்கள் மாதிரி, போக போக்கியங்களுக்குப் பறக்கிறோம். போகத்தின் உச்சிக்குப் போன மேல் நாட்டுக்காரர்களோ அதில் நிறைவே இல்லை என்பதால், நம்முடைய யோகத்துக்கு, வேதாந்தத்துக்கு, பக்திக்குக் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டிருக்கிறார்கள். இதைப் பார்த்துக் கூட நாம் புத்தி பெறவில்லை என்றால், அதுதான் துரதிருஷ்டம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

செய்தன. பின்னாளில் உலகக் கவிதை வரலாற்றில் நிரந்தரமாக இடம்பெறப் போகும், 'சாவித்திரி' என்ற தத்துவக் காப்பியத்தை எழுதப் போகிறவர் அல்லவா! உலக சரித்திரம், பல மொழி இலக்கியம் என, அரவிந்தர் படித்துத் தீர்த்த புத்தகங்கள் கணக்கற்றவை. விளையாட்டுத் துறையில் அவர் அதிகக் கவனம் செலுத்தியதாகக் குறிப்பெதுவும் கிட்டவில்லை. (இளம் வயதில் பாரதியாரும் கணக்கில்லாத நூல்களைப் படித்தவர்தானே! அதாவது 'கணக்கு' இல்லாத மற்ற துறை நூல்கள்! 'கணக்கு பிணக்கு ஆமணக்கு!' என்றவரல்லவா பாரதியார்!)

தம் பிள்ளைகள் மூவருக்கும் அவர்கள் மான்செஸ்டரில் படித்துக் கொண்டிருந்த போது, கோஷ் ஆண்டுக்கு முன்னூற்றி அறுபது பவுன் செலவுக்காக அனுப்பி வந்தார். சுமார் ஆறு ஆண்டுகள் அவர் அனுப்பியிருக்கலாம். பிறகு பணம் அனுப்புவது கடும் சிரமமாகி விட்டது. அவர் செய்த தான தர்மங்களால், பொருளாதாரச் சிக்கல் அவரை வாட்டி வதைக்கத் தொடங்கியது. குழந்தைகளைப் பராமரித்த ட்ரூவெட்டுக்குப் பராமரிப்புச் செலவுக்கான பணம் வந்து சேரவில்லை. அரவிந்தரும் அவரது சகோதரர்களும் ட்ரூவெட் குடும்பத்தை விட்டுப் பிரிந்து, தனியே வசிக்கலானார்கள். ஆஸ்திரேலியா போகிற வழியில் கல்கத்தாவுக்கு வந்து, தம் பாக்கியை வசூல் செய்து கொண்டு போனார் ட்ரூவெட்.

அரவிந்த சகோதரர்கள் உணவுக்குக் கூடக் கஷ்டப்படலானார்கள். காலையில் இரண்டு ரொட்டித் துண்டுகள். கொஞ்சம் வெண்ணெய். ஒரு கோப்பைத் தேநீர். மாலையில் ஏதோ கொஞ்சம் உணவு. மதிய உணவுக்கு வழியில்லை. லண்டனில் கடும் குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள, சரியான ஸ்வெட்டர் கூடக் கிடையாது.

ஆனால் அரவிந்தரிடம் புறச்சூழல்களைக் குறைசொல்லி வருந்தும் போக்கு இருந்ததேயில்லை. 'எவ்வளவு பாதகமானச் சூழ்நிலையிலும் கூட மகிழ்ச்சியாக வாழப் பழகும் பயிற்சிதான் வாழ்க்கை' என்று சொல்வாரே சிவானந்தர், அதைத் தன்னியல்பாகப் பெற்றிருந்தார் ஸ்ரீஅரவிந்தர். இன்று எத்தனை பேரைப் பார்க்கிறோம்! முன்னேறாமல் இருப்பதற்கு அவர்கள் சொல்லும் எத்தனை காரணங்களைக் கேட்கிறோம்! எந்தத் துறையிலும் முன்னேறாமல் இருப்பவர்கள், அதற்குத் தங்களைத் தவிர மற்ற எல்லாக் காரணங்களையும்தானே நீண்ட பட்டியலிட்டு வரிசைப்படுத்துகிறார்கள்!

தந்தையாரின் இயலாமை காரணமாக, அரவிந்தரும் அவருடைய சகோதரர்களும் வெளிதேசத்தில் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆனால் இதன் பொருட்டுத் தந்தையை அரவிந்தர் கடுகளவும் குறைகூறவில்லை. தந்தைக்கு எழுதிய கடிதங்களில், தம் சிரமங்களைப் பற்றி அவர் குறிப்பிடவே இல்லை.

அரவிந்தர் படித்தாக வேண்டும். தம்முடன் இருந்த சகோதரர்களுக்கும் அவர் தம்மாலியன்ற உதவி செய்ய விரும்பினார். அப்புறம் சாப்பாடு, போக்குவரத்து, உடை, தங்குமிட வாடகை... தந்தையிடமிருந்து சரிவரப் பொருளுதவி வராத சூழலில், அரவிந்தருக்கு உதவி எங்கிருந்து வந்தது? அவருக்கான உதவி அவரிடமிருந்தே வந்தது! அது எப்படி?...

(அமுதம் பெருகும்)

வலைபாயுதே!



தலையெழுத்து!

உங்களின் செல்ல நாயை எப்படியெல்லாம் வளர்க்கலாம்... அதற்கு நீச்சலடிக்க, வேட்டையாட, பியானோ வாசிக்க, பைக் ஓட்ட என்று 'சகல' வித்தைகளையும் கற்றுக் கொடுப்பது எப்படி... என்று படங்களுடன் விளக்கும் தளம் dog-play.com. நாய்களுக்கான அழகுக் குறிப்புகள், மருத்துவக் குறிப்புகள் மற்றும் நாய்கள் பற்றி என்னென்ன புத்தகங்கள் வந்துள்ளன, எத்தனை விதமான நாய்கள் உள்ளன, அவற்றிற்கான உணவுக் குறிப்புகள் என்ன... எல்லாம் தெரிந்து கொள்ள குலைக்கிறது... ச்சீ.. அழைக்கிறது இந்தத் தளம்!

(தெரு நாய்களிடமிருந்து தப்புவது எப்படி என ஆலோசனை கூற முடியுமா?)

அப்துல் கலாமின் கனவுப்படி - இந்திய இளைஞர்கள் செயல்பட, நிச்சயம் காண வேண்டிய வலைத் தளம் - www.changemaker.net வரலாறு படிக்கும் இளைஞர்களை விட, வரலாறு படைப்பவர்களே முக்கியம் என்கிறது இத்தளம். இதில் வரும் ஆன்லைன் பத்திரிகைகள், உலக அளவிலான மாற்றங்கள், வளர்ச்சிகள், எதிர்காலப் போக்கு பற்றிய கட்டுரைகளை ஆழமான, தெளிவான புள்ளி விவரங்களுடன் தருகிறது. இதில் 'நூலகம்', மல்டி மீடியா உடன் தகவல்களைத் தரும் 'ஸ்டுடியோ' பகுதி, என பல தலைப்புகளில் தகவல்கள் நிறைந்து கிடக்கின்றன. மனித வள மேம்பாடு முதல், உலகப் பொருளாதாரம் வரை, எதைப் பற்றியும் பார்க்கலாம் இத் தளத்தில்!

('மசாலா'வை விரும்பும் இளைஞர்களுக்கு - இத்தளம் ஒரு 'ஆர்ட் ஃபிலிம்')



•ப்ரீத்தி

லாரா தத்தா, கரிஷ்மா கபூர் - உடன் கிசுகிசுக்கப் பட்ட அபிஷேக் பச்சன், தற்போது கைகோத்திருப்பது பிரீத்தி ஜிந்தாவுடன். 'Kal Ho Naa Ho' படத்தில் சேர்ந்து நடித்து, ஜெயா பச்சனின் உள்ளத்தில் இடம் பெற்ற ப்ரீத்தி - அடுத்ததாக அமிதாப் தயாரிக்கும் 'ரன்வீர்' படத்தில் அபிஷேக்குடன் இணையப் போகிறாராம்! ஐஸ்வர்யாவால் கைவிடப்பட்ட சல்மான்கான், அடுத்ததாக மடக்கியிருப்பது கத்ரீனா - கைஃப்பை! பிபாசா பாசு - ஜான் ஆபிரகாம் ஜோடி பிரிந்து விட்டதாம் - என 'ஜோடி'ச் செய்திகளை கோடிட்டுக் காட்டுகிறது bollywoodblitz.com


(ஜோடிச் செய்திகள் - தேர்தல் கூட்டணி போல.... மாறுதலுக்குட்பட்டது)

ஜாலி SMS

மணிரத்னம் உங்களை வைச்சுப் படம் எடுத்தாருன்னா, என்ன பெயர் வைப்பார்?

'தலைவியெழுத்து!'

— முகில்







எட்டுப் போட்டால் கட்டுப் போடணும்!

கொளுத்துகிற வெயிலில் அரசியல்வாதிகள் ஒருத்தருக்கொருத்தர் கொத்து பரோட்டா போட்டுக் கொள்வதில் வழி பிதுங்கி நிற்பது வாகன ஓட்டிகளும், நடைவாசிகளும்தான். ஏதாவது ஒரு சந்து பொந்துகளில் நுழைந்து தப்பிக்கலாம் என்று முயற்சி செய்தால், அது எங்காவது ஒரு மேடையில் போய் முட்டிக் கொண்டு நிற்கிறது. சனியன் சண்டைகள் உச்சத்தில் இருக்க, பனியன் நனைந்த பைக்வாசிகள், ஹாண்ட் ஃபிரீ மொபைல் போனில் மனைவிகளுக்கு தாமதம் பற்றி தடுமாறித் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் இது எந்த அளவுக்கு ஆபத்தானது? வாகனம் ஓட்டும்போது மொபைலில் பேசுவது, பல நாடுகளில் - இந்தியா உட்பட தடை செய்யப்பட்டிருக்கிறது. கைகளைப் பயன்படுத்தாமல் இருக்க, வாகனர்கள் இயர் போன்களையும், லவுட் ஸ்பீக்கர்களையும் பயன் படுத்துகிறார்கள். கைகள் கவனமாக வண்டியைப் பற்றிக் கொண்டிருப்பதால், விபத்துகள் குறைந்திருக்கின்றனவா என்று ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஸ்வீடனில் இருக்கிற SNRA - Sweden National Road Administration இப்படி வாகனம் ஓட்டும்போது மொபைல் பயன்படுத்துகிறவர்களை, ஆய்வுக்கு உட்படுத்தியது. மொத்தம் 48 நபர்கள். பாதிப் பேர் கைகளால் செல் போனைப் பயன் படுத்தினார்கள். பாதி நபர்கள் இயர்போனைப் பயன்படுத்தினார்கள். எல்லோருக்கும் ஒவ்வொரு தொண்ணூறு நிமிடத்திற்கும் பத்து அழைப்புகள், வெவ்வேறு சூழ்நிலைகளில் கொடுக்கப்பட்டன. முடிவில் இரண்டு பிரிவினருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. கைகளில் எடுத்துப் பேசினாலும், அப்படியே பேசினாலும், விபத்து ஏற்படும் சதவிகிதம் ஒரே அளவாக இருந்தது. விபத்துக்கான அடிப்படைக் காரணம் கவனச்சிதறல்தான். இதில் சிலருக்கு வண்டி ஓட்டிக் கொண்டிருக்கும்போது செல் அழைப்பு வந்தால், சத்தத்தில் உடனே இரத்த அழுத்தம் அதிகமாகிறது. இது பெரிய வம்பு!

15 வஸந்த் செந்தில்



"உங்களுக்கு அசையாச் சொத்து ரெண்டு கோடி இருக்குனு சொல்றீங்களே... பங்களாவா? பண்ணையா?"

"அட நீங்க வேறே... ஒரு வேலையும் செய்யாம வீட்டுலே தூங்குற என் பசங்க புண்ணியகோடி, தனுஷ்கோடியைச் சொன்னேன்."

- தஞ்சை தாமு

ஏற்கெனவே ஒழுங்கற்ற சாலை விதிகளால் நம் ஊர்ச் சாலைகள் இப்போது செல்பேசி வாகன ஓட்டிகளால் மேலும் பாதுகாப்பற்றதாகிவிட்டன.

டெல்லி ஐ.ஐ.டி.யின் பேராசிரியர் தினேஷ் மோகன் சமீபத்தில் ஹெல்மெட் பற்றி அற்புதமான கட்டுரையை வெளியிட்டிருக்கிறார். இவர் இருபத்தி ஐந்து வருடங்களாக சாலைப் பாதுகாப்பு பற்றி ஆய்வு நடத்துகிறவர். ஹெல்மெட் பற்றிய நமது பல்வேறு தவறான நம்பிக்கைகளுக்கு, அவரிடம் ஆய்வு பூர்வமான விடைகள் இருக்கின்றன.

ஹெல்மெட், மிகக் குறைவான வேகத்தில் வாகனம் ஓட்டும்போது தேவையா? கண்டிப்பாகத் தேவை. 17 kmph வேகத்தில் விழுந்தாலும், மிகக் கடுமையான பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஹெல்மெட் பயன்படுத்தினால் கழுத்து வலி வரும் என்பது உண்மையா? இல்லை. டாக்டர் நியூமேன் என்கிற கனடிய ஹெல்மெட் டிஸைன் விற்பன்னர், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாகன ஓட்டிகளை ஆய்வு செய்து, ஹெல்மெட்டிற்கும் கழுத்துவலிக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று நிரூபித்திருக்கிறார். ஹெல்மெட்டுகள் சத்தம் கேட்காமல் தடுக்கின்றனவா? ஹெல்மெட் அணிவதால் குறைகிற சத்தத்தின் அளவு, ஏ.ஸி. காரில் இருக்கும்போது குறைகிற சத்தத்தின் அளவுதான். பின்னால் வருகிற வாகனம் அடிக்கும் ஹாரன் சத்தம், தெளிவாகக் கேட்கும். ஹெல்மெட் போடும்முன் ஒரு கர்ச்சீப் கட்டி, பின் அதன் மேல் ஹெல்மெட் போடுவது நல்லதா? இது அவரவர் விருப்பத்தைப் பொருத்தது. அறிவியல் ரீதியாக இப்படி ஹெல்மெட்டின் உள்ளே கட்டுகிற துணி உதவும், உதவாது என்று நிரூபிக்கப்படவில்லை. ஹெல்மெட் போட்டால் முடி கொட்டுமா? ஹெல்மெட்டை வண்டி ஓட்டாதபோதும் போட்டுக் கொண்டே இருப்பது, தேவையற்ற வியர்வைக் கசகசப்பை முடிகளுக்குத் தரும். ஆனால் முடி கொட்டுவதற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிற மாதிரி தெரியவில்லை.

சென்னை போன்ற பெருநகரங்களில் வண்டி ஓட்டுகிறவர்களுக்கு என்னுடைய தாழ்மையான பத்து விண்ணப்பங்கள் இதோ...

1. ஒன் - வே தானே என்று அசுர வேகத்தில் போகாதீர்கள். ஓராயிரம் விதிமீறல் வாகனங்கள் உங்கள் விதியோடு விளையாடிப் பார்க்கும்.

2. வண்டி ஓட்டும்போது செல்போனை ஸ்விட்ச் ஆஃப் செய்துவிடுங்கள்.

3. தரமான ஹெல்மெட்டுகளைப் பயன்படுத்துங்கள்.

4. சாலை விதிகளைப் பின்பற்றுவதை ஒரு பழக்கமாக மாற்றிக் கொள்ளுங்கள்.

5. நாற்பது கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் போகாதீர்கள்.

6. தண்ணீர் லாரிகள் வந்தால் மரியாதையாக வணங்கி வழி விடுங்கள்.

7. புதுமனைவி பில்லியனில் இருக்கிற உற்சாகத்தில், எட்டு போட்டுக் காட்டாதீர்கள். பின்னால் கட்டு போட்டுக் காப்பாற்ற வேண்டி வரும்.

8. வாகன இன்ஷூரன்ஸை ஒழுங்காகக் கட்டுங்கள்.

9. ஆறு மாதத்திற்கு ஒருமுறை சர்வீஸ் செய்யுங்கள். (ரிப்பேர் இருந்தாலும் இல்லாவிட்டாலும்)

10. இதையெல்லாம் பின்பற்ற முடியாதவர்களுக்கு ஒரே ஒரு குறுக்கு வழி இருக்கிறது. வாகனம் ஓட்டாமலிருங்கள்!

(தொடரும்)



100/100
குழந்தைகளோடு
தவறாமல் பார்க்க
தரமான படம்!
அம்புலி மாமா ..நான் தானே
ஏவிஎம்மின்
சூர்யா
பேரழகன்
U
சசிசங்கர்
AVM PRODUCTIONS
M.சரவணன் M.பாலசுப்ரமணியன் M.S.குகன் B.குருநாத்

ருக்மிணி பார்த்தசாரதி ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறுகதைகள் எழுதியவர். 1954ம் ஆண்டு முதல் எழுதிவந்த இவர், பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளார். எழுத்தாளர் ஆர். சூடாமணியின் சகோதரி. 24.3.1968 கல்கியில் இவர் எழுதிய கதை இது.





ருக்மிணி பார்த்தசாரதி

அப்பப்பா! என்ன ராட்சசக் குளிர்! கால் கைகள் பனிக் கட்டியால் உறைந்து விட்டன. விரல்கள் சிவக்கச் சிவக்க வீங்கி விட்டன. தற்செயலாய்க் குழந்தை கைமேல் மோதினாலும் வலி தாங்க முடியவில்லை. இந்த ராஞ்சி நகரின் கஷ்டமே இதுதான். வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள் திடீர் திடீரென்று மழை பெய்யும். வெய்யில் கால மழை, வரப்பிரசாதமாய்த் தோன்றும். ஆனால் குளிர்கால மழையோ, இதயமற்ற எஜமானனைப் போல் வாட்டி எடுத்து விடும்.

கடந்த இரண்டு நாட்களாய் விடாத மழை. ராஞ்சியில் அக்டோபரில் ஆரம்பிக்கும் குளிர், மார்ச் முடியும்போது தான் அகல்கிறது. இதுவோ ஜனவரி மாதம்! நான் புடைவைக்குமேல் ஸ்வெட்டர், அதற்கு மேல் சால்வை, கால்களில் மேஜோடு அணிந்திருந்தேன். இருந்தும் குளிரில் உடல் நடுங்கிற்று. சமைப்பது இந்தக் குளிரில் இதமான காரியம்தான். ஆனால் அடுப்பின் தகதகப்பினால் கூடப் பல் நடுக்கம் பூரணமாய் அகலவில்லை.

காலை எட்டு மணி.

குளியலறைப் பக்கம் பார்வையைப் பதித்தேன். மோனிகா பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தாள். காதுகளையும் கழுத்தையும் மூடியபடி ஒரு நூல் சவுக்கம். சாதாரண நூல் ரவிக்கைதான். ஜில்லிட்டிருந்த நீரைத் தெளித்து, கைகளை அழுத்தி அவள் பித்தளைப் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்தாள்.

மோனிகா இங்கே முன்பு எப்பொழுதோ குடியேறிவிட்ட ஆதிவாசிகளைச் சேர்ந்தவள். இரண்டு தலை முறைகளாகின்றன, அவர்கள் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்து. இப்பொழுதெல்லாம் அவர்களை யாராவது தப்பித் தவறி "ஆதிவாசிகள்" என்று அழைத்து விட்டால், கண்களில் சீற்றம் கொப்புளிக்க அவர்கள், "எங்களை 'கிறிஸ்டியன்ஸ்' என்று கூப்பிடு!" என்று வெடிக்கும் அளவுக்குக் கிறிஸ்துவ மதத்தில் ஊறிவிட்டார்கள்.

மோனிகாவுக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் இருபத்தைந்து வயது இருக்கலாம். ஆனால் பதினாறு வயதில் மணமாகி, நான்கு மக்களைப் பெற்று மூவரைச் சாகக் கொடுத்தவள் அவள். பார்க்க இன்னும் பதினாறு வயதுப் பெண்ணைப் போலத்தான் இருந்தாள். ஒற்றை நாடியான சரீரம், குழந்தை முகம். நான்கு மக்களைப் பெற்றவள் போலவோ, இன்னும் ஆறு மாதங்களில் ஐந்தாவது குழந்தைக்குத் தாயாகப் போகிறவள் போலவோ இல்லை, அவளைப் பார்த்தால்...

அவள் பாத்திரம் தேய்த்து முடித்தபோது, கடச்கட ஒரு தம்ளர் தேநீரை அவளிடம் கொடுத்தேன்.

அதை அவள் ஆவலோடு வாங்கிக் கொண்டாள்... சற்று மறைவாகப் போய் நின்று கொண்டு, சொட்டுச் சொட்டாகப் பருகினாள். அவள் நின்றிருந்த இடத்தில், மழை பனிக்கட்டிகளை அர்ச்சனை செய்தது. இருந்தும் தேநீரின் சூட்டில் அவள் அதைப் பொருட்படுத்தாதவளாய் நின்றிருந்தாள்.

இங்கோ, ஸ்வெட்டர், சால்வை, மேஜோடு அணிந்து, அடுப்பின் முன் நின்று கொண்டு நான் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தேன்.

சட்டென்று என் மனத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. பெட்டியில்



தோல்வி

இரண்டு ஸ்வெட்டர்கள் இருக்கின்றன... அவற்றில் ஒன்றை இவளுக்குக் கொடுக்கலாம்... ஒரு நல்ல காரியம் செய்த நிறைவு மனத்தில் நிலைக்கும்.

"மோனிகா! நீ மத்தியானம் வரும்போது ஒரு ஸ்வெட்டர் தருகிறேன்!" என்றேன். அவள் முகம் மலர்வதைக் காண வேண்டும் என்ற ஆசை எனக்கு. என் ஆசை வீண் போகவில்லை. அவள் முகம் ரோஜா மலராய் மலர்ந்து, அழகு சிந்திற்று.

குழந்தைகள் பள்ளிக்குப் போய்விட்டார்கள். எனக்கும் உள் வேலை முடிந்து விட்டது. மோனிகா மறுபடியும் மத்தியானம் இரண்டு மணிக்கு வருவாள். அதற்குள் ஸ்வெட்டரை எடுத்துத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

பெட்டியைத் திறந்து அந்த இரண்டு ஸ்வெட்டர்களையும் வெளியே எடுத்தேன்.

எதை அவளுக்குக் கொடுக்கலாம்?

முதல் ஸ்வெட்டர் கையில் கொஞ்சம் கிழிந்திருந்தது. பரவாயில்லை. தைத்துவிடலாம்... தையல் கொஞ்சம் வெளியே தெரியும். ஆனால் குளிருக்கு அடக்கமாய் இருக்குமே!

மற்றொன்றைப் பிரித்தேன். கருநீலத்தில் புது ஸ்வெட்டர். பின்னின கையோடு நான் அதைத் தண்ணீரில் போட்டபோது "கப்"பென்று சுருங்கிவிட்டது. மட்டரக "உல்", ஆனால் அதன் அளவு மோனிகாவைப் போன்ற ஒற்றை நாடிச் சரீரத்துக்குச் சரியாயிருக்கும்.

எதை அவளுக்குக் கொடுக்கலாம்?

கையில் கிழிந்த பழைய ஸ்வெட்டர் ஒன்று. வெளிர் நீலப் பொத்தான் பளபளக்கும் புது ஸ்வெட்டர் மற்றொன்று.

எதைக் கொடுக்கலாம்?

புதிதையே பெறும் தகுதி மோனிகாவிடம் இருந்ததை நான் உணர்ந்தேன்... கிறிஸ்துமஸின் முதல் நாளன்று லீவு வேண்டும் என்று கேட்டிருந்தவள், அன்று எங்கள் வீட்டுக்கு யாரோ சாப்பிட வருகிறார்கள் என்று அறிந்ததும், "தனியாய் விருந்துச் சாப்பாடு தயார் செய்ய வேண்டுமே, நீங்கள்! பாத்திரம் தேய்க்க உங்களுக்கு நேரம் இருக்காது. நான் லீவு எடுத்துக் கொள்ளவில்லை!" என்று வேலைக்கு ஆஜரானாள். இந்த நல்ல மனதுக்கு நான் எதைக் கொடுத்தாலும் ஈடாக முடியாது.

இரண்டு ஸ்வெட்டரையும் கையில் எடுத்துப் பார்த்தேன். அவற்றின் வெது வெதுப்பை ஸ்பரிசித்தேன். வெது வெதுப்பு! பழையதானால் என்ன, புதிதானால் என்ன? வெதுவெதுப்பு இரண்டுக்குமே சொந்தம். இந்தக் குளிரில் அது தானே முக்கியம்!

பழைய ஸ்வெட்டரைப் பிரித்துக் கிழிந்த இடத்தைத் தைத்தேன். இது போதும் மோனிகாவுக்கு. குளிருக்கு அடக்கமாக இருக்கும். புதிதைப் பிரித்தால் என் பிள்ளைக்கு ஒரு 'ஸ்லீவ்லெஸ்' பின்னிவிடலாம். "உல்" விலைதான் இப்போதெல்லாம் நயமாயிருக்கிறதா? பௌண்ட் நாற்பது ரூபாய்!

மத்தியானம் வேலைக்கு வந்த மோனிகாவிடம் பழைய ஸ்வெட்டரைக் கொடுத்தேன். அவள் வாங்கிக் கொண்டு நமஸ்கரித்தாள்.

இரண்டரை மணிக்கு வானம் வெளுத்து விட்டது. மூன்று மணிக்கெல்லாம் நல்ல வெயில்!

மூன்றேகால் மணிக்கு என் சிநேகிதை ஒருத்தியின் பெண் வித்யா, என் மக்களோடு விளையாட வந்தாள். வெயில் காயும் தைரியத்தில் ஸ்வெட்டர் அணியாமல் வந்திருந்தாள்.

மாலைப் பொழுது மங்க, மங்க, காற்றில் மறுபடியும் குளிர்ச்சி!

வித்யா குளிரில் நடுங்குவதைப் பார்த்து விட்டு, நான் அந்தப் புது ஸ்வெட்டரை எடுத்து வந்து அவளுக்கு அணிவித்தேன். அவள் சிவந்த நிறத்துக்குப் பொருந்தியிருந்தது. வெளிர் நீலப் பொத்தான் பளபளக்கும் கருநீல ஸ்வெட்டர்!

சுமார் ஏழு மணிக்கு வித்யாவின் அண்ணன் அவளை அழைத்துப் போக சைக்கிளில் வந்தான். அவள் இல்லம் செல்லக் கிளம்பினாள்.

''இதென்ன வித்யா? மாமி வீட்டு ஸ்வெட்டரோடு ஜம்னு கிளம்பறியே!'' என்றான் அவன்.

"இருக்கட்டும். நாளைக் காலை கொடுத்தால் தீர்ந்தது... இப்போது அவள் ஸ்வெட்டரைக் கழற்றினால் இந்தக் குளிரில் ஜலதோஷம் பிடிக்கும்!" என்று சகோதரனையும், சகோதரியையும் அனுப்பி வைத்தேன்.

ஆனால் மறுநாள் காலை சுமார் ஒன்பது மணிக்கு வந்த வித்யா ஸ்வெட்டரோடு வரவில்லை. கண்ணீரோடு வந்தாள்.

விஷயம் இதுதான். சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து வந்து கொண்டிருந்தவள், அண்ணனோடு பேசும் சுவாரசியத்தில், கையிலிருந்த ஸ்வெட்டர் நழுவிக் கீழே விழுந்ததைக் கவனிக்கவில்லை. என் வீட்டுக்கருகே வந்தபோது தான் ஸ்வெட்டர் இல்லாததைக் கவனித்தான். திரும்பிப் போய் வழியெல்லாம் தேடின போது அது கிடைக்கவில்லை. யார் கையில் கிடைத்ததோ? இப்போது என்னிடம் விஷயத்தைச் சொல்லப் பயத்தோடு அவன் வந்திருந்தான்.

"போனால் போகிறது? இதற்கா அழுகை? கண்ணைத் துடைத்துக்கொள்!'' என்று அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பினேன்.

மறு நாள் வேலைக்கு வந்த மோனிகா, "மேம்சாஹேப்! நீங்கள் எனக்கு ஸ்வெட் டர் கொடுத்த வேளை, எனக்கு இன்னொரு ஸ்வெட்டர் கிடைத்திருக்கிறது!'' என்றாள்.

என் மனத்தில் சட்டென்று ஏதோ விழிப்பு ஏற்பட்டது. 'ஸ்வெட்டரா? கிடைத் ததா?'' என்றேன்.

"ஆமாம்... நேற்று நான் வீதியில் போன போது காலில் இடறிற்று. புத்தம் புதிய கருநீல ஸ்வெட்டர். பளபளக்கும் வெளிர் நீலப் பொத்தான்கள். யாருடையதோ?"

நான் பதில் சொல்லவில்லை. இதயத்தில் ஏதேதோ உணர்ச்சிகள் ஏற்பட்டன.

'ஸ்வெட்டரைக் கையில் எடுத்த போது, இதைத் தொலைத்துவிட்டு இந்தக் குளிரில் யார் அழுது கொண்டிருக்கிறார் களோ என்று தோன்றிற்று. அருகிலிருந்த வீடுகளிலெல்லாம் விசாரித்தேன். யாருமே தனதென்று சொல்லவில்லை. அதை எடுத்துக் கொண்டு நடந்தேன். ஏனோ அது கையில் கனத்தது! கடைசியில் மாதா கோயிலுக்குப் போய், சிலுவைக்குமுன் அதை வைத்து விட்டு, ஒரு காகிதத்தில் "சரி" என்றும், மற்றொன்றில், "தப்பு" என்றும் எழுதி, காகிதங்களைக் குலுக்கி ஒன்றை எடுத்தேன். "சரி!" என்று வந்தது. "சரி" என்று ஏசுநாதன் சொல்லி விட்டதால் அதை நான் வைத்துக் கொள்வதில் தவறில்லை என்று தெளிந்தேன்!"

தெய்வ சித்தமா அது? ஆம், தெய்வ சித்தம்தான். அவள் வணங்குவது ஏசுநாதனும், நான் வணங்குவது ஸ்ரீராமபிரானுமாக இருந்தாலென்ன? தெய்வம் ஒன்றுதான். அதன் சித்தம் இதுதான்.

மோனிகாவின் நல்ல மனத்துக்கு இது ஏற்ற பரிசு. கிறிஸ்துமஸின் முதல் தினம் என் கஷ்டத்தைக் கண்டு, தன் கஷ்டம் பாராமல் அவள் பாத்திரம் தேய்க்க வந்தாளே, அதற்கு இது தகுந்த வெகுமதி... ஆயினும் என் மனத்தில் இன்பமில்லை. நானாக அதைக் கொடுத்திருக்கக் கூடாதா? கிழிந்த ஸ்வெட்டரைக் கொடுத்து விட்டு, அவள் நன்றியைப் பெற்றுக் கொண்டேனே, அதற்குப் பதில் அந்தப் புதியதை நிறைந்த மனத்தோடு கொடுத்திருக்கலாகாதா? நான் தோற்று விட்டேன்!



''என் மாமியார் அரசியலில் குதிச்சதிலிருந்து ரொம்பத்தான் மாறிட்டாள்.''

''எப்படி?''

''இப்போதெல்லாம் என்னைக் கண்டால்கூட கையெடுத்துக் கும்பிடுறாள்னா பார்த்துக் கோயேன்!''

- ஆர்.என். செழியன்

லோஹானா சொல்வதைக் கேளுங்க!

தேர்வு சமயத்தில் நன்றாகப் படித்திருப்பீர்கள். தலைக்குள் எல்லா பதில்களும் சுற்றிக் கொண்டே இருக்கும். ஆனால் விடைத்தாளில் பதிலை எழுதிவிட முடியாமல், எதுவோ தடுக்கும். முடிவு: பத்து அல்லது பதினைந்து மார்க்கை அனாவசியமாகக் கோட்டை விடுவீர்கள்!

இதைத் தவிர்க்க, மும்பை பேராசிரியர் ஆதித்ய லோஹானா ஒரு வழியைக் கண்டுபிடித்து, மிக வெற்றிகரமாக மும்பை மாணவ - மாணவிகளுக்குச் சொல்லிக் கொடுத்து வருகிறார். அவர் சென்னைக்கு வந்திருந்தார்.

மெட்ரிகுலேஷன் (10ஆவது) வகுப்புத் தேர்விலும், +2 (ஸ்டேட் போர்டு) தேர்விலும் நீங்கள் பத்து முதல் பதினைந்து சதவிகித மதிப்பெண்கள் கூடுதலாக வாங்க, அவர் சொல்லும் எளிய ஃபார்முலா:

LISTEN, READ AND WRITE

கேட்பது என்பது முதலாவது: இதை வகுப்பிலோ, கோச்சிங் சமயத்திலோ செய்கிறீர்கள். படிப்பது இரண்டாவது. இதைத் தவிர்க்க வேறு வழியே இல்லை. தேர்வுக்குப் படித்துத்தான் ஆக வேண்டும். ஆனால் தேர்வில் எழுதுவதற்கு யார் சொல்லித் தருகிறார்கள்? இங்கேதான் லோஹானாவின் வழிமுறை, வெற்றிக்குப் பாதை போட்டுத் தருகிறது!

ஸ்ரீராம் குரூப் நிறுவனங்களின் தலைவர் அகிலா சீனிவாசன், தங்கள் குழுமத்தின் உதவியோடு, ஆதித்ய லோஹானாவின் அதிக மதிப்பெண் பெறும் முறையை, சென்னையில் அண்ணாநகர், கீழ்ப்பாக்கம், திநகர், அடையாறு, அசோக்நகர், தாம்பரம் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள் வாயிலாக, இந்த வருடம் அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

"சென்ற வருடம் இதைச் சிறிய அளவில் தொடங்கியபோது மாணவ - மாணவிகள் பெற்ற வெற்றிதான், இந்த வருடம் விரிவாகத் தூண்டியது'' என்கிறார் அகிலா சீனிவாசன்.

"இதைப் பள்ளிகளில் எப்படி நடத்துகிறீர்கள்?''

"பத்தாவது வகுப்புக்கு, எண்பது தேர்வுகளும், ப்ளஸ் டூ வகுப்புக்கு அறுபத்து நான்கு தேர்வுகளும் நடத்துகிறோம். ஒவ்வொன்றும் சுமார் இரண்டு மணி நேரம். வருடம் பூரா நடத்துகிறோம். மிகக் குறைந்த பீஸ் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. ஜூன் மாதம் ஆரம்பித்து பிப்ரவரி வரை நடத்துகிறோம். கேள்விகள் தயாரிக்கிறவர்கள் அனுபவம் மிக்க உறுப்பினர்கள்.






• லோஹானா

பத்தே நாளில் பேப்பரைத் திருத்தி, மாணவன் வீட்டுக்கு அனுப்பி விடுகிறோம். இது தவிர, கான்டாக்ட் லெக்சர்ஸ். போன வருடம் நானூறு பேர் சேர்ந்தார்கள். தொண்ணூற்றியெட்டு சதவிகிதம் பேர் அதிக மார்க் வாங்கியதால், எங்களுக்கே நம்பிக்கை அதிகரித்தது. சேலம், கோவை, ஈரோட்டில் இந்த வகுப்புகள் ஏற்கெனவே நடந்து வருகின்றன!''

"பள்ளி வகுப்புகளுக்கு இது போட்டி அல்ல. அவர்கள் திறனைக் கூட்ட 'சப்ளிமென்ட் முயற்சி' என்கிறார் லோஹானா.

— சாருகேசி

மண்ணின்



• தி கிராண்ட் கானியன் பள்ளத்தாக்கு

ஸான்பிரான்சிஸ்கோவிலிருந்து பீனிக்ஸுக்குத் திரும்பிய பிறகும் சிசெரோ பிஸ்ஸாவில் நான் சந்தித்த தமிழர்களின் கவலை தோய்ந்த முகங்கள் நினைவை விட்டு அகல மறுத்தன. இங்கு பல்கலைக் கழகத்தில் புரொபசராகப் பணியாற்றும் என் மகன் ஹரியிடம் அதைப் பற்றிச் சொன்னபோது, இந்தியாவிலிருந்து மிகுந்த எதிர்பார்ப்புடன் H1B Visa வில் வரும் நமது மென்பொருள் இஞ்சினியர்களுக்கு, இப்போது சோதனையான கால கட்டம் என்று ஒப்புக் கொண்டான். ஆனால் அவர்களது நிலைக்குக் காரணம், அவர்களை இங்கு அனுப்பும் இந்திய நிறுவனங்களே என்று விளக்கினான். அமெரிக்கக் கம்பெனிகள் இந்தியக் கம்பெனிகளிடமிருந்து, மென்பொருள் நிபுணர்களை, குறுகிய கால ஒப்பந்தத்தில் வரவழைக்கின்றன. அதற்கான மொத்தக் கட்டணத்தை இந்திய நிறுவனங்கள் பெறுகின்றன. ஆனால் கிடைப்பதில் இங்கு வரும் பணியாளர்களுக்கு இருபத்தி ஐந்து சதவிகிதமே கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தியர்களைச் சூறையாடுவது இந்தியர்களே என்ற விவரம் எனக்குத் தாங்க முடியாத அவமானத்தை ஏற்படுத்தியது.

மண்ணின் மைந்தர்களின் கோபம்

தங்களது அதிர்ஷ்டத்தை நம்பித் தான் நமது இளைஞர்களும் யுவதிகளும் இங்கு வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஓர் அன்னிய நாட்டுக்கு அப்படி வந்து இறங்குவது, எத்தனை பெரிய ரிஸ்க் என்று எனக்குப் பதறுகிறது. அவர்களை ஏமாற்றும் இந்திய நிறுவனங்கள் யாருடைய கண்டனத்துக்கும் ஆளாகாமல், லாபம் பார்ப்பதை நினைத்து வயிற்றெரிச்சலாக இருக்கிறது. இருந்தும் இந்தியாவிலிருந்து இப்படி பட்டம் பெற்ற பொறியியல் வல்லுனர்கள் இங்கு வரவழைக்கப்படுவதில், உள்ளூர் வல்லுனர்களுக்கு ஏகப் புகைச்சல். அமெரிக்க நிறுவனங்கள் ஆசியாவிலிருந்து வேலைக்கு ஆட்களை வரவழைப்பது, உள்ளூரில் சரக்கில்லை என்பதால் அல்ல. அமெரிக்கர்களை வேலைக்கு அமர்த்தினால், மூன்று மடங்கு அதிகச் சம்பளம், இந்தியக் கம்பெனிகளுக்குக் கொடுக்கும் காண்ட்ராக்ட் தொகையைவிட அதிகம் கொடுக்க வேண்டியிருக்கும். அவர்களது



மைந்தர்கள்!

வாஸந்தி

திறமைக்குச் சற்றும் குறையாதவர்கள் ஆசியாவிலிருந்து குறைவான பணத்துக்குக் கிடைக்கும்போது, அதிகப் பணம் செலவழிக்க வேண்டாமே என்ற எண்ணம் இங்கு நிலவுகிறது. அவுட் ஸோர்ஸிங் மூலம் வெளி நாட்டுக்குச் செல்லும் வேலை வாய்ப்புகளைவிட, உள்ளூரில் வெளிநாட்டவருக்கு வேலை வாய்ப்புக்கள் நழுவிவிடும் அவலம் அதிக சோர்வைத் தருவது. என்னதான் அமெரிக்கா ஒரு திறந்த சமூகமாக, வந்தாரையெல்லாம் வாழவைக்கும் பொருளாதாரச் சூழல் கொண்டதாக இருந்தாலும், மண்ணின் மைந்தர்களாக நினைப்பவர்களுக்கு, தற்சமயச் சூழலில் மாற்றம் ஏதும் நிகழாமல் போனால் பொறுமை எப்படி இருக்கும்?

பழைய இந்திய சரித்திரம்


அமெரிக்கச் சமூகத்துக்கு ஒரு பெருமை உண்டு. தன்னை ஒரு திறந்த சமூகமாக, வந்தாரையெல்லாம் வேற்றுமை இல்லாமல் வாழ வைத்த ஒன்றாக, பறை சாற்றி வருகிறது. அது உண்மை என்பதை மறுக்க முடியாது. நிற பேதத்தின் உச்சத்தை நாடு முன்பு கண்டிருந்தது. இப்போது பழங்கதையாக மறந்துவிட வேண்டியதாக, சாதாரண அமெரிக்க மக்கள் நினைக்கிறார்கள். உயர் பதவியில் கறுப்பர்கள் இருப்பதை சுட்டிக் காண்பிக்கிறார்கள். அதிபர் புஷ்ஷுக்கு வலது கையாக, மிக சக்திவாய்ந்த பதவியிலிருப்பவர் கொண்டலீஸா ரைஸ் - ஒரு கறுப்பர் இனப் பெண். தகுதி இருந்தால் உயர் பதவிக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். அதிபர் பதவிக்கு அமெரிக்காவில் பிறந்த அமெரிக்கரே வர முடியும். ஒரு கறுப்பர் வருவாரா என்று சொல்ல முடியாது. பெண்கள் நிச்சயம் வர முடியாது என்கிறார்கள் பெண்ணியவாதிகள். இங்கு பழைமைவாதிகள் அதிகம். அனேக அமெரிக்கர்களுக்குத் தங்களது பழைய சரித்திரம் ஞாபகம் இல்லை. அமெரிக்காவிற்கு ஐரோப்பியர்கள் வருவதற்கு முன், இங்கிருந்த பழங்குடி மக்கள் வெகு காலமாக ஒரு சிறு பொறியாக வெறுப்பைச் சுமந்து வருவதை, நான் சமீபத்தில் இங்கு பீனிக்ஸில் இருக்கும் ஹர்ட் மியூஸியம் என்னும் அருங்காட்சியகத்துக்குச் சென்றபோது உணர்ந்தேன். பொதுவாக, அமெரிக்க இந்தியர்கள் என்று அழைக்கப்படும் அவர்கள்தான், உண்மையில் அமெரிக்காவின் 'மண்ணின் மைந்தர்கள்'.

எனக்குக் கிடைத்த ஆன்மிக அனுபவம்

மண்ணையும் விண்ணையும்,







நீங்க அடுப்பங்கரை கில்லாடியா?

அப்படின்னா, உங்க கிச்சன் கைவண்ணத்தை, அதாங்க, சமையல் குறிப்புகளை எழுதி அனுப்புங்க. நாக்குல எச்சில் ஊறுற மாதிரி இருக்கணும். ஆனா ஒண்ணு, நீங்க அனுப்புற குறிப்பு பால், தயிர் பயன்படுத்தப்படும் உணவாகத்தான் இருக்கணும். உங்க ஃபோட்டோவோட 'சமையல் புலி'ன்னு உறைமீது எழுதி அனுப்புங்க. தேர்ந்தெடுக்கப்படும் உணவுக் குறிப்புக்கு ரூ.200/- பரிசு.

கடைசித் தேதி 13.5.2004

நட்சத்திரத்தையும் வானவில்லையும் இயற்கை தங்களுக்கு அளித்த பரிசுகளாக நினைத்த அமெரிக்க இந்தியர்களின் ஆன்மிகப் பார்வைக்குப் பின்னால் இருப்பது, வெறும் பாமரத்தன எளிமை இல்லை. அவர்கள் தெய்வ தரிசனம் கண்டவர்கள். அந்தப் பரவசம்தான் அந்தப் பணிவுக்குக் காரணம். 'தி கிராண்ட் கானியன்' பள்ளத்தாக்கின் சிகரங்களைப் பார்த்தபோது, இந்த மண்ணின் உண்மை மைந்தர்களுடன் நான் ஐக்கியமாகிப் போனேன். கடவுள் இருக்கிறாரா என்கிற கேள்வி அர்த்தமற்றது. தேவையற்றது. நிச்சயமாக இருக்கிறார். தி கிராண்ட் கானியனைப் பார்க்க வாருங்கள். புரிந்து கொள்வீர்கள்.

ஆதியும் அந்தமும் இல்லாத அரங்களை அளப்பதும், வர்ணிப்பதும் மனித எத்தனத்துக்கு அப்பாற்பட்டது என்று ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். நான் அரங்களைக் கண்டதில்லை. ஆனால் தி கிராண்ட் கானியனைப் பார்த்தேன். அதுதான் அரங்கன் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. வர்ணனைக்கு அப்பாற்பட்ட அழகு அது. எதிர்பாராமல் கிடைத்த விஸ்வரூப தரிசனம் போல் திகைக்க வைக்கும், பிரமிப்பூட்டும், அசர வைக்கும் கம்பீர அழகு. நிறைந்து நாவடைத்துப் போனது. நான் சொல்வதில் ஒரு வார்த்தையும் மிகையானது இல்லை. இப்படிப்பட்ட அனுபவம், முன்பு எனக்கு கஞ்சன் ஜங்காவின் தக தகக்கும் சிகரங்களைப் பார்த்தபோது ஏற்பட்டது. ஜூலியன் பார்ன்ஸ் எழுதிய 'ஸ்டேரிங் அட் தி ஸன்' என்ற நாவலில், தி க்ராண்ட் கானியனைப் பற்றியும், அதன் 'வர்ணிக்க முடியாத' அழகைப் பற்றியும், ஒரு பக்கம் வருகிறது... பார்ன்ஸுக்கும் அது ஒரு ஆன்மிக உணர்வாக இருந்திருக்க வேண்டும் என்று இப்போது புரிகிறது. காலொராடோ நதி பாயும் 277 மைல் நீளமும், 10 மைல் அகலமும், ஒரு மைல் ஆழமும் கொண்ட, செதுக்கப்பட்டது போல் அமைந்த மலைச்சிகரங்கள் கொண்டு தீட்டியிருக்கும் பிரும்மாண்ட ஓவியம். அதையும், அதை ஒட்டி இருக்கும் வனப் பகுதிகளையும், அமெரிக்கர்கள் மிக கவனமாகப் பாதுகாக்கிறார்கள். உலக இயற்கை அற்புதங்களில் ஒன்றாக இது சொல்லப்படுகிறது. "நான்" என்பது ஒரு பூஜ்யம் என்று உணர்த்தும் அற்புதங்கள்.

(தொடரும்)

சுயமரியாதை சுப்பையா



ஊர்	:	சின்ன குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்
கட்சியில் களப்பணி	:	1972 முதல் தி.மு.க. உறுப்பினர். தற்போது கல்லல் ஒன்றிய தி.மு.க. துணைச் செயலாளர்
தொழில்	:	கொத்தனார்
வருமானம்	:	தினசரி நூறு ரூபாய்
குடும்பம்	:	மனைவி, இரண்டு மகள்கள், ஒரு மகன், வாடகை வீடு
காயம்	:	பதினோரு முறை சிறை சென்று பாளையங்கோட்டை, மதுரை, சேலம், திருச்சி சிறைகளில் அடைபட்டது 1974ல் திருமணத்திற்கு முதல் நாள் நள்ளிரவு 'மிசா' வில் கைது செய்யப்பட்டு முப்பத்து நான்கு நாட்கள் சிறை வாசத்திற்குப்பின் வந்து திருமணம் செய்து கொண்டது.
மகிழ்ச்சி	:	வீட்டில் உள்ள குடத்தை அடகு வைத்தாவது ஒவ்வொரு ஆண்டும் கலைஞர் பிறந்த நாளன்று, அவரது வயது எண்ணிக்கையில் ஏழைக் குழந்தை களுக்கு நோட்டு, புத்தகங்கள் சொந்தச் செலவில் வழங்குவது.
விருப்பம்	:	தேர்தல் நேரத்தில் வேலைக்குப் போகாமல், ஊர் ஊராகப் பிரசாரத்திற்குப் போவது. தி.மு.க. போராட்டங்களின்போது வலியச் சென்று கைதாகி சிறை செல்வது...

- குன்றக்குடி சிங்காரவடிவேல்

கல்யாணக் கூச்சலில்



• அ.தி.மு.க. வேட்பாளர் ராமலிங்கத்திற்கு ஆரத்தி வரவேற்பு

கல்யாணக் கூச்சலில் இருமல் சத்தம் கேட்குமா? மங்களூர் சட்டமன்றத் தொகுதியின் நிலையும் அப்படித்தான் இருக்கிறது. நாற்பது பாராளுமன்றத் தொகுதிகளிலும், அனல் பறக்கும் பிரசாரம் நடந்து கொண்டிருக்க, சட்டமன்ற இடைத்தேர்தல் நடக்கும் ஒரே தொகுதியான மங்களூரில் என்ன நடக்கிறது என்பது பற்றி தமிழகம் அதிகம் கண்டுகொள்ளவில்லை.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அணியில் இடம் மறுக்கப்பட்டக் காரணத்தால், தி.மு.க. கூட்டணியில் எம்.எல்.ஏ. வான திருமாவளவன் ராஜினாமா செய்ய, மங்களூரில் வந்து விட்டது இடைத்தேர்தல்.

சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் வேப்பூருக்கும் தொழுதூருக்கும் இடையில் இரண்டு பக்கமும் பரவி இருப்பது தான், மங்களூர் சட்டமன்றத் தொகுதி. சிதம்பரம் பாராளுமன்றத் தொகுதிக்குள் இது வருகிறது. இருநூறுக்கும் மேற்பட்ட கிராமங்கள். ஒன்றே கால் லட்சம் வாக்காளர்கள். பொய்த்துப் போன விவசாயம்; கடுமையான வறட்சி, குடிதண்ணீர்ப் பஞ்சம். தினக் கூலி வேலை கிடைப்பதே சிரமமாக இருக்கிறது.

இங்கு நடப்பது மும்முனைப் போட்டி. தி.மு.க. வேட்பாளர் ஜெ. கணேசன். ஊராட்சித் தலைவராக இருந்தவரை ராஜினாமா செய்யச் சொல்லி, களத்தில் இறக்கியிருக்கிறார் கலைஞர். கழுதூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். அ.தி.மு.க. வேட்பாளர் ராமலிங்கத்தை கட்சிக்காரர்கள் செல்லமாக 'சேவல்' ராமலிங்கம் என்று அழைக்கிறார்கள். காரணம், ஜெ. விசுவாசியான இவர், 1989ல் ஜெ. அணி, சேவல் சின்னத்தில் நின்றபோது போட்டியிட்டவர். வழக்கறிஞர்.

விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாக நிற்பவர் கருப்பசாமி. இவரும் அ.தி.மு.க. வேட்பாளரும் நெருங்கிய உறவினர்கள்.

விருத்தாசலம் - வேப்பூர் சாலையில் உள்ள தொரவள்ளூர் கிராமத்துக் கலியமூர்த்தியைச் சந்தித்தோம். அ.தி.மு.க.வைச் சேர்ந்த இவர், ஊராட்சித் தலைவர். "இருபது வருடங்களுக்குப் பின்பு இங்கு இரட்டை இலை சின்னம் களத்தில் நிற்கிறது. கடந்த பல தேர்தல்களாக கூட்டணிக் கட்சிக்காக வேலை செய்து, சலித்துப் போய் விட்டோம். இந்தத் தேர்தலில் உற்சாகமாக வேலை செய்கிறோம்" என்றார். அ.தி.மு.க. வேட்பாளர் ராமலிங்கம், கிளிமங்கலம் என்ற கிராமத்தில் வீடு, வீடாகச் சென்று இரவில் தூங்கும் மக்களை எழுப்பி வாக்கு கேட்டுக் கொண்டிருந்தார். "நான் போகும் ஒவ்வொரு கிராமத்திலும் எனக்குச் சிறப்பான வரவேற்பு கொடுக்கிறார்கள். இந்தத் தொகுதியில் பல்




• ஆறுமுகம்



• க.கலியமூர்த்தி

இருமல் சத்தம்?

"இந்தத் தொகுதிக்கு ஏராளமான பணிகளைச் செய்துள்ளேன். மக்களுக்கு நான் செய்த பணிகளைப் பற்றி நன்கு தெரிந்திருக்கிறது" என்றார் திமுக. வேட்பாளர் கணேசன்!



* வாக்கு சேகரிக்கும் தி.மு.க. வேட்பாளர் கணேசன்

விடுதலைச் சிறுத்தை வேட்பாளர் கருப்பசாமி, "கடந்த இரண்டரை வருடங்களில் தொகுதி நிதியாகக் கிடைத்த பணத்தை விட, அதிக அளவில் இங்கு வளர்ச்சிப் பணிகளைச் செய்திருக்கிறார் திருமாவளவன். மக்கள், அவரது பிரதிநிதியான எனக்கு, கண்டிப்பாக ஆதரவு கொடுப்பார்கள்" என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்.



* கருப்பசாமி

"எங்கள் மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கிறார் திருமாவளவன். துரோகிகள் சிலர் அவரை எதிர்க்கிறார்கள். ஆனால் அது எடுபடாது" என்றார் அ.தி.மு.க. வேட்பாளரின் சொந்த ஊரான பொய்யன்குடி கிராமத்தின் காலனிவாசியான தனபால்.

'பாராளுமன்றத் தொகுதிக்கு யாருக்கு வேண்டுமானாலும் வோட்டுப் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் சட்டமன்றத் தொகுதிக்கு மட்டும் இரட்டை இலைக்குப் போடுங்கள்' என்று ஆளும் கட்சி, பிரசாரம் செய்வதாக வருத்தப்பட்டுச் சொன்னார்கள், பா.ஜ.க. பிரமுகர்கள்.

பொதுவாக அடிக்கும் ஜெயலலிதா எதிர்ப்பு அலை, மற்றும் தமக்கிருக்கும் நல்ல பெயர் காரணமாக, சட்டமன்றத் தொகுதியிலும் வெற்றி கலசம் என்ற நம்பிக்கையில், தி.மு.க. வேட்பாளர் முந்திக் கொண்டிருக்கிறார்!

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

வேறு வளர்ச்சிப் பணிகளை செய்யத் திட்டமிட்டுள்ளேன்" என்கிறார் ராமலிங்கம். தொகுதியில் தீவிரமாகப் பிரசாரம் செய்து விட்டுப் போயிருக்கிறார் ஜெயலலிதா.

மங்களூர் என்ற பெயரில் தொகுதி விளங்கினாலும், இந்த மங்களூர் ஒரு எளிய கிராமம்தான். "எங்கள் வேட்பாளர் கணேசன் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். இது தவிர, மக்கள் ஆளும் கட்சியின் மீது கடும் அதிருப்தியில் இருக்கிறார்கள். இந்தப் பக்கங்களில் மின்சாரக் கட்டண மணியார்டர், நிறைய விவசாயிகளுக்கு இன்னமும் அரசால் அனுப்பப்படவில்லை" என்கிறார் மங்களூர் ஆறுமுக முதலியார்.

* தனபால்



மங்களூர்

நடக்கும் என்பார்; நடக்கும்!

அக்னிசர்மா பக்கம்

மே 5 முதல் 11 வரை

மேஷம்

உங்க ராசிகளுக்கான கிரகங்களின் கருத்துக் கணிப்பு படு சாதகமா இருக்கறதால துணிவு, தன்னம்பிக்கை, தெய்வபலம் எல்லாம் கூடி, எல்லாக் காரியமும் 'ராஜா கைய வெச்சா'தான். குழந்தைகளால குதூகலம் குடும்பத்தில பொங்கும். உத்தியோகத்தில எல்லாப் பக்கத்திலேயிருந்தும் 'ஜே' போடுவாங்க. யந்திரம், கமிஷன், கெமிகல்ஸ், மருத்துவம், தோல் பொருள் - வியாபாரங்களெல்லாம் 'ஓஹோ'தான். குடும்பத்தில அனுகூலமான சூழ்நிலையும், பொன், பொருள் சேர்க்கையும் உண்டாகும்.

ரிஷபம்

உங்க ராசியில உச்சமான சூரியன் 9ம் தேதியிலிருந்து புதன்கூட சஞ்சாரம் பண்றதால, புதிய அறிமுகங்களும், பண வரவும் சந்தோஷம் தந்தாலும், செலவுகளும் அதிகம்கறதால உஷாரா இருங்க. ஓட்டல், ஜவுளி, கமிஷன், புத்தகம், காண்ட்ராக்ட், தொழில்களுக்கு சாதகமான காலம். கலைத் துறையினருக்கு சன்மானங்கள் குவியும். குடும்பத்தில இருந்து வந்த பொருளாதாரப் பற்றாக்குறை நிவர்த்தியாகும். புதுப் பொருள்கள் சேர்ந்து சந்தோஷப் படுத்தும்.

மிதுனம்

கல்வி, கேள்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சின்னு இருக்கறவங்க 'வெற்றி முழக்க யாத்ரா' நடத்தப் போறாங்க. முக்கியமானவங்க ஆதரவும், எதிர்பாராத பணவரவும் சந்தோஷப்படுத்தும். தனியார் நிறுவனங்களில் இருப்பவங்க சுதந்திரமா செயல்படுவாங்க. ரியல் எஸ்டேட், அரசுப் பணியாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் முன்னேற்றமான திருப்பம் காத்திருக்கு. பெண்களோட தெளிவான மனநிலையால குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும்.

கடகம்

உங்க ராசியில 6ம் தேதியிலிருந்து சுக்கிரனோட சஞ்சாரம், கிரக கூட்டணிக்குத் தலைமை தாங்கறதால தொட்டதெல்லாம் வெற்றிதான். தெளிவான சிந்தனையும், பயண அனுகூலமும் கூடிடும். உங்க பர்ஸ் புஷ்டியா ஆயிடும், ஜமாய்ங்க. உத்தியோகத்தில இருந்த தடைகள் மறைஞ்சுடும். வாகனம், எலக்ட்ரானிக்ஸ், ஓட்டல், உலோக வகை, தொழில் பண்றவங்களுக்கு லாபம் காத்துக்கிட்டிருக்கு. குடும்பத்தில ஒற்றுமை பலமாகும். திருமண தடபுடல்கள் ஆரம்பமாயிடும். உறவினர் வருகை கொஞ்சம் செலவு வைக்கும்.

சிம்மம்

எந்தத் தொகுதிக்குப் போனாலும் ஆதரவு அலை மோதுற தலைவர் மாதிரி, நீங்க திரும்பின பக்கமெல்லாம் அனுகூலம்தான். பயணங்களில், வெற்றி வழியிலேயே வந்து சந்திக்கும். உத்தியோகத்தில எதிரணிக்காரங்க சமாதானம் பேசி உங்க அணியில வந்து சேர்ந்துடுவாங்க. யந்திரம் இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், பொன், வெள்ளி ஆபரணத் தொழில், இதுல இருக்கறவங்களுக்கு பெரிய வியாபாரம் லாபத்தோட வந்து சேரும். குடும்பத்தில மக்களாலும் சுபச் செய்திகளாலும் மகிழ்ச்சி கூடும். பெண்களும், மாணவர்களும் வெற்றி நடை போடலாம்.

கன்னி

உங்க ராசியில 6ம் தேதி பந்தாவா வந்து சுக்கிரன் இறங்கி பண்ணப் போற பிரசாரத்தில, எல்லாமே உங்களுக்கு சாதகமா மாறிடும். உயரதிகாரிகள் ஆதரவு, இடமாற்றம் எல்லாம் காத்திருக்கு. டிராவல்ஸ் பத்திரிகை, ஆபரணத் தொழில், சங்கீதம் நாட்டியம், இதுல இருக்கறவங்களுக்கு வெற்றிப் பாதையில முன்னேற்றம் கிடைக்கும். வீடு மாற்றல், வீடு வாங்குவது என்று நல்ல மாற்றம் ஏற்படும். செலவு கூடினாலும், சமயத்தில் உதவி வந்து சேரும். பெண்களுக்கு அனுகூலமான திருப்பங்கள் ஏற்படும்.

துலாம்

உங்க மனசை அரிச்சக்கிட்டிருந்த கவலையை குருவும், கேதுவும் சேர்ந்து அடிச்சு தூள் பண்ணப் போறாங்க. அப்படியே உங்களுக்குச் சாதகமான விஷயங்களையும் சேர்த்துடப் போறாங்க. உத்தியோகத்திலேயும், எதிர்ப்பு அலை அடங்கி, ஆதரவு அலை வீசும். யந்திரம், தோல் பொருள், எண்ணெய், பொன், வெள்ளி, நவரத்தினம், வியாபாரிகள் காட்டுல மழைதான். குடும்பத்தில உனக்காச்சா, எனக்காச்சான்னு போனவங்க, திரும்பி வரப் போறாங்க.

விருச்சிகம்


தெய்வபலம் கூடி எதிர்ப்புகள் விலகற நேரம். துணிவும், தன்னம்பிக்கையும் கூடிடும். உத்தியோகத்தில் குறுக்கீடுகள் காணாமப் போயிடும். கம்ப்யூட்டர், கமிஷன், ரியல் எஸ்டேட் வகை வியாபாரம் அள்ளிக் குவிக்கும். குடும்பத்தில சுப காரிய முயற்சிகள் கை கூடும். வழக்கு விவகாரங்கள் அனுகூலமா திரும்பும் வாய்ப்பு இருக்கு. வீடு மாற்றவோ, வாங்கவோ வேளை கூடி வரும். பெண்களுக்கு வரவுக்கு மேல் வரவு, உற்சாகம், சந்தோஷம் கூடும்.

தனுசு

தெளிவான மனநிலையும் தெய்வ பலமும் வழி நடத்தும். எடுத்த காரியமெல்லாம் வெற்றிதான். உத்தியோகத்தில் எதிர்ப்புகள் ஆவியாகி, நிம்மதி கிடைக்கும். அதிர்ஷ்டத் திருப்பமும் நேரும். ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், கெமிக்கல், ஜவுளி தொழில்களில் லாபம் உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். ஆடை, ஆபரணம் சேரும். பூர்வீகச் சொத்து தானாக வந்து சேரும். திருமணத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு நேரம் கூடி வந்துவிடும்.

மகரம்

உங்களை வாட்டி வறுத்தெடுத்த பிரச்னை வந்த வழியைப் பார்த்து திரும்பிடும். கோர்ட் வழக்கு, அரசு விவகாரம் சாதகமாகும். நிறைவேறாமல் கிடந்த உங்க உத்தியோகக் கோரிக்கைகள் நிறைவேறிடும். யந்திரம், உலோகம், தோல், ரியல் எஸ்டேட் வியாபாரங்கள் சூடு பிடிக்கும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில்களில் அனுகூலமான திருப்பம் நேரும். குடும்பத்தில் ஒற்றுமை பலமாகும். தட்டுப்பாடாயிருந்த பணவசதி நீங்கி, தட்டுத்தட்டா கொட்டும். பெண்களுக்கு விருந்து, உபசாரம், கேளிக்கைன்னு உற்சாகம் பொங்கும்.



யுவராஜ் சிங்குக்கு (தனுசு) எடுத்த காரியத்தில் வெற்றி உண்டாகும்.

கும்பம்

வருகிற 6ம் தேதிக்கு மேல உங்க ஆதரவு அலை வீசப்போகுது. வி.வி.ஐ.பி.க்கள் ஆதரவு தேடி வரும். பயணங்களில் வழியில் வெற்றித் தேவதை லிப்ட் கேக்கும். உத்தியோகத்தில் திறமையைக் காட்ட வேண்டிய நேரம். கம்ப்யூட்டர், யந்திரம், கமிஷன் வகை வியாபாரங்கள் பாங்க் பேலன்ஸை கணிசமா உயர்த்தும். குடும்பத்தில உற்சாகம் பொங்கும். சுப காரிய வேளை நெருங்க, சந்தோஷம் வரும். பெண்களுக்குத் தொலைஞ்சு போன உற்சாகம், உல்லாசம் திரும்பிடும்.

மீனம்

அதே தெருவில நின்னுக்கிட்டே அட்ரஸ் தேடி அலைவீங்க. ஏற வேண்டிய பஸ், ரூட் மாறிப் போகும், எல்லாம் ராகுவோட விஷமம். தெய்வ பலத்தைக் கூட்டிக்கோங்க. புது ஆட்கள்கிட்ட உஷாரா இருங்க. வாரக் கடைசியில் ஆறுதலான மாறுதல் கிடைக்கும். உத்தியோகத்தில் பட்டும் படாம, அனுகூலமான பக்கமே பார்த்துப் போங்க. ஓட்டல், டிராவல்ஸ், சினிமா, நாடகத்துறை, இவங்களுக்கு கொஞ்சம் முன்னேற்றமான வாய்ப்பு தெரியுது. குடும்பத்தில் செலவு கூடும். எடுத்தேன், கவிழ்த்தேன்னு பேசாம, பொறுமையா இருந்தா நல்லது. பேச்சைக் குறைச்சு பிரச்னைகளைச் சமாளிங்க. பெண்கள் ஆரோக்கியத்தைக் கவனிங்க.

வானம் வசப்படும்



அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியாமல் தேங்கும் தமிழ் சினிமாவுக்கு இரு முட்டுக்கட்டைகள். ஒன்று, ஹீரோக்களுக்காக பின்னப்படும் ஃபார்முலாக் கதைகள். மற்றது திரைக்கதையின் துருத்தல்களாகத் தெரியும் பாடல்கள்.

இந்தப் படத்தின் கதை, பார்முலா மயமாக்கலின் மண்டைக் கனத்தில் ஓங்கி அடிக்கும் விதிவிலக்கு வகை. முதலிரவுக்கு வீட்டில் ஏற்பாடு நடக்கிறது. இரவு வெளியே போய், வீடு திரும்பும் புது மணப் பெண், பாலியல் பலாத்காரத்திற்கு இரையாகிறாள். கனவுகளோடு புதிய வாழ்க்கையை எதிர்பார்த்த கதைநாயகி, ரேப் விக்டிம் என்ற கொடூர நிலைக்கு ஆளான பிறகு, சமூகமும் அவளைச் சார்ந்தவர்களும், எப்படிப் பார்க்கிறார்கள்? சட்டம் என்ன செய்கிறது? என் பதை ஓரளவு வாழ்க்கைக்கு நெருக்கமான சம்பவங்கள், பாத்திரங்கள் கொண்டு, கதை படைத்திருக்கும் சுஜாதாவைப் பாராட்டலாம். ஆனால் கதையின் இறுதியில் சித்திரிக்கப்படும் உணர்ச்சிகர போலீஸ் அதிகாரிகளையும், குற்றவாளிகளையும் யதார்த்தத்தில் தேடுவது சிரமம்.

முதல்பாதி திரைக்கதை விறுவிறுப்பு. பிற்பாதியில் நீதிமன்றக் காட்சிகளை, படமாக்கியிருக்கும் விதம், பயங்கர பிசுபிசுப்பு. இரைச் சலுக்கு இடமில்லாத மகேஷின் டியூன்களில் ஊடாடும் உயிருள்ள தன்மையைச் சிதைத்துவிடாமல், அவற்றைப் படமாக்கிய விதத்தில் தொழில் நுட்பம், கலாபூர்வம் இரண்டையும் இணைத்திருக்கும் தேர்ந்த ஒளிப்பதிவுக் கலைஞராக தம்மை மீண்டும் நிறுவியிருக்கிறார் பி.சி.ஸ்ரீராம். ஆனால் ஒரு இயக்குனராக பின்தங்கிவிடுகிறார். உதாரணத்திற்கு நாயகி கசக்கி வீசப்பட்ட கொடூரத்தை, கைகள் கட்டப்பட்ட நிலையில் காயங்களோடு குப்பைத் தொட்டியில் சுருண்டுக் கிடக்கும், அந்த ஒரு காட்சியே காட்டி விடுகிறது. பிறகேன் பிளாஷ்-பேக்கில் வக்கிர விவரிப்புகள்?

"இதுக்கெல்லாம் இந்த ஊர்தான் வெட்கப்படணும், நான் ஏன் பயந்து ஓடணும்?" என்று கேட்கும் சமூக பயமற்ற துணிச்சலோடு, துவண்டு விடாமல் மீண்டு வரும் கதாநாயகியாக, பூங்கோதை சந்திரஹாசனும், "பூ இருக்கிற இடத்தில் கண்ணீர் இருக்கா பார்" என்று மனைவியின் மனசை மட்டுமே பார்க்கும் இளம் வழக்குரைஞராக, கார்த்திக் குமாரும் தரமான தேர்வுகள்.

குழறலான ஊமைப் பேச்சுடன் குழைவான மனம் கொண்ட அப்பாவாக, நாசருக்கு பாராட்டுகள் குவியும் பாத்திரம். குடிசைப் பகுதியின் தாழ்நிலை பாலியல் தொழிலாளியாகத் தோன்றும் கோவை சரளா, தேர்ந்த நடிப்புக்காரர் என்பதை நிரூபிக்கிறார்.

இருள் கவிழ்ந்து கிடக்கும் தமிழ்த் திரைக்கு, இதுபோன்ற முயற்சிகள் சின்னச் சின்ன விளக்குகள். விளக்குகள் பெருகினால் இருள் விலகும்.

- விஷுவல்தாசன்

• அபவ் ஆவரெஜ்

மே. 9-2004

மினி கல்கி

சிறப்பு ஆலோசகர்கள்...

ஓவியர் மருது

டாக்டர் கே.ஸ்ரீதர்

டாக்டர் என்.அஷோக்

டாக்டர் எல்.மகாதேவன்

சவேரா ஹோட்டலின் நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே.சுமதி

டாக்டர் இரா.அன்புமணி

பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்








டாக்டர் எம்.முத்துக்குமார்

லேசர் அக்குபங்சர் நிபுணர்

அக்குபங்சர் அ முதல்...



மனநிலை சிதைந்து மதம் பிடிக்கிற மெகா சைஸ் யானையை அடக்குகிறது சின்னஞ்சிறு அங்குசம்! இது யானை மீது பிரயோகிக்கப்படும் அக்குபங்சர் என்றால், மனித உடலில் தோன்றும் நோய்களை நீக்க, பழைமையான அக்குபங்சருக்கு ஆற்றல் உண்டா? நம் விரல் பிடித்து அக்குபங்சர் பற்றிய அடிப்படை விழிப்புணர்வு தருகிறார் லேசர் அக்குபங்சர் சிகிச்சை நிபுணரான டாக்டர் எம்.முத்துக்குமார்.

* டாக்டர் எம்.முத்துக்குமார்




'யின்' இல்லையேல் 'யாங்' இல்லை!

சீன தத்துவஞானியான லா வோத் ஸு, தமது குருவை அவரது கடைசி நாட்களில் காணச் சென்றார். தாம் பெற்றுக் கொள்ள உபதேசங்கள் எதுவும் எஞ்சியிருக்கிறதா எனக் கேட்டார். குருவோ தன் வாயை அகலத் திறந்து காட்டி கேட்டார்.

"நாக்கு இன்னும் இருக்கிறதா?"

"ஆம்" என்று பதில் சொன்னார் லா வோத்ஸு.



* அக்கு ஊசிகள் குத்தும் முறை

"பற்கள்?"

"இல்லை!"

"காரணம் சொல்ல முடியுமா?" குரு கேட்டார். லா வோத்ஸு சொன்னார்.


"நாக்கு மென்மையாக இருந்ததால் நிலைபெற முடிந்தது. பற்கள் கடினமாக இருந்ததால் விழுந்துவிட்டன. எனது கருத்து சரிதானா?" சீடரின் கருத்தை ஆமோதித்து குரு தலையை அசைத்தார். "யுக யுகங்களாய் உலகை இயக்கி வரும் 'யின்', 'யாங்' சுழற்சியை நீ உணர்ந்து கொண்டாய். வாழ்வின் அடிப்படைத் தத்துவம் இதுவே. இனி உனக்கு உபதேசிக்க எதுவுமில்லை போய் வா!" என்றார். அது என்ன யின், யாங்

என்கிறீர்களா?


இதுவொன்றும் அல்ஜீப்ராவோ, அரித்மெட்டிக்கோ அல்ல! பயப்படாமல் மேலே பயணப்படுங்கள்!

நமக்கு சிவமும், சக்தியும் பிரிக்க இயலாத வாழ்க்கைத் தத்துவமென்றால், சீன மக்களுக்கு யின், யாங். நிலம், நீர், நெருப்பு, உலோகம், மரம் ஆகிய ஐந்து கூட்டு சக்திகள் இல்லாமல், உலகமோ, உலகின் படைப்புகளோ இல்லை. ''சுற்றும் பூமி சுற்றும் வரை, சூரியன், நிலவு உள்ளவரை நில்லாதே அலைகள்'' என்ற மெகா சீரியல் பாடல் மாதிரி இந்த உலகமும், அதிலுள்ள படைப்புகளும் இரு விதமான சுழற்சிகளுக்கு உட்பட்டே தீர வேண்டும். ஒன்று ஆக்கும் சுழற்சி. மற்றது அழிக்கும் சுழற்சி.

மரம் உயிரிழந்தால் விறகு. விறகை தீ தின்றால் சாம்பல். சாம்பல் திரிந்தால் மண். மண்ணே நிலம். நிலம் கனிமங்களை உருவாக்க, கனிமங்கள் உருகி நீர் உருவாகிறது. நீர் மரங்களை வளர்க்கிறது. இது ஆக்கும் சுழற்சி. தீ உலோகத்தை உருக்கும். உலோகம் மரத்தை வெட்டும். மரம் நிலத்தைப் பிளக்கும். நிலமோ நீரை உறிஞ்சும். நீர் தீயை அணைக்கும். இது அழிக்கும் சுழற்சி. நவீன அறிவியல் எச்சரிக்கை மணி அடிக்கும் 'குளோபல் வார்மிங்'கை, இந்த இடத்தில் கொஞ்சம் பொருத்திப் பாருங்கள். இந்த யின் - யாங் சுழற்சிகள் சமச்சீர் நிலையில் இருந்துவிட்டால், பூமிப் பந்து, பூப் பந்து மாதிரி ரொம்பவும் சுகமாய்ச் சுழலும். இதில் ஏற்ற இறக்கங்கள் வரும்போதுதான், குஜராத்தில் பூமி அதிர்ச்சி, ஒரிஸ்ஸாவில் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றன. இயற்கைக்குச் சரி! மனித உடலில் இயங்கி வரும், யின்-யாங் சுழற்சி, சென்னையின் தண்ணீர் லாரி போல தறிகெட்டு ஓடினால் என்னவாகும்?



* யின், யாங் வட்டம்



உயிர்ச் சத்தும் ஓடு பாதைகளும்

திடல்களப் போட்டிகளில் ஓட்டப் பந்தய வீரர்கள் தலை தெறிக்க ஓடும் ஓடுபாதைகளைப் பார்த்திருக்கிறோம். நம் உடலில் உள்ள ஓடுபாதைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அதற்கு முன்பு கோவாவுக்கும் ரஷ்யாவுக்கும் ஒரு சின்ன டிரிப் அடிக்கலாம் வாங்க. கோவாவில் உள்ள புகழ்பெற்ற புனித பிரான்சிஸ் தேவாலயத்திற்குள் நுழைகிறோம். இங்கே செயின்ட் பிரான்சிஸ் பாதிரியாரின் உடல் இன்னும் வைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து ரஷ்யாவின் லெனின்கிராட் நகருக்கு வாருங்கள். இங்கே, ரஷ்யப் புரட்சியின் நாயகன் லெனினது உடல் வைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு உடல்களிலுமே நகங்களும், தலைமுடியும் இறப்பிற்குப் பின்பும் வளர்ந்து வந்ததை செய்திகள் சொல்கின்றன. இவர்களுக்குத்தான் என்றில்லை. யார் இறந்தாலும் அடுத்த முப்பத்தாறு மணி நேரம் வரை நகங்களும், தலைமுடியும் வளரும், என்ற உண்மையை மருத்துவ உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இறந்த உடலில் இது எப்படி சாத்தியம்? உடலில் எஞ்சியிருக்கும் 'உயிர்ச் சத்தே' இதற்குக் காரணம் என்கிறார்கள் சீனர்கள். நம் உடல் இயங்க, இந்த உயிர் இயங்க உயிர்ச் சத்தே ஆதாரம். எங்கிருந்து கிடைக்கிறது உயிர்ச்சத்து? ஆவின் பாலிலோ, அர்ஜுன் சாப்பிடும் 4.5% ஆரோக்கியா பாலிலோ இந்த உயிர்ச்சத்து கிடைக்குமா?



● போகர்

நாம் சுவாசிக்கும்போது, உள்ளே இழுக்கும் காற்றில் ஆக்ஸிஜன் மட்டுமே செல்வதில்லை, பிரபஞ்ச வெளியில் நிறைந்து காணப்படும், யூனிவர்சல் லைஃப் ஃபோர்ஸ் எனப்படும் பிரபஞ்ச உயிர்ச் சக்தியும் உள்ளே செல்கிறது. இந்திய ஆன்மிகத்தில் பிராணன் என்று சொல்லப்படும், அதே சமாசாரம்தான் இந்த பிரபஞ்ச உயிர்ச் சக்தி. சுவாசம் வழியே எடுத்துச் செல்லப்படும் இந்த உயிர்ச் சக்தியானது, நுரையீரலில் உள்ள காற்று அறைகளில் கலக்கும்போது, அங்குள்ள இரத்தத்துடன் சேர்ந்து மனிதன் உயிர்வாழத் தேவையான உயிர்ச் சத்தாக (வைட்டல் ஃபோர்ஸ்) உருவாகிறது. பின்னர் கோடானு கோடி செல்களுக்கும், இந்த உயிர்ச்



சத்தானது, உடல் முழுவதும் உள்ள ஓடு பாதைகள் வழியே எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த ஓடு பாதைகளை மெரிடியன் என சீன அக்கு பங்சர் மருத்துவத்தில் அழைக்கிறார்கள்.




* லேசர் அக்குபங்சர் சிகிச்சை பெறும் இளைஞர்

மெரிடியனில் பதினான்கு முக்கிய ஓடுபாதைகளும், நூற்றுக் கணக்கான துணை ஓடுபாதைகளும் இருக்கின்றன. எந்தவொரு ஓட்டத்திற்கும் ஓர் உந்துதல் தேவை. ஓடுபாதைகளில் உந்து சக்தி மையங்களாக, அக்கு புள்ளிகள் செயலாற்றுகின்றன. இந்தப் புள்ளிகள் உயிர்ச்சத்தை வாங்கி, அடுத்த அக்குபுள்ளிக்குத் தள்ளுகின்றன. அக்கு புள்ளிகள் தங்கள் பணியைச் சரிவரச் செய்யாமல் வேலை நிறுத்தம் செய்யும்போது, உயிர்ச்சத்தின் ஓட்டம் தடைப்படும். விளைவு! உடலின் ஒவ்வொரு இடத்திலும் ஏற்படும் தடைக்கும் ஒவ்வொரு வகையான நோய் தோன்றும். ஊசியின் துணை கொண்டு, அக்கு புள்ளியில் ஏற்பட்ட அடைப்பை நீக்கி, உயிர்ச் சத்தின் ஓட்டத்தைப் பழைய நிலைக்குச் சீராக்குவதன் மூலம், உடலில் தோன்றிய நோயை முழுமையாக குணப்படுத்துவதே, அக்குபங்சர் வைத்திய முறையின் அடிப்படை.

மஞ்சள் பேரரசர் கண்ட மருத்துவம் (?)

அக்கஸ் (ACUS), பங்சுரா (Punctura) ஆகிய இரு லத்தீன் வார்த்தைகளில் இருந்து வந்ததே அக்குபங்சர். அக்கஸ் என்றால் ஊசி. பங்சுரா என்றால்

மினி கல்கி



துளையிடுதல் என்று பொருள்.

கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பே சீன தேசத்தில் மிகப் பிரபலமாக இருந்தது அக்குபங்சர். காரணம், கி.மு. 2300ல் அக்குபங்சர் மருத்துவ முறையின் முழுமையான குறிப்புகள் அடங்கிய குவாங் டி நைய் ஜிங் புத்தகம், பப்பாளி மரத்தின் இலைகளில் வரையப்பட்டு வெளியிடப்பட்டது. கிருஷ்ணருக்கும், அர்ஜுனருக்கும் நடந்த உரையாடலாக கீதை தொகுக்கப்பட்டதுபோல, பண்டைய சீனத்தின் அரசர்களில் முக்கியமானவராகக் கருதப்படும் மஞ்சள் பேரரசருக்கும் (yellow emperor) அவரது தலைமை மருத்துவர் சீ போ (chi po) என்பவருக்கும் இடையில் நடந்த உரையாடல்களின் தொகுப்பே இந்தப் புத்தகம்.


பண்டைய சீன அரசர்கள், இந்தப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு, வருடத்தின் முன்னூற்று அறுபத்தைந்து நாட்களுக்கும் உண்ண வேண்டிய உணவு, உடல் உழைப்பு, கற்றுக் கொள்ளும் நேரம், கேளிக்கை நேரம், வழிபாட்டுக் காலம், நித்திரை நேரம், துயிலெழல் என்று முழு வாழ்க்கை முறையையும் அட்டவணை போட்டு வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். இதே வாழ்க்கை முறையை, குடி மக்கள் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். யாருக்கேனும் நோய் வந்தால், அரச ஆணையை மீறியதாகக் கருதி, அவர்கள் தண்டிக்கப்பட்டதோடு, ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் அவர்களுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டிருக்கிறது! நமது கிராமத்து வழக்கம்போல ஊரை விட்டு ஒதுக்கி வைத்தலும் வழக்கில் இருந்திருக்கிறது. இத்தனை விழிப்புணர்வோடு சீனர்கள் தங்கள் வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்ள, ஓர் ஆதி தமிழர் காரணமென்றால் நம்ப முடிகிறதா?



போகரின் சீனப் பயணம்!

அக்குபங்சர் மருத்துவத்தை போ யங் (Bho yang) என்ற முனிவர் உருவாக்கியதாக, பண்டைய சீனச் சுவடிகள் குறிப்பிடுகின்றன. போ யங் வெளிக்கிரகத்து மனிதரல்ல! தமிழ்நாட்டில் வாழ்ந்த பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான போக முனிவர்தான். இவர் சீன தேசத்துக்குச் சென்று அங்கு போ யங் என்ற பெயருடன்

வாழ்ந்து, அக்கு பங்சர் மருத்துவமுறையை உருவாக்கினார். தமது சீனப் பயணம் குறித்து போகர் ஏழாயிரம் என்னும் நூலில் அவரே எழுதியிருக்கிறார். இதை எப்படி உறுதி செய்து கொள்வது?



* வெரிகோஸ் வெயின் எனும் ரத்த நாளம் சுருளும் நோய்க்கு அக்குபங்சர் சிகிச்சை


அக்குபங்சர் ஓடுபாதைகளின் (மெரிடியன்) அடிப்படை அமைப்பும், தமிழகத்தின் தென் குமரி மாவட்டத்தில் சிறப்புற்று விளங்கிய வர்மக் கலையின் தாக்குதல் புள்ளிகளும் ஒன்றே! தற்காப்புக் கலையாக மட்டுமே இருந்த வர்மக்கலையை சீனத்துக்கு எடுத்துச் சென்ற போகர், அதை வைத்திய முறையாக மாற்றினார்.

ஓடு பாதைகளை வர்மக் கலையில் கண்டங்கள், எம கண்டங்கள் என அழைக்கிறார்கள். வர்மம்தான் அக்குபங்சராய் பரிமாணம் பெற்றது. நம்மை அறியாமலேயே அக்குபங்சரை தினசரி நாம் பயன்படுத்துகிறோம் என்பது நம்மில் பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

தினசரி வாழ்வில் அக்குபங்சர் உற்சாகம்!

பெரும்பாலான மருத்துவ முறைகளில் சிகிச்சை எடுத்துக் கொள்ளும்போதோ, சிகிச்சை முடிந்த பிறகோ, தூக்கமும் களைப்பும் ஏற்படும். ஓய்வுக்காக உடல் ஏங்கும். ஆனால் அக்குபங்சரில் சிகிச்சை முடிந்து, உடலிலிருந்து ஊசிகள் எடுக்கப்பட்ட அடுத்த வினாடி, சுறுசுறுப்பும் உற்சாகமும் தொற்றிக் கொள்ளும். இது அக்குபங்சருக்கே உரித்தான பிரத்யேகச் சிறப்பு.

நமக்கே தெரியாமல், நமது தினசரி வாழ்வில், அக்குபங்சர் புள்ளிகளை அழுத்தி உற்சாகம் பெறுகிறோம். நமது காதுகள் ஒலி அலைகளை வாங்கவும், முகத்



தோற்றத்தின் அழகைக் காட்டவும் பயன்படுகின்றன என்பதை அறிவோம். நாம் அறியாத ஒன்றும் உண்டு. உடலின் பிரதான ஓடுபாதைகளோடு நேரடித் தொடர்பு கொண்ட நூற்று முப்பத்தாறு அக்குபுள்ளிகள், காதின் மடலிலேயே அமைந்துள்ளன. இதனால்தான் தாயின் கருவில் முழுவதும் வளர்ச்சியடைந்த ஒரு குழந்தையின் உருவம் போல, நம் காதின் உருவம் உள்ளது என்று சீன அக்குபங்சர், வாஜிக் இடிக்காத காரணம் சொல்கிறது.

தூங்கி வழியும், அல்லது பதில் சொல்லாத சோம்பேறி மாணவனை அவனது காதைப்பிடித்துத் திருகும் ஆசிரியர்களைப் பார்த்திருக்கிறோம். நமது காதையே கூட ஆசிரியர் திருகியிருக்கலாம். காதைத் திருகிய அடுத்த கணம் நமக்கு ஏற்பட்ட வலியைவிட, உடலில் ஏற்பட்ட சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும், ஃப்ளாஷ்பேக்கில் கொஞ்சம் நினைவு கூர்ந்து பாருங்கள். காதின் நுனிகளை அழுத்தியபடி தோப்புக்கரணம் போடும் பக்தர்கள் உட்கார்ந்து எழும்போது தங்களை அறியாமலேயே காது மடல்களை அழுத்துவதனால் காதுப் புள்ளிகளை தூண்டி அன்றைய தினத்தின் சுறுசுறுப்பைப் பெறுகின்றனர். கவனித்துப் பாருங்கள். மேடையில் பேசும் அறிஞர்களைப் பாராட்டி, தொடர்ந்து கரவொலி எழுப்பும்போதும் சரி, பஜனைக் கூடங்களில், பாடலுக்கும், தாளத்திற்கும் ஏற்ப, சீராக கரவொலி எழும்பும் போதும் சரி, ஒரே உற்சாக ஊற்றுதான்! அவ்வேளையில் உள்ளங்கையில் உள்ள புள்ளிகள் தூண்டப்படுகின்றன.




தலையின் மத்தியில் நூறு புள்ளிகள் சந்திக்கும் ஜி.வி. - 20 என்ற மையப்புள்ளி உள்ளது. இதில் மிதமான வேகத்தில் ஆசிரியர் கொட்டும்போது சுறுசுறுப்பு ஏற்படும். இந்தப் புள்ளியைத்தான் குண்டலினி யோகம், 'சகஸ்ர தளம்' எனும் நூறு இதழ்கள் கொண்ட தாமரை போல இருப்பதாகச் சொல்கிறது.

இவற்றைவிட, அலகு குத்திக் கொண்டு காவடி எடுப்பவர்களை கவனித்துப் பாருங்கள். காவடியோடு சூப்பராய் ஆட்டம் போடுவார்கள். தமிழர்கள், நோய் வாய்ப்பட்டு கஷ்டப்படுபவருக்கு முதுகில் அலகு குத்தி, கடவுளின் சன்னிதானத்திற்கு அழைத்துப் போவதை, சஷ்டி திதியன்று பார்க்கலாம். இப்படி முதுகில் அலகு குத்தப்படும் புள்ளிகளை பேக் சூ பாயிண்ட்ஸ் - 40 என்கிறது அக்குபங்சர். முதுகில் அலகு குத்துவது

இருக்கட்டும், அக்குபங்சர் சிகிச்சைக்கு ஆயிரக் கணக்கில் பணம் தேவைப்படுமா? இது ஏழை களின் முதுகில் குத்தும் காஸ்ட்லி மருத்துவமா?

எக்ஸ்ரே வேண்டாம்! ஈ.சி.ஜி. வேண்டாம்!


தலைவலி என்று போய், இன்றைய நவீன மருத்துவத்தில் என்ன வகை தலை வலி என்று கண்டுபிடிக்கவே எக்ஸ்ரே, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் என காஸ்ட்லி பரிசோதனைகளை கட்டாயம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் அக்குபங்சரில் ஐம்புலன்கள், மற்றும் நாடித்துடிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை வைத்தே, நோய்களைக் கண்டறியலாம். கண் ணின் கருவிழியில் உடலின் அத்தனை பாகங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.



* சீனாவில் மஞ்சள் பேரரசர் அரண்மனை



* மஞ்சள் பேரரசர் தமது தலைமை மருத்துவர் சீ போ மற்றும் அவரது உதவியாளருடன் உரையாடும் காட்சி (சீன ஓவியம்)



இரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய், புற்று நோய், நிணநீர்ப் பிரச்னைகள், ஒவ்வாமை போன்றவற்றை, கண்ணின் கருவிழியைப் பார்த்த மாத்திரத்தில் கண்டுபிடித்துவிடலாம். காதில் கம்மல் அணியும் இடத்திற்கு சற்று மேலே நாக்குபோல் உள்ள பகுதி தடித்துக் காணப்பட்டால், ஆஸ்துமா என்று அடித்துச் சொல்லலாம். மூக்கு மடலில் ஏற்படும் நிற மாற்றம், தடிமன், புள்ளிகளை வைத்தும் சுவாச நோய்களைக் கண்டறியலாம். நாக்கின் நுனியில் இதயத்தின் முக்கிய ஓடுபாதை இருப்பதால், நாக்கின் நிறம், சுவைமொட்டுக்களின் அமைப்பில் மாற்றம், வீக்கம் இவற்றைக் கொண்டு இதய நோயின் தன்மையை அறியலாம். நாக்கின் மற்ற பகுதிகளை வைத்து எல்லா வியாதிகளையும் கண்டறியலாம். மொத்தத்தில் நோயாளி மருத்துவரிடம் வந்த பத்தாவது நிமிடத்திற்குள், அவரது நோய் என்ன? அதன் தற்போதைய நிலை, எத்தனை நாள் சிகிச்சை தேவை என்பதை, ஒரு சிறந்த அக்குபங்சர் மருத்துவர், தெள்ளத் தெளிவாகக் கூறிவிடுவார். இதனால் சிகிச்சையைத் தொடங்குவதில் கால விரயம், பண விரயம் இரண்டுமே தவிர்க்கப்படுகிறது.


ஊசிகள் புரியும் மின்சார நடனம்!

“ஊசி போடாதீங்க டாக்டர்! தயவுசெய்து மாத்திரையாக எழுதிக் கொடுங்க!” என்று வலிக்கு பயந்து பின் வாங்குவதுதான் நமது மனநிலை. அப்படியிருக்க, அக்கு புள்ளிகளில் ஊசிகளைச் செருகும்போது வலி ஏற்படுமா என்ற கேள்வி முக்கியமானது. மருந்துகளை உடலில் செலுத்த சிரஞ்சிகளில் பயன்படுத்தப்படும் ஊசிகளைக் காட்டிலும், மெல்லிய ஊசிகளே, அக்குபங்சர் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகின்றன. குழந்தைகளுக்கோ மேலும் மெல்லிய ஊசிகள். சிகிச்சை பெறுபவர், தமது உடலில் ஊசிகள் எப்போது செருகப்பட்டன என்பதை அறியவே இயலாது. அதேபோல், சிகிச்சை நேரம் முடிந்த பிறகு, ஊசிகளை மருத்துவர் எப்போது உருவி எடுத்தார் என்பதையும் உணர இயலாது. காரணம், அக்கபங்சர் ஊசிகள் முடியைவிட அளவு குறைந்த பருமன் உள்ளவை.

அக்கு ஊசிகளின்மேல் எந்தவித மருந்தும் தடவப்படுவது இல்லை. அக்கு புள்ளியில் செருகப்படும் ஊசியின் சிறிய பகுதி மட்டுமே தோலின் உள்ளே இருக்கும், தோலுக்கு வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் பெரிய பகுதி, கண்ணுக்குத் தெரியாத காற்றோட்டத்தில் ஆடிக் கொண்டிருக்கும். ஊசியின் வெளிப்பகுதி ஆடுவதால், உள்ளே அக்கு புள்ளியைத் தொட்டுக் கொண்டிருக்கும் ஊசியின் பகுதியும் ஆடும். உள்ளே செருகியிருக்கும் ஊசி இரு உலோகங்களால் செய்யப்பட்டிருப்பதால், மின் அலைகள் உருவாகும். இப்போது ஊசி ஒரு மின் கடத்தியாகச் செயல்பட்டு இந்த மின் அலைகளை

அக்கு புள்ளியை நோக்கி அனுப்பி, அதைத் தூண்டிய வண்ணமிருக்கும்.


சீன தேசத்தில் தங்கம், ஸ்டீல் கலந்த ஊசிகளையும், வெள்ளி ஸ்டீல் கலந்த ஊசிகளையும் பயன்படுத்துகிறார்கள். ஏனைய நாடுகளில் காப்பர், ஸ்டீல் கலந்த ஊசிகளையே பயன் படுத்துகிறார்கள்.



* காதும், கருவும் - அக்குபங்சர் ஒப்பீடு

அக்குபங்சரில் எச்.ஐ.வி. ஆபத்தா?


ஊசி என்றதுமே பயம் தருவது எச்.ஐ.வி. தொற்று. ஒருவருக்குப் பயன் படுத்திய ஊசியை, உடனடியாக அடுத்தவருக்குச் செலுத்தினால் மட்டுமே எச்.ஐ.வி. பரவும். ஆனால் ஒருவருக்குப் பயன்படுத்தப் படும் ஊசிகளை அடுத்தவருக்கு பயன்படுத்துவதில்லை. சிகிச்சை முடிந்த பிறகு, சிகிச்சை பெறுபவர்கள் அவரவர் ஊசிகளை அவரவர் வீட்டிற்கு எடுத்துச் சென்று விடுவார். சிகிச்சைக்கு வரும்பொழுது இட்லி அவிப்பது போல, ஐந்து நிமிடம் வீட்டிலுள்ள குக்கர், அல்லது இட்லிப் பானையில் ஸ்டீம் ஸ்டெர்லைஸ் செய்து எடுத்து வருவார். அதேபோல டெட்டனஸ் வரக்கூடும் என்ற பயமும் சிலருக்கு இருக்கக் கூடும். டெட்டனஸ் கிருமிகள் சுத்திகரிக்கப்படாத இடத்தில்தான் வளரும். துருப்பிடித்த ஆணிகள், சேப்டி பின்கள் போன்ற பொருட்கள் காயப்படுத்தினால், டெட்டனஸ் தாக்கலாம். ஆனால் அக்கு ஊசிகள் செருகப் படுவதற்கு முன், உடல் பகுதி ஆல்கஹால் கொண்டு சுத்தம் செய்யப்படுவதால், டெட்டனஸ் கிருமிக்கு வாய்ப்பே இல்லை. முக்கியமாக, சிகிச்சை முடியும் வரை (30 முதல் 60 நாட்கள்) தினசரி ஒரே இடத்தில் அக்கு ஊசிகள்



செருகப்படுவதால், தடிப்போ புண்ணோகூட ஏற்படுவதில்லை.

அலோபதியுடன் அக்குபங்சர் கூட்டணி அமைக்க முடியுமா?


யாரும் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என்பதுதான், அரசியல் கட்சிகளின் தேர்தல் நேரத்து நிலைப்பாடு. ஆனால் அக்குபங்சர் மருத்துவம், அலோபதி, ஆயுர்வேதம் போன்ற மற்ற சிகிச்சை முறைகளோடு கூட்டணி வைத்துக் கொள்ள முடியுமா? அலோபதி, ஹோமியோபதி, சித்தா, ஆயுர்வேதம் போன்ற சிகிச்சைமுறைகளில் உட்கொள்ளப்படும் எல்லா மருந்துகளும், கல்லீரலால் பிரிக்கப்பட்டு சிறுநீரகத்தின் மூலம் உடம்பை விட்டு வெளியேற்றப் படுகின்றன. எனவே, ஒரு நேரத்தில் ஏதேனும் ஒரு சிகிச்சையைத்தான் எடுத்துக் கொள்ள முடியும். அக்குபங்சர் மருத்துவத்திலோ, தோலின் அடியில் உள்ள ஓடுபாதைகளில் சிகிச்சை செய்யப்படுவதால், இதனுடன் வேறு எந்த மருத்துவ சிகிச்சையையும் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்வதால் 'இன்டராக்ஷன்' எனும் மருத்துவக் குறுக்கீடுகள் ஏற்பட, ஒரு சதவிகிதம்கூட வாய்ப்பில்லை.



• ஓடுபாதைகளில் யின், யாங் சுழற்சி

ஆர்ஹன் கிளாக் தியரி

அக்குபங்சர் வயது முதிர்ந்தவர்களுக்கு விரைந்து குணம் தருமா என்ற சந்தேகம் எழலாம். நமது உடலில் உயிர்ச்சத்தின் உருவாக்கம், அறுபது வயது வரை சமநிலையில் இருக்கும். அறுபதுக்குப் பிறகு உயிர்ச் சத்தின் உற்பத்தி மெல்ல மெல்லக் குறையத் தொடங்கும். எனவே, அறுபது வயதைக் கடந்தவர்களுக்குப் பலன் கிடைப்பது சற்றுத் தாமதமாகுமே தவிர, பூரண நிவாரணம் கிடைக்கும். இளம் வயதினரைப் போல், மூத்த குடிமக்களுக்கும் விரைந்து குணம் பெற வேண்டும் என்பதற்காகவே, அக்குபங்சரில் ஆர்ஹன் கிளாக் தியரி அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆர்ஹன் கிளாக் தியரி, அக்குபங்சரில் ஒரு கொடை என்றே சொல்லலாம்.




• ஆர்ஹன் கிளாக்

நுரையீரலில் உற்பத்தியாகும் உயிர்ச் சத்தானது, பன்னிரண்டு முக்கிய ஓடு பாதைகள் வழியே, ஓர் ஓடுபாதையில் தலா இரண்டு மணி நேரம் வீதம் நாள் முழுவதும் ஓடுகிறது. நோயுற்றவர், நோயற்றவர் யாருக்கும் அதிகாலை மூன்று மணி முதல் ஐந்து மணி வரை, ஆழமான தூக்கம் வருவது இயற்கை. இதற்குக் காரணம் நுரையீரல் ஓடு பாதையில், அதிகாலை மூன்று மணி முதல் ஐந்து மணி வரை உயிர்ச் சத்தின் ஓட்டம் அதிகமாக இருக்கும். இதனால் நுரையீரல் நன்கு இயங்கி, மூளைக்குக் கிடைக்கும் ஆக்ஸிஜனின் அளவு அதிகரிக்கிறது. விளைவு : ஆழ்ந்த தூக்கம். ஆனால் ஆஸ்துமா பிரச்னையால் அவதியுறுபவர்கள், இந்த நேரத்தில் தூக்கத்தை இழந்து மேலும் சிரமப்படுவார்கள். ஆஸ்துமாக்காரர்களின் நுரையீரல் ஏற்கெனவே பழுதுபட்டுள்ள நிலையில், அதிக வேலை பளுவைத் தாங்க முடியாமல் தான், அதிகாலையில் இத்தனை அவஸ்தை. எனவே ஆர்ஹன் கிளாக் தியரியைப் பின்பற்றி, அந்தந்த ஓடுபாதைகள் தொடர்பான நோய்களை உயிர்ச்சத்தின் பிரதான ஓட்ட நேரத்தில் தூண்டி, சிகிச்சை அளிப்பதால் எந்த வயதினருக்கும் விரைந்து குணம் கிடைக்கும் வாய்ப்புகள் அதிகம். சாதாரண தலைவலி, காய்ச்சல் தொடங்கி, எல்லாவிதமான நோய்களுக்கும் அக்குபங்சரில் தீர்வு உண்டு. குறிப்பாக எந்த மருத்துவத்திலும் குணமாகாத சக்கரை நோய், போலியோ, ஆஸ்துமா, தோல் வியாதிகள், மூட்டு வலிகள், மூளை வளர்ச்சிக் குறைவு, உடல் பருமன், முடி கொட்டுதலுக்குத் தீர்வு என அத்தனைக்கும் அக்குபங்சரில் நிரந்தரத் தீர்வு உண்டு.



சர்வதேச அளவில் அக்குபங்சர்

சீன தேசத்தின் தலை




நகரான பெய்ஜிங் தொடங்கி, கிராமப்புறத்தில் உள்ள மருத்துவமனைகளில்கூட, அக்குபங்சர் சிகிச்சைக்கு முதலிடம் தரப்படுகிறது. இங்கே எல்லா அரசு பொது மருத்துவமனைகளிலும் அக்குபங்சர் அவசர சிகிச்சைப் பிரிவுகளைப் பார்க்கலாம். சீனா தவிர, சிங்கப்பூர், மலேசியா தாய்லாந்து, ஜப்பான், ஹாங்காங் போன்ற கீழ்த்திசை நாடுகளில் அக்குபங்சரே நம்பர் ஒன் சிகிச்சை முறையாக உள்ளது. இலங்கையில் அக்குபங்சர் மருத்துவமனை அமைக்க ஐம்பது சதவிகித செலவினத்தை அரசே மானியமாக வழங்குகிறது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகள் அக்கு பங்சரை அங்கீகரித்து, மருத்துவக் காப்பீடு பெற தகுதியுள்ள சிகிச்சை முறையாக அறிவித்திருக்கின்றன. இதனால் வளர்ந்த நாடுகளில் அங்குபங்சர் சிகிச்சைக்கு இப்போது, ஹெல்த் இன்ஷூரன்ஸ் கிளெய்ம் கிடைத்து வருகிறது.

ஏற்கெனவே அக்குபங்சரில் மின் அலைகளைச் செயற்கையாச் செலுத்தும் எலெக்ட்ரிகல் அக்குபங்சர் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது லேசர் அக்குபங்சருக்கு அதிக வரவேற்பு. கேலியம் (Gallium), அலுமினம் (Aluminum), ஆர்சினைடு (Arsenide) ஆகிய முக்கூட்டுச் சக்திகள் மூலமாக வெளிவரும் லேசர் கதிர்களை அக்கு புள்ளிகளில் பாய்ச்சும்போது, அடைப்பு நீங்குவதை மேற்கத்திய விஞ்ஞானிகள் நிரூபித்து, பயன்படுத்திவருகிறார்கள். லேசர் அக்கு பங்சரில், ஊசிகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. லேசர் கதிரை இருபத்து நான்கு வினாடிகள் அக்குபுள்ளியில் பாய்ச்சினாலே போதும்.



கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்தியா, சீனா இடையே போதிய நல்லுறவு இல்லை. இதனால் கலை, இலக்கியம், சினிமா, அறிவியல், மருத்துவம் உள்ளிட்ட பரிவர்த்தனைகளும் நின்றுவிட்டன. இப்போது மேலை நாடுகள் வழியே அக்குபங்சர் காலதாமதமாக இங்கே காலடி வைத்திருக்கிறது. சீனாவுக்குச் சென்று அங்குள்ள மருத்துவ பல்கலைக் கழகங்களில் முறையாக அக்குபங்சர்



மருத்துவம் பயின்று, பயிற்சி பெற்று வந்த மருத்துவர்களை இந்தியாவில் விரல்விட்டு எண்ணி விடலாம்.

தரமான அக்குபங்சர் மருத்துவரை அடையாளம் காணும் வழி!

எந்த அக்குபங்சர் மருத்துவரையும் நேரே சந்தித்து, உடனடியாக சிகிச்சை எடுத்துக் கொள்வது அனுகூலம் தராமல் போகலாம். மாறாக, நீங்கள் தேர்வு செய்ய நினைக்கும் மருத்துவரின் மருத்துவமனைக்குச் சென்று, அங்கே சிகிச்சைக்காகக் காத்திருக்கும், அல்லது சிகிச்சை எடுத்துவரும் நோயாளிகளிடம், அந்த மருத்துவரைப் பற்றிக் கேளுங்கள். அவர்கள் நற்சான்றிதழ் கொடுத்தால் மட்டும், அவரிடம் சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள்.

தொகுப்பு : **ஜெயந்தன்**

நவீன முறையின் அபாயம்!

அமரர் கல்கி

நமது நாட்டில் வாழ்வின் பல துறைகளிலும் தற்போது 'பழையன கழிந்து புதியன புகுந்து' வருவதுபோல், நோய் விசாரணையிலும் பழைய சுர்நாடக முறை மெல்ல மெல்ல மறைந்து நவீனமுறை தலையெடுத்து வருகிறது. இப்போதெல்லாம் படித்தவர்களும் நாகரிகமுற்றவர்களும் சாதாரணமாய் ஒருவரையொருவர் பார்க்கும்போது "என்ன ஸார்! உங்கள் உடம்பு இப்போது ரொம்ப நன்றாயிருக்கிறதே!" என்று சுகம் விசாரிப்பது வழக்கம். உடம்பு இளைத்துப் போயிருப்பதாகக் குறிப்பிடுவதே அநாகரிகம். நோயாளி யாரையாவது



பார்க்க நேர்ந்தால், அவரைச் சுகமாயிருப்பவராகவே பாவிக்க வேண்டும். அவருக்கு நோய் இருப்பதாக ஒப்புக் கொள்ளக் கூடாது. (நீங்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் அவருக்கு நோய் இல்லாமற் போய்விடுமா என்று கேட்காதீர்கள்; கேட்டால் நீங்கள் கர்நாடகமாவீர்கள்.) அவரே தமது வியாதியைப் பற்றிக் குறிப்பிட்டால்கூட, "ரொம்ப நன்றாயிருக்கிறது. உங்களுக்கு வியாதியுமில்லை, ஒன்றுமில்லை. எல்லாம் நீங்களாக நினைத்துக் கொள்வதுதான்" என்று சொல்ல வேண்டும்.

நோயாளி படுத்த படுக்கையாயிருந்தால் அவருடைய நோயை ஒப்புக் கொள்ளாமல் சரிப்படாது. முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முடியுமா? இப்படிப்பட்ட 'கேஸ்'களில், நோயாளியிடம், "முன் தடவை பார்த்ததற்கு இப்பொழுது ரொம்பத் தேறியிருக்கிறீர்களே!" என்று சொல்லுதல் மரபு. அத்துடன், "இதென்ன பிரமாதம்? எங்கள் வீட்டுக் கோவிந்தசாமிக்கு இதே நோய்தான் வந்திருந்தது. இன்னும் ரொம்பக் கேவலமாயிருந்தான். இப்பொழுது சொஸ்தமாகிக் குண்டுபோல் இருக்கின்றான்" என்று சொல்லுதல் அழகு.


இந்த நவீன முறையில் ஒரே ஓர் ஆபத்து இருக்கிறது. அதாவது, நோயாளியும் நாகரிக மனிதராதலால், அவர் யார் சொல்வதையும் நம்புவதில்லை. உண்மையாகவே அவருடைய உடம்பு தேறிக் கொண்டு வந்தாலும், அதை யாராவது சொன்னால் அவருக்குச் சந்தேகம் பிறந்து விடுகிறது. 'நம் உடம்பு ரொம்பக் கேவலமாய்த்தான் இருக்க வேண்டும்; நமக்குத் தைரிய மூட்டுவதற்காக இப்படிச் சொல்கிறார்கள்' என்று அவர் எண்ணிக் கொள்கிறார்.

இந்த இனத்தைச் சேர்ந்தவர் அடுத்த வீட்டு ஜானகியம்மாள். அவர் கல்வியறிவு அதிகமுள்ளவராதலால், சாதாரண நோயாளிகளைப் போல் தம்மை யாரும் ஏமாற்ற முடியாதென்று நினைக்கிறார். தமக்கு உடம்பு அபிவிருத்தியடைந்து வருகிறதென்று அவர் நம்புவது கிடையாது. பிறர் சொன்னால் சந்தேகம் இன்னும் அதிகம். தமது உடம்பு நிலையைப்பற்றி அவர் புகார் சொல்லும்போதெல்லாம், அவருடைய தகப்பனாரும், "உனக்கு ஒன்றும் இல்லை. நினைப்புத்தான் உடம்பு சரியில்லையென்று நீயாக நினைத்துக் கொள்கிறாய்" என்று சொல்வது வழக்கம். ஜானகி தேவியின் பொருள் பொதிந்த புன்சிரிப்பு இதற்குப் பதில் சொல்லும்.

ஒரு சமயம் அவருடைய தந்தையார் எங்கேயோ ஊருக்குப் போய்விட்டு வந்தார். வந்தவுடன் புதல்வியைப் பார்த்து, "உனக்கு உடம்பு ரொம்ப நன்றாயிருக்கிறதே!" என்று சொன்னார். அதற்கு ஜானகியம்மாள், "என் உடம்பு பருத்திருக்கும் என்று நீங்கள் நினைத்துக் கொண்டே வந்திருக்கிறீர்கள்! அதனால் அப்படித் தோன்றுகிறது. உண்மையில் எனக்கு அதிக பலவீனமாயிருக்கிறது" என்றார். இவ்வாறு 'நினைப்பு'த் தத்துவத்தை அவர் தலைகீழாகத் திருப்பிவிட்டார். நவீன முறையிலுள்ள ஆபத்தைப் பாருங்கள்.

- 'நோயற்ற வாழ்வு' கட்டுரையிலிருந்து ...

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 9.5.2004


THE KING OF SWEETS
அறிமுகப்படுத்துகிறோம்
Butter Scotch
Per piece
50p
only
Parrys, the King of Sweets,
அறிமுகப்படுத்துகிறது
ஸ்மூத்தான, ரிச்சான க்ரீமி
பட்டர்ஸ்காட்ச் கேண்டி.
Visit us at www.parrysweets.com
Butter Scotch

(CCR) 572 / 03 - 05' Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 3587 / 03 - 05
Registered as a Newspaper in Srilanka